பக்கங்கள் - 28
விலை - 30ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 | கதிர் 286 | ஆவணி 25 ஆம் நாள் | புதன்கிழமை 11செப்ரெம்பர் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050

# ஐ.தே.கவின் இழுபறி முடிவின்றி நீள்கிறது

## நேற்றைய ரணில் - சஜித் சந்திப்பும் இறுதி முடிவின்றி நிறைவுற்றது

கொழும்பு, செப்ரெம்பர் 11

கொழும்பு அரசியலில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட தலைமை அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க வுக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான சந்திப்பு எந்த முடிவும் இல்லாது நேற்று நிறைவடைந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் யார் என்ற சர்ச்சை முடிவுக்கு வராது நீள்கின்றது.

25

## தூக்குத் தண்டனைக்கு வடக்கு மக்கள் ஆதரவு

யாழ்ப்பாணம், செப்.11

போதைப் பொருள் குற்றச்சாட்டுக்களில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுச்சிறைத்தண்டனை அனுபவித்து வருவோருக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தி வரும் நிலையில், தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதற்கு வடக்கு மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம்,முற்றவெளியில் நடைபெற்றுவரும் என்டர்பிரைஸ் சிறிலங்கா கண்காட்சியில் இது தொடர்பான கருத்துக் கணிப்பு ஒன்று நடத்தப்பட்டது.

அரச தலைவர் செயலக அலுவலகக் கூடத்தில்

25

## தேசிய ஒற்றுமையை உருவாக்க இன்னும் 5 ஆண்டுகள் தேவை

### தலைமை அமைச்சர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, செப்.11

நாட்டின் அடையாளத்தைப் பாதுகாத்துக் கொண்டு ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கு 5 ஆண்டுகள் போதாது. அடுத்து வரும் 5 ஆண்டுகளிலும் அதற்காகச் செயற்பட்டால் மட்டுமே தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முடியும்.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மொழிப் பயிற்றுவிப்பாளர்களைத் திசைமுகப்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரி

25

## எரிபொருளின் விலைகள் நேற்றுக் குறைப்பு

கொழும்பு, செப்.11

மாதாந்த எரிபொருள் விலைச் சூத்திரத்துக்கு அமைய எரிபொருள்களின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளன.

ஒக்டேன் 92 ரகப் பெற்றோலின் விலை ஒரு ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் விலை 137 ரூபாவாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒக்டேன் 95 ரகப் பெற்றோலின் விலை 2 ரூபா குறைக்கப்பட்டுள்ளது. அதன் விலை 161 ரூபாவாகத்

25

## விக்கிக்கு எதிரான வழக்கு நவம்பர்மாதம்ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப். 11

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் நீதிமன்ற அவமதிப்புத் தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் நவம்பர் 18, 20 மற்றும் 21ஆம் திகதிகளில் தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளது.

இந்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றில்நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவை நீதிமன்று பிறப்பித்தது.

வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் பா.டெனீஸ்வரனை அமைச்சரவையில் இருந்து நீக்கியமை செல்லுபடியற்றது என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்த நிலையிலும் டெனீஸ்வரனை அமைச்சராகத் தொடர அனுமதிக்காது நீதிமன்றக் கட்டளையை அவமதித்தார் என்று விக்னேஸ்வரன் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கை மேன்முறையீட்டு நீதிமன்று ஆராய்ந்த நிலையிலேயே தொடர் விசாரணைக்கு ஒத்திவைத்துள்ளது.

இந்த விடயத்தில் நீதிமன்றை அவமதிப்புச் செய்தார் என்று குற்றஞ்சாட்டப்படும்வடக்குமாகாண முன்னாள் முத

25

## பதவிக்காலம் தொடர்பில் உயர் நீதிமன்றை மீளவும் நாடினார் மைத்திரிபால!

யாழ்ப்பாணம், செப். 11

அரச தலைவரின் பதவிக் காலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் விளக்கத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மீண்டும் கோரியுள்ளார் என்று அறியமுடிகின்றது.

தனது பதவிக் காலத்தின் ஆரம்பம், 2015ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் திகதி ஆரம்பமாகின்றதா? அல்லது 19ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் அது நடைமுறைக்கு வந்த திகதியிலிருந்து ஆரம்பமாகின்றதா என்பது தொடர்பிலேயே விளக்கம் கோரியுள்ளதாக அறியமுடிகின்றது.

25

## ஐ.தே.முவின் 2ஆம் கட்ட ஆட்சி ரணில் தலைமையில் நடக்கும்

### அமைச்சர் மனோ நம்பிக்கை

கொழும்பு, செப்.11

ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான அரசு கடந்து வந்துள்ள நான்கரை வருடங்களும் எமது முதல்கட்ட ஆட்சியாகும். கூட்டணிக்கான பேச்சு முடிந்ததும், இந்த அரசின் இரண்டாம் கட்ட ஆட்சி தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் மீண்டும் ஆரம்பமாகும் என்று தெரிவித்துள்ளார் தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன்.

மொழிப் பயிற்றுவிப்பாளர்களைத் திசைமுகப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டம் நேற்றுத் தலைமை அமைச்சர்

25




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பர் மாத ராசிபலன்

## சிம்மம்




2019

செப்ரெம்பர் முதலில் சூரியன் ஆட்சி செவ்வாய். கூடவே புதன், சுக்கிரன் நான்கு ராசிகள் 4இல் குரு ஐந்தில் சனி கேது இருக்கின்றனர். உற்சாகம் சுறு சுறுப்பு கூடும். சிம்ம சூரியன் நினைத் ததை நிறைவேற்ற வைப்பார். திட்டங்க ளைச் செயற்படுத்த வைப்பார். சுக்கிரன் காரியங்களை செயற்படுத்துவார். புதன் அறிவை விரிவுபடுத்துவார். திருமணப் பேச்சு சூரியன் சொந்த வீட்டில் 17 நாள்கள் ஆட்சி பெற்று அமர்வது அற்புதம். ராசி அதிபதி உடன் மூன்று முக்கிய கிரகங்கள் கூட்டணி அமைந்திருப்பதால் உடல் ஆரோக்கியத்தில் நல்ல நிலை ஏற்படும். காரணம் ஆரோக்கிய அதிபதி செவ்வாய் பலமான நிலையில் இருக்கிறார். செவ்வாய் தைரியத்தை தருவார். பூமி காரி யங்களை வெற்றி பெற வைப்பார். திருமண பேச்சு வார்த்தை சுபமாக முடியும்.

வருமானம் அதிகரிக்கும். கடன்கள் கிடைக் கும். கொடுக்கல் வாங்கலில் சுபமாக இருக்கும். 17ஆம் திகதி சூரியன் 2 ஆம் வீட்டுக்கு நகர்கிறார். பொருளா தார ரீதியான வளர்ச்சிக்கு அதிகரிக் கும். சுறுசுறுப்பு கூடும். 25ஆம் திகதி செவ்வாயும் இரண்டாம் வீட்டுக்கு நகர் கிறார். நான்கு கிரகங்கள் இரண்டாம் வீட்டில் கூட்டணி அமைப்பது சூப்பர். உற் சாகமான மாதம். வெற்றிகரமான மாதம். நான்காம் வீட்டில் இருக்கும் குரு திருமண பேச்சுக் கள் சுபமாக முடியும். மாணவர்களுக்கு உற்சாகமான மாதம், படித்தவை நினைவில் தங்கும், நன்றாக தேர்வு



### நினைத்ததை செய்யக்கூடிய ஆற்றல் தரும் மாதம்

எழுதுவீர்கள். படிப்பில் சுறுசுறுப்பாக இருப்பீர் கள். இந்த மாதம் நினைத்ததை செய்யக்கூடிய ஆற்றலைத் தரும் மாதம்.

மதிப்பு, மரியாதை கூடும். விருச்சிகத்தில் இருக் கும் குருவை சிம்மத்தில் இருக்கும் செவ்வாய் பார்க்கிறார். வீடு கட்டுவது, சொத்து வாங்கு வது எனப் பல அற்புத பலன்களை தரு வார். 11இல் இலாப ஸ்தானத்தில் இருக் கும் ராகு வருமானத்தை பெருக்கு வார். கேது பகவான் ஐந்தாம் வீட்டில் கேது வீட்டில் இருப்பதால். சுக்கிர னால் சாதகமில்லை என்றாலும் சூரியன், புதன் செவ்வாயால் மாத இறுதியில் வருமானம் பெருகும். பொருளாதார மேம்பாடு கிடைக்கும். உங்களின் பலம் அதிகரிக்கும். அதே நேரத்தில் உங்களின் கையிருப்பு கரையும். லாபங்கள் குறையும். செல்வாக்கு மட்டுமல்ல சொல்வாக்கும் அதிகரிக்கும்.

## 12 ராசிக்காரர்களும் விநாயகரை வழிபடும் முறை



ஜோதிட சாஸ்திரத்தில் ராகு,கேது ஆகிய கிர கங்கள்தான் மனித வாழ்வைத் தீர்மா னிக்கும் சக்திகளாகத் திகழ்கின்றன. இவற்றால் பாதிக்கப்படுபவர்கள் முதலில் வணங்க வேண்டிய தெய்வம் விநாயகர்தான். 12 ராசிக்காரர்களும் விநா யகரை எப்படி வணங்க வேண்டும் என்பது பற்றிப் பார்ப்போம்.

**கடகம்**

கடக ராசிக்காரர்களுக்கு திருக்கணிதப்படி நடை பெறும் சனிப்பெயர்ச்சியின் மூலமாக 2020ஆம் ஆண்டு நல்ல பலன்கள் பல உங்களை நோக்கி வர இருக்கின்றன. அதேவேளையில் ராகு கேது பெயர்ச் சியால் உங்களுக்கு மறைமுகத் தொல்லைகள், பணியிடத்தில் இறுக்கமான சூழல் ஆகியவையும் ஏற்படும். இவற்றைத் தடுக்க நீங்கள் பணிபுரியும் மேசையில் சிறிய அளவிலான விநாயகர் சிலையை வைத்து நீங்கள் மனதாரப் பூஜித்து வந்தால் அனைத்துத் தடைகளும் நீங்கி வெற்றி கிடைக்கும்.

**சிம்மம்**

சிம்ம ராசிக்காரர்களுக்கு பஞ்சமம் எனச் சொல்லக் கூடிய 5ஆம் வீட்டில் சிறப்பான கிரக அமைப்பு நிலவு வதால் தடைப்பட்ட திருமணங்கள் சுபமாக நடந்தே றும். குழந்தைப் பாக்கியம் இல்லாத சிலருக்கு குழந் தைப் பாக்கியம் கிடைக்கும். இவையெல்லாம் சீரும் சிறப்பாக நடைபெற 9 ஞாயிற்றுக்கிழமை விநாயகர் கோயிலுக்குச் சென்று வழிபட வேண்டும். ஒன்பது ஞாயிற்றுக்கிழமைகளில் ஒன்பது தேங்காய்கள் உடைத்தால், விரைவில் நல்ல பலன்கள் கிடைக் கும்.

**கன்னி**

கன்னி ராசிக்காரர்களுக்கு சதுர்ஸ்தானம் எனக் கூடிய 4ஆம் வீட்டில் இருக்கும் கிரகங்களின் மாறு தல்கள், உங்கள் வாழ்க்கையில் நல்ல பல மாற்றங் களைக்கொண்டுவர இருக்கிறது. பொதுவாகவே சதுர்ஸ்தானம் விநாயகருக்கு மிகவும் இஷ்டமான இடமாகும். வளர்பிறையில் வரும் சதுர்த்தி நாளில் விநாயகரை நான்கு சதுர்த்தி வழிபட்டு வந்தால், சகல ஐஸ்வர்யங்களையும் பெறுவீர்கள்.

(தொடரும்)



## இன்றைய நாள்

**மேடம்:** உங்கள் செயல்களின் அன்பின் குணம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரம் செழிக்க தேவையான மாற்றம் பின்பற்றுவீர்கள். நிலுவைப் பணம் வசூலாகும். தாயின் தேவை யறிந்து பூர்த்தி செய்வீர்கள்.

**இடபம்:** அறிமுகம் இல்லாதவரிடம் சொந்த பிரச்சினை பேச வேண்டாம். கூடுதல் முயற்சியினால் தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். அதிக பயன் தராத பொருள் விலைக்கு வாங்க வேண்டாம்.

**மிதுனம்:** செயலில் தடுமாற்றம் ஏற்படலாம். நிதானமும், அக்கறையும் பின்பற்றுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். உறவினர் வகையில் அதிக பணம் செலவு செய்ய நேரிடலாம்.

**கடகம்:** திட்டமிட்ட செயலை நிறை வேற்றுவீர்கள். குடும்ப உறுப்பினர்கள் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் இருந்த சிரமம் விலகும். பணவரவில் முன்னேற்றம் உண்டு. பணியாளர்க ளுக்கு சலுகை கிடைக்கும்.

**சிம்மம்:** சிறு செயலும் பல மடங்கு நன்மை தரும். தொழில், வியாபாரம் செழிக்க அக்கறையுடன் பணிபுரிவீர்கள். உடன் பிறந்தவர்களுக்கு உதவி செய்வீர் கள்.

**கன்னி:** சொந்த தேவைகளை நிறை வேற்றுவதில் ஆர்வம் வளரும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச்சுமை உருவாகும். எதிர்பார்த்த பணவரவு வந்து சேரும். பணியாளர்கள் பாதுகாப்பு நடைமுறை தவறாமல் பின்பற்றவும்.

**துலாம்:** திட்டமிட்டபணி நிறைவேற கூடுதல் முயற்சி தேவைப்படும். நண்பரின் ஆலோசனை நன்மை தரும். தொழில் வியாபாரத்தில் அள வான மூலதனம் போதுமானதாகும்.

**விருச்சிகம்:** பெரியவர்களின் சொல்லுக்கு மரியாதை தருவீர்கள். உங்கள் மீதான நன்மதிப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் நிலுவை பணியை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** சிலர் உதவுவது போல பாசாங்கு செய்வர். உழைப்பில் அதிக நம்பிக்கை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள தாமதம் படிப்படியாக சீராகும். பணவரவை விட செலவு அதிகரிக்கும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.

**மகரம்:** சமயோசிதமாக செயற்படு வீர்கள். நல்லவிஷயங்களைபேசுவதில் ஆர்வம் வளரும். தொழில், வியாபா ரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உரு வாகும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**கும்பம்:** சிலரது செயல் மனதில் அதிருப்தியை உருவாக்கலாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கூடுதல் மூலதனம் தேவைப்படும். அவசியமற்ற வகையிலான பணச்செலவு தவிர்ப்பீர்கள்.

**மீனம்:** நன்றி மறந்தவரை பெருந்தன்மை குணத்துடன் மன்னிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி ஏற்படும். ஆதாய பணவரவில் சேமிப்பு அதிக ரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BRITISH
DEGREE

ENTRY QUALIFICATION

- HIGHER NATIONAL DIPLOMA IN BUSINESS MANAGEMENT
- ADVANCED DIPLOMA FROM A RECOGNISED INSTITUTE
- PARTIAL PROFESSIONAL QUALIFICATIONS IN (CIMA, ACCA, CMA, ICASL, IBSL, AAT) WITH SIGNIFICANT WORK EXPERIENCE
- POSTGRADUATE DIPLOMA
- ANY OTHER EQUIVALENT QUALIFICATION

TOP-UP
YOUR QUALIFICATION
TO A BRITISH HONOURS DEGREE
IN ONE YEAR

BA (HONS) IN
BUSINESS MANAGEMENT

AWARDED BY
LONDON METROPOLITAN UNIVERSITY



ENTRY QUALIFICATION

- PEARSON HND IN COMPUTING / IS / IT / SE
- BCS DIPLOMA LEVEL
- BIT 2ND YEAR (HDIT)
- HIGHER DIPLOMA / ADVANCED DIPLOMA IN THE RELEVANT FIELD FROM A RECOGNISED INSTITUTE / UNIVERSITY
- ANY OTHER EQUIVALENT QUALIFICATION

TOP-UP
YOUR QUALIFICATION
TO A BRITISH HONOURS DEGREE
IN ONE YEAR

BEng (HONS) IN
SOFTWARE ENGINEERING

AWARDED BY
LONDON METROPOLITAN UNIVERSITY

UGC RECOGNISED

APPLY FOR SEPTEMBER INTAKE

CLASS MODE
SUNDAY ONLY

Further Details 0776974761

ESOFT
Shaping Lives, Creating Futures.

ESOFT METRO CAMPUS
No. 137, K.K.S Road, Jaffna | Hotline : 021-7 572 572

www.esoft.lk
SRI LANKA'S LARGEST PRIVATE SECTOR HIGHER EDUCATION NETWORK

Study In Canada/US and Beyond...



Follow ABEA 3 months Foundation Diploma program in Sri Lanka and further your studies in one of our panel of Universities and Colleges in Canada or US.

On completion of Diploma/Degree in Canada and US, students will have further options for work permit and beyond.

You can follow courses such as: Diploma in Business Management / Advanced Diploma in Tourism & Hospitality Management / Bachelor's Degree in Business Management / Bachelor's Degree in Computing / MBA.....

எதிர்வரும் 15.09.2019 ஞாயிற்றுக்கிழமை Valampuri Hotel இல் ABEA, UK நிறுவனத்தின் COUNTRY MANAGER திரு.செல்வரட்ணம் நிமால் அவர்கள் பின்வரும் நேரங்களில் நேரில் சந்திக்கவுள்ளார். இவரை சந்திக்கவுள்ளோர் 077 377 1222 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு குறித்த நேரங்களில் ஒன்றை முற்பதிவு செய்துகொள்ளவும்.

2019.09.15 மு.ப.10.00 மணி அல்லது
பி.ப 1.00 மணி

(மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை அன்புடன் அழைக்கின்றோம்)

ABEA
Association of British Education Awards

s.nimal@abea.org.uk 0773 771 222 www.abea.org.uk

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

Sampath
DOUBLE S
சேமிப்புக் கணக்கு

இப்பொழுது 100% வரை
போனஸ்
வட்டி



இப்பொழுது சம்பத் டபள் S போனஸ் கணக்கின் சேமிப்புகளுக்கு, ஒவ்வொரு மாதமும் வட்டிக்கு மேலதிகமான 100% வரை போனஸ் வட்டி.

மேலும் பல அனுகூலங்கள்!

- ஒன்லைன் வங்கிச்சேவை வசதி மற்றும் கணக்கில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் குறித்த உடனடி SMS Alerts.
- Cardless Cash சேவை மூலம் பணம் மீளப்பெறல்.
- ATM கொடுக்கல் வாங்கல் மற்றும் கணக்கை ஆரம்பிக்கும்போதே ஏனைய கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளக்கூடிய சர்வதேச மாஸ்டர் கார்ட்/வீசா டெபிட் அட்டை.
- நாடு முழுவதும் பரந்திருக்கும், 365 நாட்களும் இயங்கும் சூப்பர் கிளைகள் உட்பட 229 கிளைகள்.


இன்றே சம்பத் டபள் S கணக்கொன்றினை ஆரம்பித்து 100% போனஸ் வட்டியை பெறுங்கள்!

Sampath Bank Fitch Ratings A+(lka)


DentsuGrant

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டுவோம்



# வழிகாட்டுவோம்



# கவனத்துடன் செயற்படவேண்டும்

ஒரு நாள் ஒருவன் அவன் வீட்டுப் பரணைச் சுத்தம் செய்து கொண்டிருந்தான். அப்போது அதுவரை அவன் கவனித்திராத ஒரு புத்தகத்தைக் கண்டெடுத்தான்.

அது ஒரு மிகப் பழைய புத்தகம். பக்கங்கள் மஞ்சள் படிந்து மடித்துப் போயிருந்தன. பக்கங்களைத் திருப்புகையில் மிகக் கவனம் தேவையிருந்தது. இல்லாவிட்டால் பக்கங்கள் உதிரத் தொடங்கின.

அவன் அந்தப் புத்தகம் மந்திர மாயங்களைப் பற்றியது என்று அறிந்து கொண்டான். எத்தனையோ முறை படிக்க முயன்றும் அவன் ஒரே ஒரு பத்தியில் உள்ள கருத்தை மட்டும் தெரிந்துகொள்ள முடிந்தது. மற்றவை அவனுக்குப் புரியவில்லை.

அந்தப் பத்தியில் கருங்கடற் கரையில் கிடக்கும் மாய சக்தி மிக்க ஒரு கறுப்புக் கூழாங்கல்லைப் பற்றிச் சொல்லப்பட்டிருந்தது. அந்தக் கல்லால் எதைத் தொட்டாலும் அதைத் தங்கமாக மாற்றி விடுமாம். அந்தக் கல்லை எப்படிக் கண்டு கொள்வது என்றும் அந்தப் புத்தகத்தில் சொல்லப்பட்டிருந்தது. தொட்டுப் பார்த்தால் மற்ற கற்கள் எல்லாம் பனிக் கட்டி போல் குளிராய் இருக்க, அந்தக் கல் மட்டும் வெதுவெதுப்பாய் இருக்குமாம்.

இதைத் தெரிந்து கொண்ட அவனுக்கு இருப்புக்கொள்ளவில்லை. கருங்கடல் கரை நோக்கி உடனே புறப்பட்டான்.

அங்கு தினமும் காலையிலிருந்து மாலை வரை அவன் ஒவ்வொரு கல்லாய் தொட்டுப் பார்த்துத் தேடத் துவங்கினான். கடற்கரையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை கருங்கூழாங்கற்கள் கிடந்தன. அவனுக்கு ஒரு முறை சோதித்த கல்லை மறுபடி மறுபடி சோதிக்காமல் இருக்க வேண்டுமே என்ற கவலை வந்து விட்டது. சோதித்த கல்லைக் கடலுக்குள் உடனே எறிந்து விட்டால் குழப்பம் வராது என்று யோசித்து, அதன்படியே ஒவ்வொன்றாகக் கற்களைக் கடலுக்குள் எறிந்தான்.




பல மாதங்களும் வருடங்களும் கடந்து போயின. கல்லும் கிடைக்கவில்லை, அவனும் விடுவதாய் இல்லை. கற்களைத் தொட்டுப் பார்த்து கடலுக்குள் எறியும் பணி அவனுக்கு தன்னை அறியாமல் செய்வது போல் ஆகி விட்டது.

ஒருநாள் மாலை, மிகுந்த தேடலுக்குப் பிறகு களைத்துப் போய் கடற்கரையை விட்டுச் செல்லும்போது ஒரு கறுப்புக் கூழாங்கல் அவன் கண்ணில்பட்டது. அதைக் கையில் எடுத்தான். அது வெதுவெதுப்பாய் இருந்தது. ஆனால், பல வருடப் பழக்கத்தால், எப்பொழுதும்போல் அதையும் யோசிக்குமுன் கடலில் தூர எறிந்து விட்டான்.

செய்யும் செயல்களில் எப்பொழுதும் கருத்தும் கவனமும் தேவை. பழக்கங்களுக்கு அடிமை யாவதைத் தவிர்க்க வேண்டும்.

# மரண அறிவித்தல்



## ஞானப்பிரகாசம் ஜெயசிங்கம்

**(முன்னாள் பாதுகாப்பு ஊழியர் U.N.H.C.R)**

ஒட்டகப்புலத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் ஜெயசிங்கம் நேற்று (10.09.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பேதுறுப்பிள்ளை ஞானப்பிரகாசம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு புதல்வனும் காலஞ்சென்ற நீக்கிலாப்பிள்ளை சவிரிமுத்து முத்தம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் அமிர்தநாயகி (பொன்மணி) அவர்களின் அன்புக்கணவரும் யூட்கில்பேட் (லண்டன்), திருமதி யூடின்பொணேஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் திரு.பாலசிங்கம் (இளைப்பாறிய பலாலி ஆசிரிய கலாசாலை ஊழியர்), காலஞ்சென்ற தனசிங்கம், திரு. குணசிங்கம் (கனடா), திரு. ராஜசிங்கம் (ஜேர்மன்- முன்னாள் ஆசிரியர் இந்துக்கல்லூரி - மானிப்பாய்), திருமதி யோகமலர் (பிள்ளை), ஆகியோரின் அன்புச்சகோதரனும் திருமதி யூட்தர்சினி (லண்டன்), திரு. பொனேஷ் (Vision- Fund) ஆகியோரின் மாமனாரும் ஸ்ரெபானி, ஸ்ரெபான், ஆகியோரின் அன்புப் பேரனும் மேரி ஞானமணி, பிலோ மினா, சித்திரா, பத்திமா, ஜெயராஜசிங்கம் (அருள்), திருமதி ராசமணி, செல்வ நாதன் ஆகியோரின் பிரிய மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (12.09.2019) வியாழக்கிழமை பி.ப 3.30 மணியளவில் யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.06 அச்சகவீதி, யாழ்ப்பாணம்.** **தகவல் : குடும்பத்தினர்**


தொ.பே.இல - 021 222 1115, யூட் - 044 7951075990 (UK)



*பிக்பாஸ் நிகழ்ச்சியில் மலேசியாவைச் சேர்ந்த முகேன் ராவை காதலிப்பதாக அபிராமி வெங்கடாச்சலம் கூறிவந் தார். ஆனால் அதை முகேன் ஏற்றுக்கொள்ளவில்லை. அதன்பிறகு அபிராமி வெளியேற்றப்பட்டார். இந்த நிலையில் அபிராமி முகேனின் அம்மாவைச்சந்தித்துப்பேசியுள்ளார். அப்போது எடுத்த ஒளிப்படத்தையும்அவர்சமூகவலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார். அந்த ஒளிப்படம்தற்போதுவைரலாகி வருகிறது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு 02 . 09 . 1960

இறப்பு 09 . 09 . 2019

### துரைச்சாமி மாணிக்கவாசகர்

ஆனைக்கோட்டை வடக்கைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியா சிட்னியை வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி மாணிக்கவாசகர் 09.09.2019 திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் கொக்குவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற மகாதேவா மற்றும் மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் புஸ்பகலாவின் அன்புக் கணவரும் துஷனின் அன்புத்தந்தையும் ஞானசம்பந்தனின் அன்புச் சகோதரனும் சுலோஜனா, புஸ்பலதா, புஸ்பராணி, மாலா, சரஸ்வதி, சிவதீபன், வதனி, ரஜனி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜனார்த்தன், ஜனகன், துளசி, சோபனா ஆகியோரின் அருமைச் சித்தப்பாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.09.2019) வியாழக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் Rockwood Cemetery South Chappell இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : உறவினர்.

(CS 27933) (14)

தொடர்பு - + 614 220 96291



பிறப்பு 19 . 01 . 1955

இறப்பு 07 . 09 . 2019

### அம்பலவாணர் யோகேஸ்வரன்

யாழ்ப்பாணம் கோப்பாய் வடக்கு, நாதம்புவை பிறப்பிடமாகவும் புத்தூர் மேற்கு சிவன் கோயில் வீதியினை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் யோகேஸ்வரன் 07.09.2019 இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - நாகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், சிவதேவியின் (ஓய்வு நிலை ஆசிரியை - புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி) பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான கணேசலிங்கம், சத்தியஞானதேவி மற்றும் குஷலகுமாரி (கிளிநொச்சி), காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரன், நகுலேஸ்வரன் மற்றும் கலாநிதி (கிளிநொச்சி), பத்மநாதன் (ஜேர்மன), உதயகுமார் (அளவெட்டி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற சிவநாதன், மற்றும் பத்மநாதன் (டென்மார்க்), ஈஸ்வரி (கொழும்பு), காலஞ்சென்ற யோகநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2019) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தனக்கிரியைக்காக கிந்துசிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோபி - 077 133 2038
ஈஸ்வரி - 077 182 3452

தகவல்: குடும்பத்தினர்.

(cs 27965) (13.17)

## மரண அறிவித்தல்கள்

### அன்னபாக்கியம் சற்குணநாதன்



பாரதி வீதி அச்சுவேலியை பிறப்பிடமாகவும் யாழ் நல்லூர் பருத்தித்துறை வீதி 370/3ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னபாக்கியம் சற்குணநாதன் (06.09.2019) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் மு.சற்குணநாதன் (ஓய்வு பெற்ற Mechanical Fitter, மத்திய மின்சார நிலையம் சுன்னாகம்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கந்தர் செல்லம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி முத்துவேலு அன்னம்மாவின் நேசமிகு மருமகளும் காலஞ்சென்ற வர்களான அழகர், மணியம், வைத்திலிங்கம், துரைசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரி யும் காலஞ்சென்றவர்களான சின்னராசு, நவ ரத்தினம் (ராசு) மற்றும் ஜேர்மன் வாழ் சற்குணவதி, திருஞான சம்பந்தர் ஆகியோரின் அன்பு அண்ணியும் மதி, விஜி, கலா, சுதா, அருந்தா, நந்தினி, சுகந்தினி ஆகியோரின் அன்புத்தாயாரும் கௌரி, தயா, மயில்வாகனம், சிவசேகரம், கஜி, சுரேன், தனா ஆகியோரின் மாமியும் கவிராஜா, சாரங்கா, சாருயன், சாதுரியன், இலக்கியா, சுஜிக்கா, ஆர்த்திகா, அதிசயா, ஆகாஷ், ஆதிசன், சாத்வீகா, சுவாதிகா, கபிநாஸ், கீர்த்தனா, சுருதிகா, அபிநாஸ், யாதவன், சஞ்சனா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2019) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

CS24027(16/17)

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்திற்கு அருகாமை.

தகவல்: குடும்பத்தினர்

தொடர்பு:- 021 222 5739/ 077 916 3048/ 076 001 3804
மின் அஞ்சல்:- m-s-mathi2006@yahoo.co.uk



தோற்றம் . 26 . 10 . 1930

மறைவு . 09 . 09 . 2019

### அருணாசலம் வள்ளியம்மை

காரைநகர் இடைப்பிட்டியை பிறப்பிடமாகவும் இல.134/27, பிரதான வீதி, கூமாங்குளம் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அருணாசலம் வள்ளியம்மை (09.09.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தண்டிகை கணபதிபிள்ளை சிதம்பரம் தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அருணாசலத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி, சண்முகம், பொன்னம்மா, சிவகாமன், இராசம்மா, பொன்னம்பலம், பேரம்பலம், விசாலாட்சி ஆகியோரின் அன்பு சகோதரியும் பொன்னம்மா, கந்தையா, நல்லதம்பி, சுப்ரமணியம், சங்கரப்பிள்ளை, நல்லம்மா, செல்லையா ஆகியோரின் மைத்துனியும் தனபாக்கியம், யோகேஸ்வரன், சேனாதிராசன், வரதராசன், சந்திராதேவி, தவராசன், சீதாலட்சுமி, லிங்கேஸ்வரன், தனலட்சுமி ஆகியோரின் அன்பு தாயாரும் நாகேந்திரம், சுந்தராம்பாள், சற்குணமலர், பராசக்தி, சுந்தரலிங்கம், விமலாதேவி, ஜெயபாலசிங்கம், தர்சினி, கிருஸ்ணமூர்த்தி ஆகியோரின் மாமியும் சுவேதினி, வாகீசன், நிரோஜினி, ஹரிவல்லவன், அகிலன், வகீரதன், கஜமுகன், ஜெயகரன், கோகிலப்பிரியா, தவப்பிரியா, தர்சனா, கார்த்திகா, யமுனா, தயாநிதி, செந்தூரன், டிலானி, டினோஜன், டயானந்தன், நிருதன், சிவரூபினி, கோசிலா, நிசாந்தன், நிதாஞ்சலி, ஷாரங்கி, ராகுலன், கோகிலன், அபிராமி, பிரபாகரன், பாலரஞ்சன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் யாகவியின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.09.2019) வியாழக்கிழமை காலை 8மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கூமாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

CS27969(16/17)

இல. 134/27, பிரதான வீதி,
கூமாங்குளம், வவுனியா
077 880 8599

தகவல் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகிறோம்



கந்தரோடை
அருளானந்தப் பிள்ளையார்
கோயிலடியைச் சேர்ந்த
சிவசிறி.ப.ஜெயகுமாரக்குருக்கள்
உஷாதேவி தம்பதியரின்
செல்வப் புதல்வி

## ஜெ.ஐஸ்வர்யா

அவர்கள் 11.09.2019
அன்று கொழும்பு (BMICH)
பண்டார நாயக்க சர்வதேச
மாநாட்டு மண்டபத்தில்
BSc in Public Management
(Special)
விஞ்ஞான இளமாணி பட்டம்
பொது முகாமைத்துவம் (சிறப்பு)
(ஸ்ரீஜயவர்த்தனபுர
பல்கலைக்கழகம்)
சிறப்புப் பட்டம்
பெறுவதையிட்டு மனமார
பாராட்டி வாழ்த்துகிறோம்.

சிவசிறி ப.ஜெயகுமாரக்குருக்கள்
உஷாதேவி (பெற்றோர்)

(CS/27954)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
21 . 12 . 1948



மறைவு
12 . 08 . 2019

## அமரர் மாணிக்கம் தில்லைப்பதி

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு எமக்குப் பல்வேறு வழிகளிலும் உதவியும் ஆறுதலும் அளித்த அனைவருக்கும் நேரிலும், தொலைபேசியிலும் அனுதாபத்தைத் தெரிவித்ததுடன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்தவர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (11.09.2019) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

இல.121/36, சோலைபுரம்,
கொட்டடி.

என்றும் நினைவுகளோடு
குடும்பத்தினர்
077 061 7187

(CS/27966)(11.17)

---

## சாரதி தேவை

லொறி ஓடக்கூடிய வாகன ஓட்டுநர் தேவை.

தொடர்பு:- 075 991 0060

CS27946(16/17)

---

## ES Printers

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471, 021 492 7472

---

# மாபெரும் திறப்பு விழா




Cordially request your kind presence at the Grand Opening of

## HIKVISION®
## JAFFNA SHOWROOM
NORTHERN DEALER

**Wednesday 11th Sep. 2019**
10.00am to 11.30 am

Chief Guest
**Dave Wang**
Overseas Product Support Engineer,
Hikvision Digital Technology Co., Ltd., China

68, Stanley Road, Jaffna.
Tel: 021 222 2676 Hotline: 076 22 77 77 5

---

Consultants
Assignment (part time) basis
## INDUSTRIAL SERVICES BUREAU (ISB)
NORTH WESTERN PROVINCE
**Opportunity to work with Multi Disciplinary organization**

**POSITION I : AGRICULTURAL CONSULTANTS**
**Duration of the Assignment: 12 Weeks (Starting from September 2019)**

Required qualifications and experiences : Minimum of B.Sc or B.A in Agriculture/ Environment/ Engineering/Economics / Business Administration/Sociology with more than 15 years of experience in working in the government sector / NGO sector in agricultural and irrigation projects is a must. Out of which, more than 5 years of experience in drought resilience and climate smart agriculture including flood caused disasters and conducting PRAs .

**POSITION II : AGRICULTURE FIELD RESEARCH ASSISTANTS**
**Duration of the Assignment: 12 Weeks (Starting from 12th September 2019)**

Required qualifications and experiences : Holding a B.Sc. or BA Degree or Diploma in Agriculture/ Environment/ Engineering/Economics / Business Administration Sociology and should be able to work in Northern Province (all five districts) , Sri Lanka with the fluency in Tamil Languages (knowledge of Sinhala is an asset). No prior experience required .

**APPLICATION PROCESS FOR THE ABOVE TWO POSITIONS:**

Detailed job description for this positions could be obtained by sending a request to: info@isb.lk

Citizens from all over Sri Lanka and any ethnicity can apply for this position. Industrial Services Bureau will keep the qualified candidates in the database and will contact for any other related assignments in the future.

**Canvassing in any form will be a disqualification.**

Executive Director
Industrial Services Bureau, 141, Kandy Road, Kurunegala
Tel : 037-2223721-3, Fax : 037-2223562, E-mail : info@isb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்கள்



தோற்றம்
14 . 09 . 1950

மறைவு
10 . 09 . 2019

### ஏகாம்பரம் கந்தசாமி (கருணா)

கரம்பன் கிழக்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் மாலுசந்தி, அல்வாய் தெற்கு, அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஏகாம்பரம் கந்தசாமி (கருணா) (10.09.2019) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான ஏகாம்பரம் - சரஸ்வதி தம்பதி யினரின் மகனும் காலஞ்சென்ற ஆசைப்பிள்ளை றோசம்மா - தம்பதிகளின் மருமகனும் சந்திராவின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான பாலையா, யோகேஸ்வரி, பிரபாகரன், விஸ்வதமூர்த்தி மற்றும் நாகபூசணி அம்மா, சிவபாலன், ஜெயலட்சுமி, பேரின்பநாயகி, பேரானந்தசிவம், ரமணி அம்மா ஆகியோரின் சகோதரனும் பிரதீப், இதயரூபன், ரம்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும் இந்திரகுமார், சிந்துஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் திரு.திருமதி மகேந்திரம் இராஜலக்சுமி, திரு.திருமதி ஆனந்தவடிவேல் சறோஜினிதேவி ஆகியோரின் சம்மந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2019) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆலங்கட்டை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

மாலுசந்தி, அல்வாய் தெற்கு,
அல்வாய்

தகவல்: குடும்பத்தினர்
077 869 2178



### சிற்றம்பலம் ஆறுமுகம்

கோப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் ஆறுமுகம் கடந்த (06.09.2019) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம், செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும் தவமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, சின்னத்தம்பி, கந்தையா, இளையதம்பி, சிவநாயகி மற்றும் சந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் இரஞ்சிதமலர், பாலசுந்தரம், சிவஞானசுந்தரம், சண்முகநாதன், விஜயகுமாரி ஆகியோரின் மைத்துனரும் சுபாஜினி, காலஞ்சென்ற சுபாஸ்கரன் மற்றும் அருளானந்தன் (கணேஷ் - லண்டன்), கவிதா, சிவரமணன் (கனடா), சுரேந்தினி ஆகியோரின் அன்புத்தந்தையும் பத்மநாதன், சந்திரிகா (சாரு-லண்டன்), ஆரணன், கௌரி (கனடா), ஜெயராசலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ராம்சங்கர், சாங்கவி, சகிதா, வேணுகானன், யனுசன், சஷ்வின், ஆதீஸ்,ஆருசன், நிதுஷா, வருண், அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.09.2019) வியாழக்கிழமை மு.ப 10.00 மணிக்கு கோப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று கோப்பாய் கந்தன்காடு இந்துமயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

## தெரிந்துகொள்வோம்

- ஆண் சிங்கம் சாப்பிட்ட பின்னரே பெண் சிங்கம் சாப்பிடும்.
- உலகப் புகழ் பெற்ற 'மோனோலிசா' ஓவியம் இடது கையால் வரையப்பட்டது.
- வாத்து அதிகாலையில் மட்டுமே முட்டையிடும்.
- எப்போதும் காற்று வீசும் திசையிலேயே தலை வைத்துப் படுக்கும் மிருகம் நாய்.
- உலகில் கடற்கரை இல்லாத நாடுகள் 26 உள்ளன.
- தேசியக் கொடியை முதன் முதலில் உருவாக்கிய நாடு டென்மார்க். 1291இல் உருவாக்கப்பட்டது.
- அமெரிக்காவைவிட சகாரா பாலைவனம் பெரிது.
- எறும்புகள் உணவு இல்லாமல் 100 நாள்கள் உயிர் வாழும்.
- ஒரு பென்சிலைக் கொண்டு, 58 கி.மீ. நீளமான கோடு போடலாம்.
- பாம்புகளுக்கு கேட்கும் சக்தி இடையாது.
- நண்டுக்கு தலை கிடையாது. அதன் பற்கள் வயிற்றில் இருக்கும்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### இளையவி கந்தசாமி

அப்பா நீங்கள் உயிரோடு இருந்த
வரை இழப்பு எதுவுமில்லை
நீங்கள் இல்லை என்ற
பின் நாங்கள் இழப்பதற்கு
எதுவுமில்லை.

மண்ணில்
11 - 04 - 1937

விண்ணில்
24 - 08 - 2018


சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.

(CS/24026)

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சண்முகம் ஜெயயோகன்



ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மற்றும் மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் ஜெயயோகன் கடந்த (09.09.2019) திங்கட்கிழமை இரவு 11.30 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் அன்னபூரணம் தம்பதிகளின் தலைமகனும் கோசலாம்பாள், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் நளாயினி, ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற செல்வராசாவின் மைத்துனரும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் வள்ளியம்மை தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற வினோதினியின் அன்புக்கணவரும் பிரசாத், பிரதீப் (மலேசியா), பிரகாஷ் (கமறோன்), அருந்தா (கனடா), வைகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கஸ்தூரி மற்றும் கிருஷ்ணகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2019) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11.00 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை கிழக்கு,
மீசாலை

தகவல்:
குடும்பத்தினர்

### அப்புக்குட்டி சிதம்பரப்பிள்ளை



பிறப்பு
01.03.1941

இறப்பு
10.09.2019

மந்துவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி சிதம்பரப்பிள்ளை நேற்று (10.09.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அப்புக்குட்டி சேதுப்பிள்ளையின் அன்பு மகனும் மயில்வாகனம் பொன்னம்மாவின் மருமகனும் காலஞ்சென்ற கதிரவேல், செல்லம்மா ஆகியோரின் அன்புச்சகோதரனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் ரவிதரன், றாகினி (ஆசிரியர் - மட்டுவில் மகாவித்தியாலயம்), ஸ்ரீதரன் (இ.போ.ச சாரதி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தவமலர், உதயகுமாரன் (தேவன்), சுமித்திரா (லதா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நிசாந்தினி, ஜெயந்தினி, காந்தரூபன், பிரபாகரன், அனுசா, கம்சியா, கனிஷா, கிருஷிகா, கிருஷாந், சரண்யா, சஞ்சித் ஆகியோரின் அன்புப் பேரனும் சஜந்தன், சரணி, சயந்தா, அசிந், லோயன் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2019) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 1 மணியளவில் இலுவன் இந்துமயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றக்கொள்ளவும்.

மந்துவில் கிழக்கு,
கொடிகாமம்

தகவல் : குடும்பத்தினர்
077 325 3803

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகிறோம்




புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளராக கடமையாற்றிய

**திரு. மருதலிங்கம் பிரதீபன்**

அவர்கள் முல்லைத்தீவின் மேலதிக அரசாங்க அதிபராக (மேலதிக மாவட்டச் செயலாளராக) தனது கடமைகளை 09.09.2019 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். அவருக்கு உத்தியோகத்தர்கள் சார்பாக வாழ்த்துக்கள்.

வாழ்த்துவோர்
புதுக்குடியிருப்பு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்

## யாழ் மண்ணில்

**க.பொ.த (உ/த) பரீட்சைகளிற்கு தோற்றிய உயர் கற்கைநெறி மாணவர்களுக்கான மாபெரும் கருத்தரங்கு**

அனுமதி இலவசம்

**பேண்தகு அபிவிருத்தியில் தொழில்சார் கற்கைகளும், பட்டக்கற்கைகளும்**

- குறுங்கால பட்டக் கற்கைகள் (Top-up Degrees)
- பட்ட மேற்படிப்புக் கற்கைகள் (MA,M.Phill,Ph.D)
- தொழில்சார் கற்கைகள் (Professional Courses)
- வெளிநாட்டு விசாக்கள் ஐரோப்பா, சிங்கப்பூர், மலேசியா, துபாய்க்கான கல்வி விசாக்கள் (Spot Admissions)

கருத்தமர்வில் பங்குபற்ற ஆர்வமுடையவர்கள் 14.09.2019 ஆம் திகதிக்குள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்க விபரங்களினை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளமையினால் உங்கள் பதிவினை தொலைபேசி ஊடாகவோ அல்லது நேரிலோ உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு - இணைப்பாளர்கள்
தொழில்சார் கற்கைகள் செயலணி
T.P - 021 434 0229, 077 391 4395

## மரண அறிவித்தல்

### நாகம்மா யோகர்

(ஆசிரியை- ஏழாலை அமெரிக்கன்மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை)



தோற்றம் 22.12.1937 — மறைவு 08.09.2019

யாழ். குப்பிளான் வடக்கு வீரபத்திரர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நாகம்மா யோகர் 08-09-2019 ஞாயிற்றுக் கிழமை அன்று Toronto வில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - இலட்சிமிப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கதிரேசு - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற யோகரின் அன்பு மனைவியும், மீனலோஜினி (கலா- லண்டன்), யோகேந்திரன் (பாபு), உமா, சுகார் (சுரேஸ்- லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயரட்ணசிங்கம் (லண்டன்), பொங். மணிவண்ணன், ரதனி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நடராஜா (அவுஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான நேசம்மா, இராசம்மா மற்றும் விக்னேஸ்வரராசா, சண்முகலிங்கம் (அவுஸ்திரேலியா), குலசிங்கம் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சைரிகா- கிசோக், Dr. டெபிசிகா- Dr. அர்ச்சுன், அம்புஜன், மைக்கல், கரிஷா, சச்சின், ஜெயஷாந், சிவயோகர்(சஞ்ஞை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.09.2019) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விளையாட்டரங்க வீதி, தகவல் :சி.இராசகுலேந்திரன்

# கல்விச் செல்வம்

கல்விதான் ஒருவனை அறிவாளி ஆக்கு கிறது. அறியாமை எனும் இருட்டைக் கல்வி எனும் ஒளிதான் போக்குகிறது. நல்ல புத்தகங்கள் அறிவு கண்ணைத் திறக்கும் ஒரு திறவுகோல்.

கல்வி ஒருவனை மட்டும் மேம்படுத்தாது. அவனைச் சார்ந்தவர்களையும், சமுதாயத்தையும், ஏன் நாட்டையுமே அது உயர்த்த உதவும்.

கல்வியின் பெருமையைப் பழம் பாடல் ஒன்று அழகாகப் பேசும். கல்வி என்பது அழியாத செல்வம். அது காலத்தால் அழியாது. கள்வராலும் கவர முடியாதது. வெள்ளத்தால் போகாது. தீயினாலும் வேகாது. கல்விச் செல்வம் தவிர ஏனைய செல்வங்களைக் கள்வர்கள் திருடிச் சென்றுவிட முடியும். வெள்ளம் அடித்துக் கொண்டு போகும். தீ தனது செந்நிற ஜுவாலையால் பொசுக்க முடியும்.

எமக்குத் தெரியாத விடயத்தை யார் சொன்னாலும் கேட்கும் பக்குவம் இருக்க வேண்டும். ராஜாவேயானாலும் தம்மை விட எளியவன் சொல்லும் கருத்தில் உண்மை இருந்தால் வெட்கப்படாது அதனை ஏற்க வேண்டும்.

பல சிறந்த பண்புகளைப் பலரது வாழ்க்கை வரலாறுகளை நீங்கள் படிக்கும் போது தெரிந்து கொள்ள முடியும். அவை உங்கள் வாழ்க்கையில் பல விதங்களில் உதவவும் செய்யும்.

## கிரிட் பிராபர்ட்டி குழுமம் வெளிநாட்டு 'சொத்து முதலீட்டு பயிற்சிச் செயலமர்வை' யாழ்ப்பாணத்தில் நடத்துகிறது

அவுஸ்திரேலியாவில் ஆதனம் வாங்குவதில் உள்ளூர் முதலீட்டாளர்களிடையே அதிகரித்துள்ள ஆர்வம் காரணமாக, கிரிட் பிராபர்ட்டி குழுமம் சொத்து முதலீட்டு செயலமர்வை நடத்த திட்டமிட்டுள்ளது. இது நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் நவின் டி சில்வாவால் 2019 செப்டம்பர் மாதம் 13ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது.

முதலீட்டு நோக்கங்களுக்காக அல்லது கல்விக்காக வெளிநாடுகளுக்குச் செல்ல விரும்பும் தங்கள் குழந்தைகளுக்காக வெளிநாடுகளில் சொத்துக்களை வாங்குவதன் மதிப்பை வலுவாக பிரதிபலிப்பதாக அமைகின்றது. மெல்போர்னின் மிகவும் கவர்ச்சிகரமான மற்றும் மலிவான சொத்துச் சந்தை காரணமாக, குடியிருப்பு மற்றும் வணிக சொத்துக்களின் மதிப்பு படிப்படியாக உயர்ந்து வருகிறது. அவற்றுக்கான கோரல்கள் அவுஸ்திரேலியர்களிடமிருந்தும் சர்வதேச ரீதியாகவும் அதிகளவில் எழுந்துள்ளன.

பயிற்சிச் செயலமர்வுக்கான நுழைவு இலவசம். இச்செயலமர்வில் ஆஸ்திரேலிய வங்கிகளிடமிருந்து 60% நிதியுதவியும் ஏற்பாடு செய்யப்படுகின்றது. முன் பதிவு ஒரு முன் நிபந்தனையாகும்.

நளினை 0768 894 402 என்ற எண்ணில் அழைக்கவும்
புகைப்பட விளக்கம்: நவின் டி சில்வா (c.32801) (13.17)

## கண்ணீர் அஞ்சலி

சங்க உறுப்பினரும் மீசாலை மேற்கு கிராம அலுவலருமான **ஞா.பார்த்தீபன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

**வல்லிபுரம் ஞானசேகரம்**

அவர்கள் 09.09.2019 அன்று இறைபதமடைந்துவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கம், சாவகச்சேரி.
(IN/11217)(11.17)

## கண்ணீர் அஞ்சலி



07 09. 2019 அன்று ஆஸ்திரேலியா சிட்னியில் இறைபதம் எய்திய தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். கிளையின் ஆரம்ப முகாமையாளராகவும் கிளைகளின் பிரதம பரிசோதகராகவும் கடமையாற்றி ஓய்வுநிலை அடைந்த

**க.சண்முகசோதி**

அவர்களின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்

NSB National Savings Bank
தேசிய சேமிப்பு வங்கி ஓய்வூதியர் சங்கம், யாழ். மாவட்டம்.
(cs.27958) (13.17)

## வேலையாள் தேவை

யாழ்நகரிலுள்ள கடை ஒன்றிற்கு ஆண் வேலையாள் தேவை. வியாபாரம் தெரிந்தவர் விரும்பத்தக்கது.
வயது 18- 30 வயதிற்குட்பட்டவர்

தொடர்பு-077 937 0000

## விதை நெல் விற்பனைக்கு

விவசாய திணைக்களத்தினால் சுத்திகரிக்கப்பட்ட அதிக விளைச்சலைக் கொண்ட 3 1/2 மாத B.G 34.6 விதை நெல்லும், விவசாய திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட B.G 400.6 விதை நெல்லும் விற்பனைக்குண்டு.

077 659 2044

## வீடு வாடகைக்கு

வவுனியா.
வைரவப்புளியங்குளம் பகுதியில் குளியல் அறையுடன் இணைந்த வீடு வாடகைக்குண்டு.
தரகர்கள் தவிர்க்கவும்.
(CS 00575) (14.17)

தொடர்பு : 077 013 6723

## பெயர் மாற்றம்

அராலி வடக்கு, நம்பாப்புலமில் வசிக்கும் **குணசேகரம் ஜோன்பில் நேசர்** ஆகிய நான் 11.09.2019 இன்றிலிருந்து எனது பெயரை **குணசேகரம் ஜோஜெல்** என்று மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என்று அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**குணசேகரம் ஜோஜெல்**
(cs.27956) (13.17)

## மணமகள் தேவை

1989 பூசம் கிரகபாவம் 14 சூரியச் செவ்வாய் யாழ் இந்து கௌரவ குடும்பம், அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.

077 047 7908

## வீடு, காணி விற்பனைக்கு

இல 15/26, மூளாய் லேன் சுண்டுக்குளியில் உள்ள 1 பரப்பும் குழி 03.9 அளவான வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.
தரகர்கள் தேவையில்லை.
விரும்புபவர்கள் நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

076 778 9017, 0770324762


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



தமிழ் இலங்கையர் பாரம்பரிய மற்றும் நவீன கலைகள் கலைஞர்களுக்கான அரச விருது - 2019 வழங்கும் வைபவம் 02.09.2019 திங்கட்கிழமை அன்று கொழும்பு தாமரைத்தடாகத்தில் இடம்பெற்றது. அதில் எமது சாரங்கம் இசைமன்ற முதல்வர் **திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் "கலைச்சுடர்"** என்ற விருதையும் அவரது புதல்வன் (மன்ற இசை ஆசிரியர்) **செல்வன் ரஜீந்திரன் சுரசாஹித்தியன் "கலை இளவரசன்"** என்ற விருதையும் பெற்றிருந்தார்கள் அவர்களை மனமார வாழ்த்துவதுடன் மேன் மேலும் சிறந்த விருதுகளை பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தி நிற்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமிக்குள் பிறக்கும் சூரியன்!



“பறவையைக் கண்டான் விமானம் படைத்தான்” என்பதுபோல இயற்கை நிகழ்வுகளை உற்றுநோக்கி அவற்றின் உள்இயக்கத்தைப் புரிந்துகொண்டு, அவற்றை செயற்கை முறையில் படைப்பது மனிதனின் குணம். காய்ந்த மரக்கிளை ஒன்றுடன் ஒன்று உராய்ந்து அதிலிருந்து காட்டுத் தீ ஏற்படுவதை மனிதர்கள் கண்டு செயற்கையாகத் தீயை உருவாக்கினார்கள். இயல்பில் விளையும் தாவரத்தை உற்றுநோக்கி விவசாயம் செய்ய ஆரம்பித்தார்கள். அதேபோல், சூரியன் உள்ளிட்ட விண்மீன்கள் எப்படிப் பெரும் ஆற்றலுடன் ஒளிர்கின்றன என்பதை ஆராய்ந்து அறிந்து, அதுபோல பூமியில் கையடக்க செயற்கைச் சூரியனை உருவாக்கும் முயற்சி நடைபெற்றுவருகிறது. பிரான்ஸின் செந்த் போல் லெடு ரான்ஸ் நகரில் உள்ள கேதாராஷ் எனும் மையத்தில் அமைக்கப்பட்டுவரும் 'ஈடெர்' (இன்டர்நேஷனல் தெர்மோநியூக்ளியர் எக்ஸ்பெரிமென்ட்டல் ரியாக்டர்) எனப்படும் பன்னாட்டு வெப்ப அணுக்கருப் பிணைவுச் சோதனை ஆய்வு உலைதான் அது.

மனித இனம் தோன்றியதிலிருந்து இதுவரை பயன்படுத்திய ஆற்றலை விட, ஒரே ஒரு நொடியில் சூரியன் உற்பத்திசெய்யும் ஆற்றல் அளவு மிகவும் அதிகம். 3.8க்குப் பிறகு 26 பூஜ்யங்களை இட்டால் வரும் எண்ணிக்கை ஜூல் அளவில் ஆற்றலை ஒரு நொடியில் உற்பத்திசெய்கிறது சூரியன்.

**சூரியன் ஒளிர்வது எதனாலே?**

சூரியனில் 75வீதம் ஹைட்ரஜனும் சுமார் 25வீதம் ஹீலியமும் அடங்கியிருக்கின்றன. ஹைட்ரஜன் அணுக்கள் பிணைந்து ஹீலிய அணுக்கள் உருவாகும் 'அணுக்கருப் பிணைவு' எனும் வினை மூலம்தான் பிரம்மாண்டமான அளவில் சூரியன் போன்ற விண்மீன்கள் ஆற்றலை உமிழ்கின்றன. பூமியை விட சுமார் 3 ஆயிரத்து 33 ஆயிரம் மடங்கு அதிக நிறை உடைய சூரியனின் மையத்தில் அழுத்தமும் வெப்பமும் மிக மிகக் கூடுதலாக இருக்கும். சுமார் 15 மில்லியன் டிகிரி வெப்பம்.

பூமியின் தரைக்கு மேலே உள்ள காற்றழுத்தம்போல சுமார் 25 கோடி மடங்கு அதிக அழுத்தம் கொண்டது சூரியன். மிக அதிகமான வெப்பத்தில் எதிர்மின்னணுக்கள் (எலெக்ட்ரான்கள்) விலகி, அணுக்கரு மட்டுமே இருக்கும். அழுத்தம் அதிகம் என்பதால், கூடுதல் அடர்த்தியில் சூரியனின் மையப்பகுதி இருக்கும். நெரிசல் அதிகமான வீதியில் இடித்துக்கொண்டு நடக்க வேண்டியிருப்பதைப்போல அடர்த்தி கூடுதலான சூரியனின் மையத்தில் அவ்வப்போது அணுக்கருக்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்ளும். அவ்வாறு மோதும்போது நான்கு ஹைட்ரஜன் அணுக்கருக்கள் பிணைந்து ஹீலியம் அணுக்கரு உருவாகும். நான்கு ஹைட்ரஜன் அணுக்களின் நிறைகளின் கூட்டுத்தொகையை விட, அதிலிருந்து உருவாகும் ஒரு ஹீலிய அணுவின் நிறை சுமார் 0.7 வீதம் குறைவு. ஐன்ஸ்டைனின் பிரபலமான சூத்திரத்தின்படி நான்கு ஹைட்ரஜன் அணுக்கள் பிணைந்து ஹீலியம் உருவானதும் எஞ்சும் நிறை ஆற்றலாக வெளிப்படும். இதுவே அணுக்கருப் பிணைவு ஆற்றல். இந்த ஆற்றல் வெளிப்படுவதால்தான் சூரியன் உட்பட எல்லா விண்மீன்களும் ஒளிர்கின்றன. ஒரு நேர்மின்னணு (புரோட்டான்) மற்றும் ஒரு நியூட்ரான் கொண்ட டியூட்டிரியம், ஒரு நேர்மின்னணு இரண்டு நியூட்ரான்கள் கொண்ட டிரிட்டியம் ஆகிய ஹைட்ரஜனின் ஐசோடோப்புகளைத்தான் செயற்கை அணுக்கருப் பிணைவுக்குத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆயிரம் மெகாவாட் நிலக்கரி மின்னுற்பத்தி நிலையத்துக்கு ஓர் ஆண்டில் 27 லட்சம் தொன் அளவு நிலக்கரி தேவைப்படும். ஆனால், செயற்கை அணுக்கருப் பிணைவு உலைக்கு இதே அளவு ஆற்றலை உற்பத்திசெய்ய 125 கிலோ டியூட்டிரியம், 125 கிலோ டிரிட்டியம் போதுமானது.

**செயற்கை அணுக்கருப் பிணைவு**

செயற்கையாக அணுக்கருப் பிணைவு செய்வதற்குப் பல சவால்கள் உள்ளன. ஒரே மின்னேற்றம் கொண்ட இரு பொருள்கள் ஒன்றை ஒன்று விலக்கும். அணுக்களின் வெளியே சுற்றிவரும் எதிர்மின்னணுக்கள் மற்றொரு அணுவை நெருங்க விடாது. ஆகையால், முதலில் அணுக்களை முழுமையாக அயனியேற்றம் செய்து எல்லா எதிர்மின்னணுக்களையும் அப்புறப்படுத்திவிட வேண்டும். ஒரு சில கிராம் டியூட்டிரியம், டிரிட்டியம் அணுக்களை லேசர் ஒளிகொண்டு செயற்கை அணுக்கருப் பிணைவைத் தூண்டும் வகையில் மில்லியன் டிகிரி வெப்பத்துக்கு உயர்த்த முடியும். ஆனால், அவ்வளவு வெப்பத்தில் பிளாஸ்மா வடிவில் மாறும் டியூட்டிரியம், டிரிட்டியம் கலவைகளை எதில் பிடித்து வைப்பது? பல மில்லியன் டிகிரி வெப்பத்தைத் தாங்கும் பொருள் எதுவுமில்லை. இந்தச் சவாலை எதிர்கொண்டு சோவியத் இயற்பியலாளர்கள் ஆந்திரே சாகரவ்வும் இகோர் டம்மும் டோகாமாக் (tokamak) எனும் கருவியை வடிவமைத்துச் செயற்கை அணுக்கருப் பிணைவுப் பரிசோதனைக்கு 1960 ஆண்டுகளில் வித்திட்டார்கள். செயற்கையாக அணுக்கருப் பிணைவை ஏற்படுத்த முதலில் வெற்றிடத்தை உருவாக்க வேண்டும். அங்கே டியூட்டி ரியம், டிரிட்டியம் கலவையைப் புகுத்த வேண்டும். லேசர் உதவியோடு 150 மில்லியன் டிகிரி வெப்பத்தை உருவாக்க வேண்டும். இப்போது டியூட்டி ரியமும் டிரிட்டி யமும் பிளாஸ்மா நிலைக்குச் செல்லும். எதிர்மின்னணுக்களை இழந்த டியூட்டிரியமும் டிரிட்டியமும் பிளாஸ்மா நேர்மின்னேற்றம் கொண்டதாக இருக்கும். மையத்தில் ஓட்டையுடன் மெதுவடை உருவில் காந்தப் புலத்தை ஏற்படுத்தினால் பிளாஸ்மாவை அந்தரத்தில் மிதக்கச் செய்யலாமென இந்த இரு விஞ்ஞானிகள் நிறுவினார்கள். பிளாஸ்மாவை அடைத்து வைக்கும் காந்தக் குடுவைக்குத்தான் டோகாமாக் என்று பெயர். அனல்மின் நிலையத்துக்குக் கொதிகலனும், அணுமின் நிலையத்துக்கு அணுஉலைக் கலமும் எப்படி முக்கியமோ அதுபோல அணுக்கருப் பிணைவு உலைக்கு முக்கியம் டோகாமாக்தான்.



**பன்னாட்டுக் கூட்டு ஆய்வு**

ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா, ஜப்பான், சீனா, ரஷ்யா, தென்கொரியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் கூட்டு முயற்சிதான் இந்தப் பரிசோதனை ஆய்வு உலை. இதில் பங்கெடுக்கும் ஒவ்வொரு நாடும் ஏதாவது ஒரு பகுதியை ஆய்வுசெய்து தயாரிக்கும். இதில் உருவாகும் தொழில்நுட்ப அறிவு அனைவருக்கும் பொது என்ற முறையில் புதுமையான பன்னாட்டு ஒத்துழைப்பில் இந்தக் கூட்டுத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. குஜராத்தில் உள்ள 'இந்திய பிளாஸ்மா ஆய்வு நிறுவனம்' இந்தியாவின் பங்களிப்பாகத் தலைமையேற்று நடத்துகிறது.

லேசரைச் செலுத்தி பிளாஸ்மா உருவாக்கவும் மின்காந்தக் குடுவையை இயக்கவும் அணுக்கருப் பிணைவு உலையை இயக்கவும் ஆற்றல் தேவைப்படும். சிறிய மீனைப் போட்டுப் பெரிய மீனைப் பிடிப்பதுபோல இந்தச் சோதனை அணுக்கருப் பிணைவு உலையில் முதலில் 50 மெகாவாட் மின்சாரத்தை உள்ளீடு செய்ய வேண்டும். உள்ளீடு பத்து மடங்கு பெருகி உலை 500 மெகாவாட் ஆற்றலை வெளிப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2010 முதல் கட்டுமானப் பணிகள் நடந்துவருகின்றன. கருவியின் பல்வேறு பாகங்களைப் பல்வேறு நாடுகளைச் சார்ந்த ஆய்வு நிறுவனங்கள் வடிவமைத்துத் தயாரித்துவருகின்றன.

உலகின் மிகப் பெரிய குளிர்சாதனப் பெட்டி எனப் போற்றப்படும் கைரோஸ்டாட் எனும் குளிர்விப்பான் கருவியை, இந்தியாவின் பிளாஸ்மா ஆய்வு நிறுவனம் தயாரிக்கிறது. கட்டுமானப் பணிகள், சோதனை எல்லாம் முடிந்து 2025ஆம் ஆண்டில் செயற்கைச் சூரியன் இயங்க ஆரம்பிக்கும்.

*நன்றி: இந்து தமிழ் திசை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## அமெரிக்க நகர்வின் அர்த்தம்தான் என்ன?

அமெரிக்காவின், நியூயோர்க் நகர இரட்டைக்கோபுரத்தின் மீது அல் குவைதா அமைப்பால் முன்னெடுக்கப்பட்ட தாக்குதலை அடுத்து, அமெரிக்காவால் உலக அளவில் பரவலாக முன்னெடுக்கப்பட்ட பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் இன்று தோல்வியை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. அதுவும் படுதோல்வியை நோக்கி…


2001 ஆம் ஆண்டு இதே நாளில் அப்போதைய உலக வர்த்தக நிலையங்களாக இருந்த அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் மீதும், அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் மீதும், அல் குவைதா அமைப்பால் மிகப் பெரும்தாக்குதல் நடத்தப்பட்டது. வானூர்திகளைக் கடத்தி அவற்றைக் கொண்டு நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தனர். இதையடுத்து பயங்கரவாதத்தை உலகில் இருந்து அகற்ற வேண்டும் என்ற நோக்குடன் அமெரிக்கா பரவலாகப் போரை முன்னெடுத்தது. இதற்கு முதலில் இரையான நாடு ஆப்கானிஸ்தான்.

இரட்டைக்கோபுரத் தாக்குதலின் சூத்திரதாரியாக ஒசாமா பின்லேடன் இந்துகுஸ் மலைப்பகுதியில் மறைந்து வாழ்கின்றார் என்றும் – அவரை ஆப்கானிஸ்தானின் ஆட்சிப்பீடமான தலிபான் ஆதரிக்கிறது என்றும் – தலிபான்களுக்கு எதிராக போரை அறிவித்து அந்த அமைப்பை ஆயுத முனையால் ஆட்சிப்பீடத்தில் இருந்து அகற்றினார் அப்போதைய அமெரிக்க அரச தலைவர் புஷ். அதன் பின்னர் ஈராக் அரச தலைவர் சதாம் உசைன் ஆபத்தான ஆயுதங்களை வைத்திருக்கிறார் என்று தெரிவித்து தனது பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற சித்தாந்தத்தை ஈராக்கை நோக்கித் திருப்பியது அமெரிக்கா. அதில் சதாம் உசைன் தூக்கிட்டுக் கொல்லப்பட்டார். பாகிஸ்தானின் அகமதாபாத் நகரில் மறைந்து வாழ்ந்த பின்லேடனும் ஒபாமா ஆட்சிக்காலத்தில் கொல்லப்பட்டார். இந்தக் கொலைகளுடன் அமெரிக்கா 'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்ற நிலைப்பாட்டில் வெற்றிபெற்றுவிட்டதா? என்று கேட்டால் அதற்கு இல்லை என்பதே பதில்.

ஒசாமா பின்லேடனின் மகன் ஹம்சா பின்லேடனின் வழிகாட்டுதலில் அல் குவைதா மேலும் வலுப்பெற்றுள்ளது மட்டுமல்ல, ஈராக் – சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட் (ஐ.எஸ். ஐ.எஸ்), போகோஹறம் உள்ளிட்ட வலுவான ஆயுதக்குழுக்கள் இன்று பரந்துபட்டுச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவ்வளவு ஏன், தலிபான்களுக்கு எதிராக பலதசாப்தங்களாக அமெரிக்கா போரிடுகின்ற போதிலும், அந்த அமைப்பை இம்மியளவும் அசைக்க முடியவில்லை.

இந்தத் தோல்விக்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று: இரட்டைக்கோபுரத்தாக்குதல்கள் போன்ற வலுவான தாக்குதல்கள் மட்டுமே பயங்கரவாதத்தாக்குதல்கள் இல்லை என்ற நிலைப்பாடே இன்று வலுவாக வேரூன்றியுள்ளது. ஒரு வாகனத்தை அளவுக்கு அதிகமான வேகத்துடன் செலுத்தி எதிர்ப்படுபவர்களைக் கொல்லுதல், சிறு கத்தியால் எதிர்ப்படுபவர்களைக் குத்திக்கொல்லுதல் என்பனவெல்லாம் தற்போது பயங்கரவாதத்தின் போர்வைக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. அவை பயங்கரவாதிகளின் உத்தியாகவும் உள்ளன. ஆக, பயங்கரவாதம் என்ற விடயத்தை பேசுபொருளாக்கி பயங்கரவாதிகளுக்கு பல்வேறு பிடிமானங்களைக் கொடுத்தமைதான் அமெரிக்கா செய்த செயலின் மிச்சம். அதுவே அந்த நாட்டின் உச்சக்கட்டத் தோல்வியுமாக உள்ளது. எவ்வாறெனில், எந்தநாட்டில் பயங்கரவாதத்தாக்குதல் நடத்தினாலும் அது அமெரிக்காவின் தோல்வியாகத்தான் கொள்ளப்படுகின்றது. ஏனெனில் பயங்கரவாதத்துக்கு எதிரான போருக்கு 'உலகளாவிய' என்ற அர்த்தத்தைக் கொடுத்தது அமெரிக்காவே.

இரண்டாவது: பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுவிக்கின்ற வேலையை வல்லரசுகள் செய்கின்றன. உதாரணமாக சிரியாவில் இன்று ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புக்கு எதிரான போரை தீவிரமாக முன்னெடுத்துள்ள அமெரிக்காதான் அந்த அமைப்பைத் தோற்றுவித்தது என்கின்ற பொதுவான குற்றச்சாட்டு உள்ளது. சிரிய வளங்களை சிதைப்பதற்கும் மத்திய கிழக்கில் இஸ்ரேலைப் பலப்படுத்துவதற்கும் சிரியாவைப் பகடைக்காயாகப் பயன்படுத்த அமெரிக்கா போட்ட விதைதான் ஐ.எஸ்.ஐ.எஸ். என்கின்றனர் உலக வல்லுனர்கள் பலர். எனின், அமெரிக்க நகர்வின் அர்த்தம்தான் என்ன…?



# 9/11

ஆர்.பிரகாஸ்

இற்றைக்கு 18 ஆண்டுகளுக்கு முன்னர் இதே நாளில் உலகின் அமைதி கேள்விக்கு உட்பட்டது. அமெரிக்காவினதும் உலகினதும் வர்த்தக மையமாக விளங்கிய இரட்டைக் கோபுரங்கள் அல் குவைதாவின் வெறியாட்டத்தால் சரிந்து விழுந்தன. அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகனும் தாக்கப்பட்டது. சில நிமிட இடைவெளிக்குள் அனைத்தும் நிகழ்ந்தன. உலகமே உறைந்தது.

### அந்த எதிர்பாராத சம்பவம்

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி காலை 8 மணி. உலக வர்த்தகத்தின் தலைநகரம் வழக்கம்போல் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. வீதிகளில் வாகனங்களின் படையெடுப்பு, ஒலிபெருக்கி சப்தங்கள், கோட் சூட் போட்டோரின் வேக நடை, என அன்றாட பணிகளில் மக்கள் வழக்கம்போல் ஈடுபட்டிருந்த நேரம். விண்ணை முட்டும் அளவுக்கு ஓங்கி உயர்ந்து காணப்பட்ட அந்த உலக வர்த்தக மையக் கட்டடங்கள், அன்றைய உலக பொருளாதாரத்தை நிர்ணயிக்கத் தயாராகிக்கொண்டிருந்தன.

சரியாக காலை 8 மணி 46 நிமிடங்கள். 110 மாடிகள் கொண்ட உலக வர்த்தக மைய கட்டடத்தின், வடக்குக் கட்டடத்தின் 93 மற்றும் 99 மாடிகளுக்கு இடைப்பட்ட பகுதியில் திடீரென வானூர்தி ஒன்று அதிபயங்கர வேகத்துடன் மோதி வெடித்துச் சிதறியது. சற்றும் எதிர்பாராத வகையில் சாலையில் சென்று கொண்டிருந்தவர்கள் மேலே பார்க்க, வானூர்தி ஏதோ விபத்தில் சிக்கிக்கொண்டதாகத்தான் எண்ணியிருந்தனர். 81 பயணிகள் 11 பணியாளர்களுடன் பாஸ்டனின் லோகன் பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் இருந்து, லொஸ் ஏஞ்சல்ஸ் நோக்கிப் புறப்பட்ட அமெரிக்க ஏர்லைன்ஸ் போயிங் 767 வானூர்திதான் அது. செய்தித் தொலைக்காட்சிகள் நேரலையைத் தொடங்கிவிட்டன. எப்படி அணைக்கப்போகிறார்கள்?, என்ன செய்யப்போகிறார்கள்?, எப்படி இந்த விபத்து நடந்தது? கரும்புகை காட்சி எப்படியிருக்கிறது? என்று வர்ணனை செய்ய ஆரம்பித்தாகிவிட்டது. அதேநேரம் 14 நிமிடங்கள் கழித்து, 56 பயணிகள், 9 பணியாளர்களுடன் அதே பாஸ்டன் வானூர்திநிலையத்தில் இருந்து புறப்பட்ட 'யுனைடெட் ஏர்லைன்ஸ் 175', 'போயிங் 767' ரக வானூர்தி காலை 9 மணி 3 நிமிடத்தில் உலக வர்த்தக மையத்தின் தெற்கு கட்டத்துடன் மோதி வெடித்தது.

அதை நேரலையில் பார்த்துக்கொண்டிருந்தோருக்கும் சரி, ஒளிபரப்பிக்கொண்டிருந்தோருக்கும் சரி அதுவரையில்லாத உச்சகட்ட பீதி. திகைப்பு. ஏதோ விபத்து, சாதாரண விடயம் என்று நினைத்துக்கொண்டிருந்தோர் விக்கித்து நின்றனர். நியூயோர்க் நகரம் எங்கும் அலறல் சத்தம். அமெரிக்காவே உறைந்தது. நிச்சயமாக அந்தக்கணம் அமெரிக்காவுக்குச் சாதாரணமானதாக இருந்திருக்காது.


### உண்மையை உணர்ந்த அமெரிக்கர்கள்

சர்வ வல்லமை பெற்ற உலக வல்லரசு, எவராலும் அசைத்துவிட முடியாத பொருளாதாரம், உலகமே சேர்ந்தாலும் வீழ்த்திவிட முடியாத ஆயுத படைபலம் என உலகைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது அமெரிக்கா. தானின்றி உலகில் ஒன்றும் இல்லை என்பதான தோற்றத்தைக் கொடுத்திருந்தது. அப்படியான அமெரிக்காவின் அதிகாரத்தின் மீதான தாக்குதல். அந்த நாட்டுப் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் விதமான தாக்குதல். சிங்கத்தின் குகையில் அதன் பிடறியையே அறுப்பதற்குச் சமமான தாக்குதல். அமெரிக்காவின் மட்டுமல்ல உலக வர்த்தகத்துக்கே மையமாய் இருந்த உலக வர்த்தக மையத்தின் மீதான தாக்குதல். அமெரிக்காவின் அடையாளமாக, அத்தனை கம்பீரமாக இருந்த அந்த இரட்டைக் கோபுரங்களின் மீதான தாக்குதல் உலக வல்லரசுக்குப் பேரிடியாக இருந்தது.

அப்போதுதான், நியூயோர்க் நகர மக்கள் ஏதோ அசம்பாவிதம் நடக்கிறது என்பதை உணரத் தொடங்கினர். மளமளவென இரண்டு கட்டடங்களும் இடிந்து விழுந்த நிலையில், வானை கரும்புகை சூழ்ந்தது. கட்டடங்கள் இடிந்து கிளம்பிய பெரும் புழுதி, தெருக்களை மூடி மறைத்துக்கொள்ள, இருண்ட கண்டமானது அந்த இரும்புக்கோட்டை.

இந்தக் கோரச் சம்பவத்தை, தொலைக்காட்சிகள் நேரலையில் ஒளிபரப்பிக்கொண்டிருக்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






வல்லரசு நாடான அமெரிக்காவில் ஏதோ அசம்பாவிதம் நடக்கிறது என்பதை மட்டும், உலக மக்கள் ஊகிக்கத் தொடங்கினர். பதற்றமும், பரபரப்பும் அமெரிக்க மக்களையும், உலக நாடுகளையும் தொற்றிக்கொண்ட அந்த வேளையில், மூன்றாவதாக ஒரு வானூர்தி அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகனைத் தாக்கியது. உலகின் மாபெரும் இராணுவத்தைக் கட்டுப்படுத்தும் அந்தக் கட்டடமும் தாக்குதலுக்கு இலக்கான போது அமெரிக்காவே ஒரு கணம் நிலை குலைந்தது. தாக்குதல், தீவிரவாதம் என்பதையெல்லாம் எங்கோ நடக்கும் ஒன்றாகத் தொலைக்காட்சியில் பார்த்துவந்த அந்த தலைமுறை அமெரிக்கர்களுக்கு இழப்பின், தீவிரவாதத்தின்கோரம் கண்முன் காட்டப்பட்டது.

**அல் குவைதா**

ஒசாமா பின்லேடன் தலைமையிலான அல் குவைதா தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த 19 பேர், அடுத்தடுத்து மூன்று தாக்குல்களை, அரங்கேற்றியதையும் மேலதிகமாக இன்னுமொரு வானூர்தி கடத்தப்பட்ட செய்தியையும் அறிந்துகொண்டது அமெரிக்கா. கடத்தப்பட்ட 4ஆவது வானூர்தி வெள்ளை மாளிகையைத் தாக்குமோ? என்றஅச்சம் தொற்றிக்கொள்ள, பென்சில்வேனியா மாகாணத்தில் வெட்டவெளிப்பகுதியில் அது விழுந்து நொறுங்கிய செய்தி ஓரளவுக்கேனும் ஆறுதல் கொடுத்திருக்கும். வானூர்தியில் இருந்த பயணிகள், தீவிரவாதி களுடன் கடுமையாகச் சண்டையிட்டதால், வானூர்தி நிலை தடுமாறி, வயல் வெளியில் விழுந்து நொறுங்கியதாகத் தகவல்கள் வெளியானது. அமெரிக்க வரலாற்றின் மாபெரும் வீர, தீர செயலாக அமெரிக்கப் பயணிகளின் அந்தப் போராட்ட நிகழ்வு அறிவிக்கப்பட்டது. தீவிரவாதி களுடன் சண்டையிட்டு, உயிரிழந்த மக்களின் உண்மையான தேசபக்தியை மெய்ச்சி, வானூர்தி விழுந்து நொறுங்கிய வயல்வெளிக்குச் சென்று முதலில் அஞ்சலி செலுத்தினார் அரச தலைவர் புஷ். அந்த 4ஆவது வானூர்தியை கடத்திய தீவிரவாதிகள், எங்கு தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தனர் என்ற கேள்விக்கு, இதுவரை விடை கிடைக்கவே இல்லை. வெள்ளை மாளிகை என்பதே பொதுவான கருதுகோள்.

உலக வர்த்தகம் மையம், பென்டகன் மீதான தீவிரவாதத் தாக்குதல்களில், சுமார் 3 ஆயிரம் உயிர்கள் மடிய, 6 ஆயிரம் பேர் காயமுற்றனர். அடுத்த சில மணிநேரங்களில் தாக்குதலுக்கு பொறுப்பேற்பதாக, அல் குவைதா அமைப்பு பகிரங்கமாக அறிவித்தது.



பலஸ்தீனை ஒடுக்க இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆதரவு தருவது, ஈராக் மீதான பொருளாதாரத் தடைகள், காஷ்மீரில் உள்ள இஸ்லாமியர்களுக்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தந்தது, சவூதி அரேபியாவில் அமெரிக்கப் படைகள் முகாமிட்டுள்ளமை என்பன போன்ற அடுக்கடுக்கான காரணங்களை, தாக்குதலுக்கான காரணமாகச் சொன்னது அல் குவைதா. இதனை அடுத்து, அல் குவைதா அமைப்பைக் களையெடுக்க ஆயத்தமானது அமெரிக்கா. தீவிரவாதத்துக்கு எதிரான பன்னாட்டுப் போரை அறிவித்தார் அமெரிக்க அரச தலைவர் புஷ். இந்த அறிவிப்பே விடுதலைப் புலிகளின் அழிவிக்கும் பின்னர் வித்திட்டது.

**ஆப்கன் மீது போர்**

இந்துகுஷ் மலைப்பள்ளத்தாக்கில் பதுங்கியிருக்கும் பின்டேலனை ஒப்படைக்குமாறு, ஆப்கானிஸ்தான் ஆட்சி பீடத்தில் இருந்த தலிபான்களை எச்சரித்த அரச தலைவர் புஷ், அவர்கள் மறுத்த நிலையில் 2001ஆம் ஆண்டு டிசெம்பர் 7ஆம் திகதி ஆப்கன் மீது போர் தொடுத்தார். பிரிட்டனும், கனடாவும் முதலில் ஆதரவு அளிக்கப் பின்னர் 29 நாடுகள் அங்கம் வகிக்கும் நேட்டோ படைகளும் அமெரிக்காவுடன் கைகோர்த்தன. தலிபான்களை விரட்டியடித்து, ஆப்கானிஸ்தானை தன்வசப்படுத்தியது அமெரிக்கா. நீண்ட நெடிய தேடுதல் வேட்டை நடத்திய போதிலும், முக்கிய குற்றவாளியான ஒசாமா பின்டேலனைப் பிடிக்க முடியாமல் போனது.

ஒரு பக்கம் பின்லேடனைப் பிடிக்க முடியாமல் போன நிலையில், மற்றொரு பக்கம் ஈராக் அரச தலைவர் சதாம் உசேன் பேரழிவு இரசாயன ஆயுதங்களைக் குவித்து வைத்துள்ளதாக குற்றஞ்சாட்டி, 2003 ஆம் ஆண்டு மார்ச் 20ஆம் திகதி ஈராக் மீது போர் தொடுத்தனர். ஈராக்கையும் கைப்பற்றினர். பலமாத தேடுதல் வேட்டைக்குப்பின், 2003 ஆம் ஆண்டு டிசெம்பர் 13ஆம் திகதி திக்ரிக் நகரில் பதுங்கு குழியில் பதுங்கியிருந்த சதாம் உசைனை கைது செய்தனர். பேரழிவு ஆயுதங்கள் எதையும் கைப்பற்ற முடியா விட்டாலும், 2006ஆம் ஆண்டு டிசெம்பர் 30ஆம் திகதி சதாம் உசைனுக்குத் தூக்கு தண்டனை நிறை வேற்றப்பட்டது. உலக வர்த்தக மைய தாக்குதலுக்கு அல் கொய்தா தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுக்கொண்டாலும், வானூர்தியின் எரிபொருளால் இவ்வளவு பேரழிவு எப்படி சாத்தியமாகும்? என்ற சந்தேகங் களையும் கிளப்பினர் சிலர். பிரம்மாண்ட கட்டடங்களுக்கு வெடிகள் வைத்து, அருகிலுள்ள கட்டடங்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல், எப்படி இடிக்கப்படுகிறதோ, அதே போன்று, உலக வர்த்தக மைய கட்டடங்கள் சரிந்தன. இது அந்தச் சந்தேகங்களுக்குப் பெரும் தீனி போட்டன. இது திட்டமிட்ட வெடிகுண்டுத் தாக்குதல் என்றும், இதில் அமெரிக்கர்களுக்கும் தொடர்பிருக்கலாம் என்றெல்லாம் செய்திகள் வெளிவந்தன.

**வானூர்திப் பாதுகாப்பு**


வானூர்தி விபத்துகள் என்றால், மிக முக்கிய ஆதாரமாகக் கருதப்படுவது கறுப்புப் பெட்டி. ஆனால் இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட வானூர்திகளின் கறுப்பு பெட்டிகள் தீயில் அழிந்துவிட்டதாக அமெரிக்கா தெரிவித்தமை, சந்தேக நெருப்புக்கு எண்ணெய் ஊற்றியது. சுமார் 3 ஆயிரம் டிகிரி செல்சிஸ் உருகுநிலைக் கொண்ட கறுப்புப்பெட்டி, எப்படி சுமார் ஆயிரம் டிகிரி செல்சியஸ் வெப்பத்தில் உருகியது என்ற கேள்வியும் எழுந்தது.

அதேநேரம் இப்படி ஒரு தாக்குதல் மீண்டும் நிகழா வண்ணம் தடுக்க வானூர்திப் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டன. நுழைவிசைவு நடைமுறையில் கடுமை காட்டப்பட்டன. பயணிகள் தீவிரமாகப் பரிசோதிக்கப்பட்டனர். இதில் பிரபலங்களும் அடங்குகின்றனர். இந்த நிலையில் 2010ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் பின்லேடனும் கொல்லப்பட்டார். பாகிஸ்தானில் அந்த நாட்டுக்கே தெரியாமல் அமெரிக்கா எடுத்த இரகசிய நடவடிக்கையின் வாயிலாக இரட்டை கோபுரத் தாக்குதலுக்கான முழு எதிர் வினையை அமெரிக்காவால் செய்ய முடிந்தது.

**அமெரிக்காவின் போரும் விடுதலைப் புலிகளும்**

இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பின்னர் உலகளாவிய ரீதியில் பயங்கரவாதத்துக்கு எதிரான போரை அமெரிக்கா ஆரம்பித்திருந்தது. எனினும் இன்று வரை அந்தப் போர் வெற்றி பெறவில்லை. உலகப் பயங்கரவாதம் இன்னும் வலுப்பெற்றுள்ளது. ஐ.எஸ்.ஐ.எஸ், தலிபான், போகோஹறம், இஸ்லாமியக் குழுக்கள் என்று இன்று ஏகப்பட்ட பயங்கரவாதக் குழுக்கள் தோன்றியுள்ளன. ஆனால் அவை அனைத்தும் அமெரிக்காவை மட்டும் இலக்காகக் கொண்டிருக்கவில்லை. உலகின் ஏதோவொரு பகுதியைத் தாக்கினாலும் அது அமெரிக்காவுக்கு எதிரான தாக்குதல்தான் என்கின்றன அவை. இதனால் இன்று ஏராளமான சிறிய நாடுகளும் பாதிக்கப்படுகின்றன. இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதலும் அத்தகைய வகையறாதான்.

அதேநேரம் ஆயுதக் குழுக்களுக்கு எதிரான போர் என்ற போர்வையில் அமெரிக்காவால் ஆரம்பிக்கப்பட்ட இந்த உலகளாவிய நடவடிக்கை சில கிளர்ச்சிக் குழுக்களினதும் அவற்றின் நியாயமான கோரிக்கைகளினதும் அழிவுக்கு வித்திட்டன. பலஸ்தீனத்தின் ஹமாஸ், விடுதலைப் புலிகள் உள்ளிட்ட சில இயக்கங்களை இதற்குச் சிறந்த உதாரணங்களாகச் சொல்லலாம். ■



9/11 தாக்குதலையடுத்து அமெரிக்காவில் அமைக்கப்பட்டுள்ள மிகப்பெரும் நினைவரங்குகளில் ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## கற்றல்வள நிலையம் திறப்பு

கொடிகாமம், செப். 11

யாழ்ப்பாணம், உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் ஆரம்ப கற்றல்வள நிலையம் நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணியளவில் திறந்துவைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

கற்றல் வள நிலையத்தை முதன்மை விருந்தினர், மாணவர்களுடன் இணைந்து நாடாவெட்டி திறந்து வைத்தார்.

கல்வி அமைச்சால் அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் இந்தக் கற்றல்வள நிலையம் திறந்து வைக்கப்பட்டது. (ஜ-159)

★★★ ★★★ ★★★



கொடிகாமம், செப். 11

கொடிகாமம், திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலையில் ஆரம்ப கற்றல்வள நிலையம் நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் திறந்துவைக்கப்பட்டது.

அதிபர் திருமதி புஸ்பராணி மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்

விருந்தினர்கள் மேலைத்தேய இசை வாத்தியங்களோடு அழைத்து வரப்பட்டனர். தேசியக் கொடியை சிறப்பு விருந்தினர் ஏற்றி வைத்தார்

அதனைத் தொடர்து ஆரம்ப கற்றல் வள நிலையம் திறந்துவைக்கப்பட்டது.

அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க பாடசாலை மண்டபத்துக்கு தேவையான ஒரு தொகுதி நாற்காலிகளை நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் வழங்கிவைத்தார்.

கல்வி அமைச்சால் அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் இந்த கற்றல் வள நிலையம் திறந்துவைக்கப்பட்டது. (ஜ-159)



## அதிபர்,ஆசிரியருக்கான விடுதி திறந்துவைப்பு

வவுனியா, செட்டிகுளம் மகாவித்தியாலயத்தில் அதிபர்,ஆசிரியருக்கான விடுதி நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்தார். (ஜ-222)

# சிலைகள், சொரூபங்கள் வீதிக்கு வருவதால் சிக்கல்

தலைமன்னார், செப். 11

மன்னார் பகுதியில் வீதிகளில் ஏட்டிக்குப் போட்டியாக சிலைகளும், சொரூபங்கள் மற்றும் வளைவு கள் அமைப்பதாலும் அவைகளை உடைப்பதாலும் மதப் பிரச்சினைகள் தலைதூக்குகின்றன என்று மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் எம்.எஸ்.எம்.முஜாஹீரிடம் கூறப்பட்டுள்ளது.

தேசிய சமாதானப் பேரவை, தொடர்பாடலுக்கான பயிற்சி நிலையம் மற்றும் சர்வமதக் குழுக்கள் கொண்ட பதின்மூன்று பேர் கொண்ட குழுவினர் அண்மையில் அவரின் அலுவலகத்தில் சந்தித்து உரையாடியபோது இதைக் கூறினர் என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த குழுவினர் நேற்று முன்தினம் சந்திப்பு நடத்தினர். அதன்போதே மேற்கண்டவாறு கூறப்பட்டது என்று தேசிய சமாதானப் பேரவையின் செயற்றிட்ட அதிகாரி உவைஸ் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் நகர மற்றும் கிராமப் புறங்களில் நிலவும் அரசியல், இன மற்றும் மதப் பிரச்சினைகளை அந்தந்த அரசியல் பிரதிநிதிகளிடம் கேட்டறிந்து, இனங்கண்டு, பிரச்சினைகள் தோன்றும்போது அவற்றை வளரவிடாது ஆரம்பத்திலேயே கிள்ளி எறிய வேண்டும் - என்றார்.

மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் எம்.எஸ்.எம். முஜாஹீர் கருத்துத் தெரிவிக்கையில், இங்கு இனம், மதம், அரசியலைச் சுட்டிக்காட்டி, அபிவிருத்திகளுக்குச் சிலர் தடையாக இருந்து வருகின்றனர் என்று தெரிவித்தார். (த-60)



வவுனியா, பூந்தோட்டம் சிறிலக்ஷ்மிசமேத நரசிங்கர் ஆலயப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்றது. (க-110)

## ஓமந்தையில் பாதுகாப்புக் கடவை அமைப்பு

வவுனியா.செப்.11

ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டம் பகுதியில் அமைந்துள்ள தொடருந்துக் கடவையில் புதிதாக அமைக்கப்பட்ட பாதுகாப்புக் கடவை நேற்று மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்பட்டது.

வவுனியா இறம்பைக்குளம் ஈஷி மிஷன் ஆலயத்தின் நிதிப்பங்களிப்பில், அரச ஊழியர் வீட்டுத் திட்டத்தின் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக இந்தக் கடவை அமைக்கப்பட்டுள்ளது.



வவுனியா மூத்த பொலிஸ் அத்தியட்சகர் திஸ்ஸலான் டி சில்வா கடவையைத் திறந்து வைத்தார். நிகழ்வில் ஈஷி மிஷன் ஆலயத்தின் முதன்மைப் போதகர் பி. எம். இராஜசிங்கம், ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுரேஸ்த டி சில்வா, தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் திருமதி அஞ்சலா கோகிலகுமார், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-402,222)

# மாணவர்களுக்கு பசும்பால் வழங்கும் திட்டம் ஆரம்பம்

வவுனியா,செப்.11

வறிய மாணவர்களின் காலை உணவுக்கு நிகராக ஒரு கப் பசும் பால் வழங்கும் திட்டம், வவுனியா தம்பனைசோலை கேதீஸ்வர வித்தியாலயத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

லண்டன் ஈலிங் சிறி கனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் தாயக உறவுகளுக்குப் பல வருடங்களாக ஆற்றி வரும் சமூக பணிகளில் ஒரு கட்டமாக இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.



ஆரம்ப நிகழ்வில் ஆலயத் தலைவர் [illegible] ஆலய உறுப்பினர்கள், தமிழ் விருட்சம் தலைவர் சந்திரகுமார், செயலர் மாணிக்க ஜெகன் மற்றும் பாடசாலையின் அதிபர் கோமதி சத்தியகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-ரி4)



## தென்மராட்சி அமைப்புகளுக்கு உபகரணங்கள் பகிர்ந்தளிப்பு

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் ஊடாக சமூக மட்ட அமைப்புக்களுக்கும், விளையாட்டுக் கழகங்களுக்கும் உபகரணங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

தென்மராட்சி பிரதேச செயலகமாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி தேவநந்தினி பாபு தலைமையில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து 20 லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் இவ்வாறு பகிந்தளிக்கப்பட்டன.

தென்மராட்சி பிரதேச செயலக நிர்வாக எல்லைக்குள் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள், விளையாட்டுக்கழகங்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களுக்கு விளையாட்டு உபகரணங்கள், போட்டோக் கொப்பி இயந்திரங்கள், சுழல் கதிரைகள், பிளாஸ்ரிக் கதிரைகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபையின் தலைவர் க.வாமதேவன், சாவகச்சேரி பிரதேச சபையின் உப தவிசாளர் செ.மயூரன், தென்மராட்சி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சுபச்செல்வன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உபதவிசாளர் மு.கஜன் மற்றும் உறுப்பினர் கி.வீரவாகு, சமூக மட்ட அமைப்பின்பிரதிநிதிகள், விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (க-159)

## குடமுழுக்கு

கொடிகாமம்,செப். 11

யாழ்ப்பாணம், கோவிலாக்கண்டிதிருவருள்மிகு மருதடி நாச்சிமார் ஆலய குடமுழுக்கு நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணி தொடக்கம் 12 மணி வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 6.30 மணியிலிருந்து மாலை4மணிவரைநடைபெறவுள்ளது. (ஜ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் 4 கிராமங்களை அமைச்சர் சஜித் திறந்துவைத்தார்

கிளிநொச்சி, செப். 11

கிளிநொச்சியில் 51 வீடுகளைக்கொண்ட 4 மாதிரிக் கிராமங்கள் நேற்றுமுன்தினம் மக்களிடம் கையளிக்கப்பட்டன. அமைச்சர் சஜித் பிரேமதாச அவற்றைத் திறந்துவைத்து மக்களிடம் கையளித்தார்.



இந்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்டச் செயலர் தலைமையில் நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து கிளிநொச்சி, கனகாம்பிகைக்குளம் பகுதியில் மேடை நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது அமைச்சர் சஜித் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கடனும், 25 பேருக்கும் தலா ஒரு லட்சம் பெறுமதியானதும், 40ஆயிரம் ரூபா மானிய அடிப்படையிலுமான கடன் 25 பேருக்கும்,120 பேருக்கு 39ஆயிரம் ரூபா பெறுமதியான தொழில் உபகரணங்களும், வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட 50 குடும்பங்களுக்குத் தலா 50ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகளும், 60 பயனாளிகளுக்குமூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாணத்தில் 5 மாதிரிக் கிராமங்களை திறந்து வைத்துள்ளேன். அதனையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். எங்களுடைய வீடமைப்பு முறைகளை நான்கு கட்டங்களாகச் செய்துகொண்டு வருகின்றோம். 2025 ஆம் ஆண்டு வருகின்ற போது 20 ஆயிரம் வீடுகளை அமைத்து, வீடு இல்லாப் பிரச்சினையைத் தீர்ப்பது தான் எமது நோக்கம். அதன் முதற் கட்டமாக இந்த ஆண்டு செப்ரெம்பர் இறுதியிலே 2ஆயிரத்து 500 வீடுகளை அமைத்து, மக்களுடைய பாவனைக்கு வழங்குவதாக இருந்தது. அதனை ஜூலை மாதமே அமைத்துக் கொடுத்துவிட்டோம். சொல்வதிலும் பார்க்க அதிகம் செய்கின்றோம். 2025 ஆம் ஆண்டுக்குள் மக்களுக்கு 'செமட்ட செவன' என்ற தலைப்பின் கீழ் வீடுகளைப் பெற்றுத்தருவோம். இன்று 2அயிரத்து 553 வீடுகள் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் இடம்பெற்றுக் கொண்டிருகின்றன. அவற்றில் வடக்கு மாகாணத்தில் 772 வீட்டுத் திட்டங்களும் கிழக்கு மாகாணத்தில் 489 வீட்டுத்திட்டங்களுமாக ஆயிரத்து 261 வீடுத்திட்டங்கள் வடக்கு மாகாணத்திலேயே அமைக்கப்பட்டுள்ளன. மாகாண ரீதியாகப் பார்க்கின்றபோது 49 வீதமாகவுள்ளது என்று தெரிவித்தார். நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (த-6)





## அதிபர் விடுதி திறப்பு

யாழ்ப்பாணம்,செப்.11

யாழ்ப்பாணம் அச்சுவேலி மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட அதிபர் விடுதி நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் காட்சித் தலைவருமான மாவை சேனாதிராசா முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்தை திறந்து வைத்தார்.

மேலும் நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் அயல் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்துக்கு அமைய நடைமுறைப்படுத்தப்படும் வேலைத் திட்டத்தின் கீழ் இந்த அதிபர் விடுதி திறந்து வைக்கப்பட்டது. (ஜ-ரி1)



## பல்லூடகக்கருவி அன்பளிப்பு

பளை, செப்.11

பளை, தர்மக்கேணி அ.த.க பாடசாலை மாணவர்களின் நலன்கருதி பல்லூடகக்கருவி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் நிறுவுநர் சி.சிவபாதசுந்தரத்தின் குடும்பத்தினரால் இந்தக் கருவி கொள்வனவு செய்யப்பட்டு பாடசாலையில் அதிபர் வே.செல்வகுமாரிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது. (ஜ-9)



## மாணவர்கள் மதிப்பளிப்பு

அகில இலங்கைத் தமிழ் மொழி கலைத் திறன் போட்டியில் தேசிய மட்டத்தில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவர்கள் இருவர் சாதனை படைத்துள்ளனர்.

இவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் அதிபர் கி.விக்னராஜா தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி. கமல்ராஜன், கரைச்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி தர்மரட்ணம், தொழில் வழிகாட்டல் அதிகாரி திருமதி பிறேமா மதுரநாயகம், தமிழ் பாட ஆலோசகர்களான திருமதி கலைச்செல்வி ஞானசேகர் மற்றும் க.கிருஷ்ணமூர்த்தி உட்படப் பலர் கலந்துகொண்டனர். கல்வி அமைச்சால் அகில இலங்கை தமிழ் மொழிக் கலைத் திறன் போட்டி நடத்தப்பட்டது. இதில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த பிரபாகரன் தமிழ்விழி பிரிவு 5 இலக்கிய விமர்சனத்தில் இரண்டாம் இடத்தையும், பிரிவு 3 வாசிப்பில் சூசைநாதர் தர்சிகா இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். (ஜ-159)

# வழிப்பறிக் கொள்ளையர்கள் யாழ். நகரையும் ஆக்கிரமிப்பு

*கஸ்தூரியார் வீதியில் வாளுடன் வந்து சங்கிலி அறுப்பு*

யாழ்ப்பாணம், செப். 11

யாழ்ப்பாணக்குடாநாட்டில் அண்மைக் காலமாக நவாலி, மானிப்பாய், சாவகச்சேரி எனப் பல இடங்களிலும் இடம் பெற்ற வழிப்பறிக் கொள்ளை தற்போது யாழ்ப்பாண நகரத்தையும் ஆக்கிரமித்துள்ளது.

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அண்மித்த பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை உந்துருளியில் வந்த கொள்ளையர் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

அவர்கள் வாளுடன் வந்து அச்சுறுத்தி சங்கிலி அறுத்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

உந்துருளியில் தந்தைக்குப் பின்னால் இருந்து பயணித்த மகன் அணிந்திருந்த சங்கிலியே அறுக்கப்பட்டுள்ளது. அவர் இரண்டு சங்கிலிகள் அணிந்திருந்தார் என்றும் இரண்டையும் அறுக்க முயற்சித்த போதும், மகன் கழுத்தைப் பொத்திப் பிடித்திருந்ததால், ஒரு சங்கிலி அறுக்கப்பட்டது என்றும், மற்றைய சங்கிலி துண்டாடப்பட்ட நிலையில் எஞ்சியுள்ளது என்றும் பாதிக்கப்பட்ட தந்தை தெரிவித்துள்ளார். வாளுக்குப் பயந்து அந்த இடத்தை விட்டு நகர்ந்துவிட்டோம் என்றும் பாதிக்கப்பட்ட தந்தை தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தவில்லை. அலைச்சல்படவேண்டும் என்ற காரணத்தாலேயே பொலிஸாரை நாடவில்லை என்று அந்தத் தந்தை தெரிவித்தார்.

யாழ்ப்பாண நகரப் பகுதியில் ஆங்காங்கே சாதாரண பொலிஸாரும் போக்குவரத்துப் பொலிஸாரும் சோதனைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர். அவ்வாறிருந்தும் கொள்ளையர்கள் வாளுடன் துணிவாக உலாவுகின்றனர் என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

காதால் கேட்கமுடியாதளவுக்கு மிகப்பெரும் இரைச்சல்களுடன் கொள்ளையர்கள் உந்துருளிகளுடன் ஒன்றன் பின் ஒன்றாக நகரத்தை வலம் வருகின்றனர் என்றும் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

யாழ்ப்பாண முதன்மை வீதியில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தை அண்மித்த தொடருந்துக் கடவையை அண்மித்தும் நேற்றுமுன்தினமிரவு வாள்வெட்டுக் குழுவினர் கையில் வாளுடன் முரண்பட்டுச் சென்றனர். அவர்கள் முச்சக்கரவண்டியில் பயணித்தவாறு வாளை வீதியில் தேய்த்து தீ பொறி பறக்கும் வகையில் முச்சக்கரவண்டியில் பயணித்தனர் என்று நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். (த-21)



## ஈருருளி கையளிப்பு

முல்லைத்தீவு,செப்.11

முல்லைத்தீவு, முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி ஒருவருக்கு ஈருருளி வழங்கப்பட்டது.

குறித்த மாணவியின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக இந்த உதவி அண்மையில் வழங்கப்பட்டது.

லண்டனில் வசிக்கும் கந்தப்பிள்ளை திலீபனின் நிதி உதவியில் சிவம் அறக்கட்டளை அதிபர் சி.மோகனதாஸ் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன் ஆகியோரால் மாணவியிடம் கையளிக்கப்பட்டது. (ஜ-222)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாக அலுவலர்கள் சுகவீனவிடுமுறை பணிகள் முடங்கியதால் மக்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், செப். 11

இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் நேற்று சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பொதுமக்கள் இடர்பாடுகளைச் சந்தித்தனர்.

நாடு முழுவதிலுமுள்ள அமைச்சுக்கள், திணைக்களங்கள், ஆணைக்குழுக்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகளின் இலங்கை நிர்வாக சேவை அலுவலர்கள் சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பொது நிர்வாக அலுவலர்கள் மீது பொய்க் குற்றச்சாட்டு முன் வைத்தல், சுயாதீனமாகக் கடமை புரிவதற்குப் பதிலாக அழுத்தங்களைக் கொடுத்தல், சம்பளம் மற்றும் கொடுப்பனவு முரண்பாடுகள், போக்குவரத்துக் கொடுப்பனவு முரண்பாடு, பதவி உயர்வு, அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் ஓய்வுபெற்ற அலுவலர்களைச் சேவையில் அமர்த்துதல் போன்ற பல்வேறு காரணங்களை முன் வைத்து, அலுவலர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டம் இன்றும் தொடரும் என்று அவர்கள் தெரிவித்தனர். கொழும்பு பொது நிர்வாக அமைச்சுக்கு முன்பாகப் பெரும்போராட்டம் நடைபெறவுள்ளது. கோரிக்கை தொடர்பில் உரிய தரப்பினருக்குப் பல தடவைகள் தெரியப் படுத்தியும் அதற்குத் தீர்வு கிடைக்காத நிலையில் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள், சுகவீன விடுமுறைப்போராட்டம் காரணமாக அலுவலகங்களுக்கு அலுவலர்கள் வருகைதரமாட்டார்கள். 25 மாவட்டச் செயலகங்கள், 334 பிரதேச செயலகங்கள், குடிவரவு, குடியகல்வு, ஆள்ப் பதிவு, சுங்கம், ஓய்வூதியம், தொழில், மோட்டார் போக்குவரத்து, ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாடு மற்றும் அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் ஆகியவற்றின் செயற்பாடுகள் முடங்கக்கூடிய சூழ்நிலை காணப்படுவதால் பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்கு வருந்துகின்றோம் என்று இல்கை நிர்வாக சேவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை - இந்தப் போராட்டத்தால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். தேவைகளை எதிர்பார்த்துச் சென்ற மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர். வவுனியா குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள ஊழியர்களும் பணிக்கு வராதமையால் கடவுச்சீட்டுடன் தொடர்புடைய சேவைகள் நேற்றுப் பாதிக்கப்பட்டன. (த-7,110)



## அலம்பில் றோ.க.த .வித்தியாலயத்தில் 3 பிரிவுகளுடன் கற்றல் வள நிலையம்

முல்லைத்தீவு,செப்.11

"அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" என்னும் செயற்றிட்டத்தில் முல்லைத்தீவு, அலம்பில் றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட ஆரம்பக்கல்வி கற்றல் வள நிலையம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்தக் கற்றல் வள நிலையத்தில் செயற்பாட்டறை, வாசிப்பறை, மொழி ஆய்வுகூடம் என மூன்று பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

மொழி ஆய்வுகூடத்தை வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், செயற்பாட்டறையை நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா, வாசிப்பறையை முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் உமாநிதி புவனராஜா ஆகியோர் திறந்து வைத்தனர்.

பாடசாலையின் அதிபர் ந.அல்பிரட் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், முல்லைத்தீவு கட்டடங்கள் திணைக்கள பொறியியலாளர் விவேகானந்தன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்க்ளான சி. லோகேஸ்வரன், அமலதாஸ், கோட்டக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (க-246)

## அறநெறிக்கல்வியின் முக்கியத்துவம் வெங்கலச் செட்டிகுளத்தில் ஊர்வலம்



வவுனியா,செப்.11

தேசிய அறநெறிக்கல்வி விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு வவுனியா வெங்கலச் செட்டிகுளத்தில்நேற்று விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தப்பட்டது.

இந்து சமய அறநெறிக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் முகமாக, தேசிய இந்து சமய அறநெறிக் கல்வி விழிப்புணர்வு மாதம் மற்றும் இந்து சமய அறநெறிக் கல்வி கொடி தினம் தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

"பூரணத்துவமான ஆளுமைப் பண்புக்கு அடிப்படை அறநெறிக் கல்வியே! " என்ற தொனிப் பொருளில் நாடு முழுவதும் விழிப்புணர்வு நடவடிக்கைகள்முன்னெடுக்கப் படுகின்றன.

அதனடிப்படையில்வெங்கலச் செட்டிகுளம் பஜார் வீதியில் அமைந்துள்ள சித்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து பிரதேச செயலகம் வரை அறநெறிக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் ஊர்வலம் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து பிரதேச செயலக முன்றிலில் பிரதேச செயலர் க.சிவகரன் நந்தி கொடியேற்றினார். அங்கு அறநெறிக் கீதம் இசைக்கப் பட்டது. பிரதேச செயலர் அறநெறிக் கல்வியின் முக்கியத்துவம் தொடர்பில் உரையாற்றினார்.

நிகழ்வில் உதவி பிரதேச செயலர் முகுந்தன், திட்டமிடல் பணிப்பாளர் எஸ். சண்முகநாதன், இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் சிவ. கஜேந்திரகுமார், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கி.சற்சுருவேணு, கலாசார உத்தியோகத்தர் ரா.பிறிஸ்கா, அறநெறி ஆசிரியர்கள், மாணவர்கள், ஆலய பரிபாலன சபையினர் கலந்து கொண்டனர். (சு-110)

## சிறைக்கைதிகளுக்கு மூக்கு கண்ணாடிகள்

வவுனியா,செப்.11

சிறைக்கைதிகள் வாரத்தை முன்னிட்டு வவுனியா சிறைச்சாலையில்உள்ள கண் பார்வைக் குறைபாடுகள் உள்ள கைதிகளுக்கு மூக்கு கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வு நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

சிறிசபாரட்ணம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் 30 கைதிகளுக்கு மூக்கு கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் கைதிகளின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

சிறிசபாரட்ணம் அறக்கட்டளையின் பன்னாட்டு ஏற்பாட்டாளர் ஏ. நித்தியானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் சிறைச்சாலை உயர் அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-110)

## பாடசாலைச் சேவை வாகனங்கள் மீது கிளிநொச்சியில் நேற்றுச் சோதனை

பாடசாலைக்கு மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் கிளிநொச்சியில் நேற்று சிறப்புப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

கிளிநொச்சி போக்குவரத்துப் பொலிஸாரின் ஏற்பாட்டில், கிளிநொச்சி பொலிஸ் நிலையம் முன்பாக பரிசோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றன.

கிளிநொச்சி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் ஜி. எச்.டி.கே. விஜேசேகரவினால் வாகனங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் விபத்துக்களைத் தவிர்க்கும் நோக்குடன் சோதனை மேற்கொள்ளப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். சோதனைக்குட்படுத்தப்பட்ட வாகனங்கள் தவிர்ந்த, ஏனைய வாகனங்களில் மாணவர்கள் ஏற்றி வரப்பட்டால் அவை கண்காணிக்கப்படும் என்று போக்கு வரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-6)



## தொடருந்துடன் மோதுண்டு முதியவர் சாவு

கொடிகாமம், செப்.11

தொடருந்துடன் மோதுண்டு வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை சாவகச்சேரி மருத்துவமனைக்கு முன்பாக உள்ள தொடருந்துத் தடத்தில் நடந்துள்ளது.

பேஸ் லைன் வீதி, கொழும்பு எனும் முகவரியைச் சேர்ந்த பழகராஜன் செல்லப்பா (வயது-75) என்பவரே உயிரிழந்துள்ளார். இவர் கடந்த 3 தினங்களாகச் சாவகச்சேரிப் பகுதியில் நடமாடி வந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில்இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த யாழ்தேவி தொடருந்துடன் மோதியே இவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைச் சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

அதேவேளை, கடந்த பெப்ரவரி மாதம் இதே இடத்தில் நடந்த தொடருந்து விபத்தில் நுணாவில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். தொடருந்துத் தடத்தை உந்துருளியில் கடக்க முயன்றபோது தொடருந்துடன் மோதி இவர் உயிரிழந்திருந்தார். (எ-9,159)

## கருத்தரங்கு

சாவகச்சேரி, செப். 11

"நவீன தொழில்நுட்பமும் அதன் பயன்பாடும்"என்ற தொனிப்பொருளிலான கருத்தரங்கு நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம், மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலைய மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. அரச தலைவர் செயலக ஊடகப் பிரிவின் அனுசரணையுடன் தென்மராட்சி இணைப்பாளர் அ.இராசலிங்கம் தலைமையில் இக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. கருத்தரங்கில் அரச தலைவர் ஊடகப்பிரிவின் செயலர் ஸ்ரீலால் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப் பட்டது. (ஐ-131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்டபோது

# அழிக்கப்பட்ட சத்திரச் சந்தையை அரசு மீள அமைத்துத் தரவேண்டும்

### மாகாண முன்னாள் உறுப்பினர் ஜெயசேகரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 11

*யாழ்ப்பாண நகரில் 38 வருடங்களுக்கு முன்னர் அழிக்கப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சத்திரச் சந்தையை அதே இடத்தில் நவீன முறையில் அமைக்க வேண்டும். 1981 ஆம் ஆண்டு நூல் நிலையம் எரிக்கப்பட்டபோதுதான் இந்தக் கட்டடமும் அழிக்கப்பட்டது. 38 வருடங்கள் கடந்தும் இந்தக் கட்டடம் மீள அமைக்கப்படவில்லை. அதை மீளமைக்கவேண்டும்.*

இவ்வாறு வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும், யாழ்ப்பாண வணிகர் கழக உப தலைவருமான இ.ஜெயசேகரன் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைக் கோருகின்றார்.

இது பற்றி அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

சுமார் ஒரு ஏக்கருக்கும் மேற்பட்ட பரப்பளவைக் கொண்ட சத்திரச் சந்தை நகர மத்தியில் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது. தமிழர்களின் அடையாளமாக யாழ்ப்பாண நகரில் அமைக்கப்பட்டிருந்த சந்திர சந்தை 38 வருடங்கள் கடந்தும் சீரமைக்கப்படாதது தமிழ் மக்கள் மத்தியில் வேதனையையும் விரக்தியையும் தோற்றுவித்துள்ளது. எனவே இந்தக் கட்டடத்தை சுமார் 8 மாடிகளைக் கொண்டதாக நவீன முறையிலானதாக அமைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.


இந்தக் கட்டடம் அதே இடத்தில் விரைந்து அமைக்கப்படும் பட்சத்தில் பல நன்மைகள் ஏற்படும். அதாவது,

1. தற்போது அந்த இடத்தில் சுமார் 100 இற்கு மேற்பட்ட சிறு வர்த்தகங்கள், பரம்பரையாகக் கடை வைத்திருப்பவர்கள். தற்போது தற்காலிகமாக கொட்டகைகளில் கடை நடத்தி வருகிறார்கள். இதற்கு மாநகர சபை வாடகை அறவீடு செய்கிறது. இங்கு சிறந்த கடைத் தொகுதி அமைக்கப்படுமானால் இவர்களுக்கு நிரந்தரக் கட்டடமும் நவீன வசதிகளும் கிடைக்கும்.
2. அந்த இடத்தில் வர்த்தகம் செய்பவர்கள் பாரம்பரிய உணவுப் பொருள்களையும் உள்ளூர் உற்பத்திப் பொருள்களையும் விற்பனை செய்து வருகிறார்கள். யாழ்ப்பாணத்துக்கு வரும் வெளிநாட்டவர்களும், எமது புலம்பெயர்ந்த மக்களும், தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகளும் இந்த இடத்துக்கு வராமல் செல்வதில்லை. எனவே இந்தக் கட்டடம் அமைத்தல் சுற்றுலாத் துறைக்கும் ஒரு வெற்றியாக அமையும்.
3. அந்தக் கட்டடம் அமையுமானால் ஒரு தளத்தில் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான சந்தைவாய்ப்பை மேலும் பெருக்கவும், போரால் பாதிக்கப்பட்ட பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கான சந்தைவாய்ப்பை வழங்கவும் அவர்களுடைய வாழ்வாதாரத்துக்கும் வழிவகுக்கும். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் உற்பத்திகளை அதிகரிக்கவும் ஊக்கமாக அமையும்.
4. இந்தக் கட்டடத்தில் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகம், வங்கிகள், பொழுதுபோக்குத் துறை (சினிமா அரங்கம்), வாகனத் தரிப்பிடம், நவீன உணவகங்கள், பல்பொருள் அங்காடிகள், நவீன மலசல கூடங்கள் எனப் பல துறைகளை அமைக்க முடியும்.
5. நில அமைப்பின் பிரகாரம் சுமார் 8 மாடிகளைக் கொண்ட கட்டடத்தை அந்தத் திட்டத்தின் மூலம் அமைக்கக் கூடியதாக இருக்கும்.
6. இந்தக் கட்டடத்தில் இரண்டு மாடிகளை வாகனத் தரிப்பிடத்துக்கு மட்டும் ஒதுக்குவதன் மூலமாக நகரில் வாகனத் தரிப்பிடப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர முடியும்.
7. இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலமாக நகரம் பல துறைகளில் நவீனமடையும். அத்துடன் நகரமும் துடிப்பு மிக்க நகரமாக, மக்களை மேலும் கவர்ந்திழுக்கும் நகரமாகவும் மாறும் வாய்ப்பு ஏற்படும். இதன் மூலமாகப் பலருக்கு வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான வாய்ப்புக்களும் நிறையவே உள்ளன.

1981 ஆம் ஆண்டு அழிக்கப்பட்ட இந்தச் சத்திரச் சந்தையை அமைக்க தலைமைஅமைச்சர் என்ற ரீதியில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்- என்றுள்ளது. (த)

## தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம் வெற்றிலைக்கேணி சிறி செல்வ விநாயகர் ஆலய தேர் வெள்ளோட்டம் நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 30 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. நாளை அதிகாலை ஆலயத்துக்கு புதிதாக அமைக்கப்பட்ட தேரின் வெள்ளோட்டம் இடம்பெறும். தொடர்ந்து காலை 7 மணியளவில் தேர்த் திருவிழா இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-70)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுச் சிறப்பு மிக்க தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று சிறப்புற இடம்பெற்றது. (க-7)



## பேருந்தை முந்திச் சென்ற டிப்பர் உந்துருளியுடன் மோதி விபத்து

கொடிகாமம், செப். 11

பேருந்தை முந்திச் செல்ல முற்பட்ட டிப்பர், உந்துருளியுடன் மோதி விபத்துக்குள்ளானது. அதில் உந்துருளியில் பயணித்தவர் படுகாயமடைந்தார்.

இந்த விபத்து ஏ-9 வீதியில் கொடிகாமம், சாவகச்சேரி பிரதேச சபைக்கு முன்பாக நேற்று முற்பகல் 11.30 மணிக்கு இடம்பெற்றது.

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற டிப்பர், பயணிகளை ஏற்றிக் கொண்டு நின்ற பேருந்தை முந்திச் செல்ல முற்பட்ட வேளை, யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் நோக்கிச் சென்ற உந்துருளியுடன் மோதி விபத்து நடந்துள்ளது.

படுகாயமடைந்த நபர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். அராலி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நபரே விபத்தில் காயமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-159)

### சாவகச்சேரி, தனன்களப்பு வீதியிலுள்ள

## கால்நடைப் பண்ணையில் சேவை வழங்கலில் இடர்

சாவகச்சேரி, செப். 11

சாவகச்சேரி, தனன்களப்பு வீதியில் கடந்த மாதம் இயங்கத் தொடங்கிய கால்நடை வைத்திய அலுவலகம் உரிய சுகாதார வசதிகளின்றி இயங்குகின்றது. அதனால் பணியாளர்களும் பயன்கருதி அங்கு செல்வோரும் பெரும் இடையூறுகளை எதிர்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுகாதாரக் கேடு காரணமாக பணியாளர்கள் அலுவலகக் கதவுகளை மூடிய நிலையிலேயே வைத்திருக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

குறித்த அலுவலகத்தின் ஒரு பக்கம் இந்து மயானமும் மறுபக்கம் கடலுணவு விற்பனை நிலையம் மற்றொரு பக்கம் கடலேரியை அண்டிய பகுதிகளில் கொட்டப்படும் குப்பைகளிலிருந்து வரும் இலையான்களின் தொல்லை மற்றும் துர்நாற்றம் என்பனபோன்ற சுகாதாரக் கேடுகளை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. அதனால் கதவுகளைத் திறந்து வைக்கமுடியாத நிலை காணப்படுகிறது என்று பணியாளர்கள் கூறியுள்ளனர்.

இவைமட்டுமன்றி, அலுவலகம் அமைந்துள்ள பகுதி மிகவும் தாழ்நிலமாகக் காணப்படுவதால் மழை காலத்தில் ஒரு அடி உயரத்துக்கு வெள்ளம் தேங்கி அங்கு சென்றுவரமுடியாத அவலம் காணப்படுகின்றது.

அலுவலகத்துக்கு வரும் பண்ணையாளர்கள் தமது ஈருருளிகளை விடுவதற்குப் பாதுகாப்பான கொட்டகையும் இல்லை என்று கால்நடைப் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது பற்றி குறித்த நிலையத்தின் கால்நடை மருத்துவரிடம் கேட்டபோது,

முன்னைய அலுவலகத்தில் இடநெருக்கடி காணப்பட்டபோதிலும், அலுவலர்கள் சுதந்திரமாகக் கடமையாற்றினர். தற்போதைய கட்டடத்தில் நிலவும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டால்தான் பண்ணையாளர்களுக்குச் சிறந்த சேவை வழங்க முடியும். இது பற்றி மாவட்டப் பணிமனையினருக்கும் அறிவித்துள்ளோம் என்று தெரிவித்தார். (த-9)

## தங்கக்குரல் தேர்வுக்கு வயதெல்லை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், செப்.11
வடக்கின் தங்கக்குரல் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளின் வயதெல்லை 30 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.
வட மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் வழிநடத்தலில், வட மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சுடன், ஆளுநர் செயலகம் இணைந்து வடக்கின் தங்கக்குரல் 2019க்கான தேர்வை நடத்தவுள்ளது.
இந்தக் குரல் தேர்வில் 15 தொடக்கம் 30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் பங்குபற்றலாம்.
சாஸ்திரீய சங்கீதம், மெல்லிசைப்பாடல், கிராமியப்பாடல்களை உள்ளடக்கி போட்டிகள் நடைபெறும்.
ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பப்படிவங்களை 'வடக்கின் தங்கக்குரல்' வட மாகாண ஆளுநர் செயலகம், பழையபூங்கா, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (க)

## மீசாலையில் அமைந்திருந்த சாவடியும் அகற்றப்பட்டது

சாவகச்சேரி, செப். 11
மீசாலை கமநல சேவைகள் நிலையத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த படையினரின் சோதனைச் சாவடி அகற்றப்பட்டுள்ளது.
கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலையடுத்து வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வீதிகளில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டன. நல்லூர்க் கந்தசுவாமி கோவில் பெருந்திருவிழாக் காலத்தில் ஏ-9 முதன்மை சாலையின் சில இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. இதன்போதே மீசாலை கமநல சேவைகள் நிலையத்துக்கு முன்பாகச் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டிருந்தது. அது நேற்று அகற்றப்பட்டுள்ளது.
ஆனையிறவில் அமைக்கப்பட்டிருந்த சோதனைச் சாவடி சில நாள்களுக்கு முன்னர் அகற்றப்பட்டிருந்தது. (த-9)

# தென்னை வண்டுகளை அழிக்கப் புதிய ஜெல்

யாழ்ப்பாணம், செப். 11
தென்னைகளைத் தாக்கும் சிவப்பு வண்டுகளைக் கட்டுப்படுத்துவதற்கு புதிய ஜெல் வகை ஈர்ப்பு பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாண பிராந்திய தென்னை பயிர் செய்கை சபை தெரிவித்துள்ளது.

தென்னைகளை அழிப்பதில் சிவப்பு வண்டுகளுக்குப் பெரும் பங்கு உண்டு. இந்த வண்டுகளின் தாக்கத்தில் இருந்து தென்னைகளைக் காப்பாற்றுவதற்கு குப்பிகளில் அடைக்கப்படும் பெரோமொம் திரவம் இதுவரை காலமும் பயன்படுத்தப்பட்டு வந்தது.
இதனை தென்னையில் வைக்கும் போது உடையும் சந்தர்ப்பம் மற்றும் ஆவியாகும் சந்தர்ப்பம் அதிகமாகக் காணப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதனால் மாற்று வழியாக தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் ஜெல் வகையான ஈர்ப்பு பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனை மரத்தில் வைப்பதன் மூலம் சிவப்பு வண்டு அதன் மணத்துக்கு ஈர்க்கப்பட்டு மரத்தை வந்தடையும். இதன் மூலம் வண்டுகளைப் பொறியில் சிக்க வைத்து அழிக்க முடியும்.
இந்த புதிய வகை ஜெல் அடுத்த மாதமளவில் பயனாளிகளுக்கு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இது ஆரம்பத்தில் மானிய முறையில் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## தேசிய மட்டப் போட்டியில் இளவாலை மாணவி முதலிடம்



யாழ்ப்பாணம், செப்.11
தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட தமிழ் மொழித்திறன் பேச்சுப் போட்டி பிரிவு 4 இல் இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலய மாணவி மேரில க்ஷியா அருள்ஞானசீலன் கணிதப் பிரிவில் முதல் இடத்தைப் பெற்றுள்ளார் என்று பாடசாலை தெரிவித்துள்ளது. (க)

# மாடு கடத்தியவர்களை மடக்கிப் பிடித்த மக்கள்

யாழ்ப்பாணம், செப்.11
மாடுகளை வாகனத்தில் கடத்திச் சென்றவர்களை மடக்கிப் பிடித்த கிராம மக்கள், அவர்களை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.
இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் காரைநகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது.
தீவகப் பகுதிகளில் மாடுகள் கடத்தப்படுவதுடன், அவற்றை அங்கேயே இரவோடிரவாக இறைச்சியாக்கி, எலும்புகள், தோல்களைப் பற்றைகளுக்குள் வீசும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின் றன.
புங்குடுதீவு, வேலணை மற்றும் ஊர்காவற்றுறைப் பகுதிகளில் ஏராளமான மாடுகள் இவ்வாறு கடத்தப்பட்டு, இறைச்சாக்கப்பட்டிருந்தன.
பொலிஸார், கடற்படையினர் பாதுகாப்புக்களையும், சோதனைகளையும் மேற்கொண்டு வருகின்ற போதும், கால்நடை வளர்ப்பாளர்களின் ஏராளமான மாடுகள் காணாமற் போன சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
காரைநகர் ஊரிப்பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு மாடுகள் கடத்தப்பட்டுள்ளன. அந்தப் பகுதியில் களவாக மாடுகள் கடத்திச் செல்லப்படுகின்றன எனச் சந்தேகிக்கப்பட்ட வாகனம் ஒன்றை நேற்று முன்தினம் நள்ளிரவு அந்தப் பகுதி கிராம அலுவலர் மற்றும் பொது மக்கள் ஒன்றிணைந்து மடக்கிப் பிடித்தனர்.
அந்த வாகனத்தில் 3 பசு மாடுகள் மற்றும் ஓர் காளை மாடு என்பன கடத்திச் செல்லப்பட்டுள்ளன. மாடுகளைக் கடத்திச் சென்றவர்களை மடக்கிப் பிடித்த மக்கள், ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.
காரைநகர் பகுதியில் பொதுமக்களின் மாடுகள் ஏதாவது காணாமற் போயிருந்தால், அது தொடர்பான உரிய அடையாளத்துடன் கிராம அலுவலரைத் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-21)

## யோகாசனக் கற்கை சனியன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 11
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால், இலவசமாக நடத்தப்படும் யோகாசன தியான கற்கை நெறியின் புதிய பிரிவு எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை நல்லூர் ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.
வார இறுதி நாள்களில் மட்டும் நடைபெறும் இந்த வகுப்புகள் இருபாலாருக்கும் தனித்தனிப்பிரிவுகளாக நடத்தப்படும். ஆண்களுக்கான பிரிவு சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 6.30 - 7.30 மணி வரையிலும், பெண்களுக்கான பிரிவு அதே நாள்களில் காலை 7.30, 8.30 மணி வரையிலும் நடைபெறும்.
நோயாளர்களுக்கு சிறப்புக் கவனமெடுத்தும் பயிற்றுவிக்கப்படும் இந்தக் கற்கை நெறியை முழுமையாகக் கற்பவர்களுக்கு, திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படும் என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-21)



## சரஸ்வதி வித்தியாலயத்துக்கு நிரந்தர நுழைவாயில் அமைப்பு

வவுனியா, செப்.11
வவுனியா - சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயத்துக்கு நிரந்தரமான நுழைவாயில் அமைப்பதற்கான அடிக்கல் நேற்று நடப்பட்டது.
பாடசாலையின் அதிபர் திருமதி ஜெயமனோகரி தலைமையில் நுழைவாயிலுக்கு விருந்தினர்களால் அடிக்கல் நடப்பட்டது.
நிகழ்வில் வர்த்தக, கைத்தொழில், நீண்டகால இடம்பெயர்ந்தோர் மீள்குடியேற்ற அமைச்சின் மக்கள் தொடர்பாடல் அதிகாரி மு.கா.முத்து, மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ஜெயதிலக், நகரசபை உறுப்பினர்களான எம்.லறீப், அப்துல் பாரி, ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.
வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதினின் பத்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பாடசாலைக்கு நுழைவாயில் அமைக்கப்படவுள்ளது. (க-110)

## வசதியற்ற மாணவர்களுக்கு உதவிகளை வழங்கத் தயார்

*லண்டன் ஆலயத் தலைவர் தெரிவிப்பு*

வவுனியா, செப்.11
இலங்கை அரசின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக, தாயகத்தில் வறுமை நிலையில் உள்ள மாணவர்களுக்கு உதவுவதற்கு லண்டன் ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம் தயாராகவுள்ளது என்று அதன் தலைவர் சொக்கலிங்கம் கருணைலிங்கம் தெரிவித்தார்.
வவுனியா, தம்பனைச்சோலை கேதீஸ்வரா வித்தியாலயத்தில் வசதியற்ற மாணவர்களுக்கு பசும்பால் வழங்கும் திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:
தாயகத்தில் வசதியற்ற மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்காகவும், பசும்பால் செயற்றிட்டத்துக்காகவும் மாதாந்தம் 15 ஆயிரம் பவுண்ஸ் நிதியை லண்டன் ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம் செலவு செய்து வருகிறது.
லண்டன் நாட்டு சட்ட திட்டங்களுக்கும், இலங்கை நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைவாகவும் எமது ஆலயத்தின் செயற்பாடுகள் தாயகத்தில் இடம்பெற்று வருகின்றன.
இவ்வாறான நலத்திட்டங்களுக்கு வழங்கப்படும் நிதிகள் அனைத்தும் ஆலயத்தின் அடியார்களால் வழங்கப்படும் நிதியிலிருந்தே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆலயத்தின் வருடாந்த வருமானத்திலிருந்து தாயகத்திலுள்ள வசதியற்ற மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு ஒரு தொகை நிதியை வழங்க வேண்டும் என்று தற்போது தீர்மானித்துள்ளோம்.
தாயகத்தில் மேற்கொள்ளப்படும் நலத்திட்டங்கள் ஒளிப்படங்கள் மூலம் அரசுக்கு உறுதிப்படுத்தி வருகின்றோம். ஏனெனில் தாயகத்தில் நாங்கள் எவ்வாறான உதவிகளை மேற்கொண்டு வருகின்றோம் என்று லண்டன் அரசுக்கு காண்பிக்க வேண்டிய பொறுப்பும் உள்ளது. ஆலயத்தின் கணக்காய்வறிக்கைகளை அவர்கள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர்.
அடுத்த தலைமுறை முன்னேறவேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் இந்த உதவித் திட்டங்களை நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம். கற்றல் நடவடிக்கைக்கு என்ன உதவிகள் தேவை ஏற்பட்டாலும், உங்கள் பாடசாலை அதிபரூடாக வேண்டுகோளை விடுக்கும்போது, நாங்கள் எங்களால் முடிந்த உதவிகளைச் செய்வோம் - என்றார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலிந்தவின் வெற்றிடத்துக்கு

## பீ.ஹேரத் நியமனம்: மைத்திரிக்கு ஏமாற்றம்

யாழ்ப்பாணம், செப். 11

ஐக்கிய பொதுமக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து உயிரிழந்தசாலிந்த திசநாயக்கவின் வெற்றிடத்துக்கு, மகிந்த அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் பீ. ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான அரசிதழை மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் வெளியிட்டுள்ளார்.

தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தால், அவரின் வெற்றிடத்துக்குப் புதிய நாடாளுமன்ற உறுப்பினரை நியமிக்க வேண்டும். அந்தக் கட்சி சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்கு தேர்வாகாத வேட்பாளர்களில் அதிகூடிய விருப்பு வாக்கைப் பெற்றவர், அந்த வெற்றிடத்துக்கு நியமிக்கப்படுவார். குருநாகல் மாவட்டத்தில் உயிரிழந்த சாலிந்தவுக்கு அடுத்தபடியாக விருப்பு வாக்கைப் பெற்றிருந்தவர் சாந்த பண்டார. அவர் தேர்தலில் தோல்வியுற்றிருந்தாலும், தேசியப் பட்டியல் ஆசனம் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

சாலிந்த உயிரிழந்த நிலையில், சாந்த பண்டாரவும் நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதால் அடுத்த நிலையிலிருந்து ஹேரத் நாடாளுமன்ற உறுப்பினராகும் நிலமை ஏற்பட்டது. சாந்த பண்டார மைத்திரி அணியைச் சேர்ந்தவர். ஹேரத் மகிந்த அணியைச் சேர்ந்தவர். மகிந்த அணியைச் சேர்ந்த ஹேரத், நாடாளுமன்ற உறுப்பினராவதை தடுக்கும் நோக்கில், சாந்த பண்டார நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்திருந்தார்.

ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர் சாலிந்த திசநாயக்க ஓகஸ்ட் 21ஆம் திகதி உயிரிழக்கும்போது, சாந்த பண்டார நாடாளுமன்ற உறுப்பினராக அங்கம் வகித்தமையால், அவரை சாலிந்தவின் வெற்றிடத்துக்கு நியமிக்க முடியாது என்ற சட்டச் சர்ச்சை உருவாகியிருந்தது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்கும் இந்த விடயம் கொண்டு செல்லப்பட்டிருந்தது. மாவட்டத்துக்கு தேர்வாகும் நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்பான பரிந்துரைகளை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரே முன்வைக்க வேண்டும். அதனடிப்படையில், பீ.ஹேரத்தை நாடாளுமன்ற உறுப்பினராக பரிந்துரைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் அரசிதழ் வெளியிட்டுள்ளார். (ஒ,5,105)

## புற்றுநோயால் பாதிக்கப்பட்டவராயின் 6 மாதங்கள் சம்பளத்துடன் விடுமுறை

அரச அலுவலர்களுக்கு அரசு சுற்றறிக்கை

யாழ்ப்பாணம், செப். 11

அரச சேவையில் உள்ளவர்கள் புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களாயின் 6 மாதங்கள் கால விடுப்புடன் முழுமையான சம்பளத்தைப் பெற முடியும் என்று பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் திணைக்களத் தலைவர்களுக்கு அமைச்சு அனுப்பிய சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசசேவையில் உள்ளவர்கள் புற்றுநோய்ச் சிகிச்சைக்கு உட்படும் நேரத்தில் 6 மாதங்கள் கால சிறப்பு விடுப்பு வழங்கப்படும். இந்த விடுப்புடன் அவருடைய மாதாந்தச் சம்பளம் முழுமையாக வழங்கப்படும். 6 மாதங்கள் கால சிகிச்சை விடுப்பு நிறைவடைந்த பின்னர் மேலும் சிகிச்சைக்கு விடுப்பு தேவைப்படுமாயின் அதனை, மருத்துவ சபையின் பரிந்துரைக்கு ஏற்ப மூன்று மாதங்களுக்குக் குறைந்த விடுப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்தச் சிறப்பு விடுமுறைதொடர்பாக கடந்தஜுலைமாதம் 19 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அதற்கு அமைவாக இந்த நடைமுறை பயன்பாட்டுக்கு வரும் வகையில் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)

ஐ.நாவில்

## இலங்கை தொடர்பில் ஆணையாளர் மௌனம்

கொழும்பு, செப். 11

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 42 ஆவதுகூட்டத்தொடரை ஆரம்பித்துவைத்து, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல்பசெலெட் அம்மையார் உரையாற்றியிருந்தார். அவர் தனது உரையில் பல்வேறு நாடுகளின் மனித உரிமைகள் நிலமைகள் குறித்து கவலை வெளியிட்டிருந்த போதும், இலங்கைவிவகாரங்கள்குறித்து எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 42 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் நேற்று இந்தக் கூட்டத்தொடரில் இலங்கை நிலமைகள் குறித்து கரிசனை வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும், ஐ.நா. மனித உரிமைகள் இந்தக் கூட்டத்தொடர் நிகழ்ச்சி நிரலில் இலங்கை தொடர்பான விவகாரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

எனினும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரம், போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்படும் லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்ட விவகாரம் என்பன குறித்து, இந்த அமர்வில் கரிசனை செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ,5)

## எல்பிட்டிய தேர்தலை ஒத்தி வையுங்கள்

ஐ.தே.க. கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 11

எல்பிட்டிய பிரதேச சபையின் தேர்தலை இடைநிறுத்தி வைக்குமாறு ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் எழுத்துமூலம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தல் அடுத்த மாதம் 11ஆம் திகதி இடம்பெறும் என்று அரசிதழ் வெளியாகியுள்ள நிலையிலேயே, ஐக்கிய தேசியக் கட்சி மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளது.

எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தலை நடத்துமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இதனையடுத்து அடுத்த மாதம் 11ஆம் திகதி தேர்தல் நடத்தப்படும் என்று அரசிதழை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் வெளியிட்டார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களில் ஒரு உறுப்பினர், அரச தலைவர் தேர்தல் முடிந்த பின்னர் பிரதேச சபைத் தேர்தலை நடத்துமாறு எழுத்தில் கோரியுள்ளார். இந்த விடயத்தை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கும் அனுப்பியுள்ளார்.

இந்த விடயத்தைக் குறிப்பிட்டே தேர்தலை ஒத்திவைக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது. (ஒ,5,105)

## தேர்தலில் 18 வேட்பாளர்கள் 16 மில்லியன் வாக்காளர்கள்!

கொழும்பு, செப். 11

நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் 18 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு தெரியப்படுத்தியுள்ளனர் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதான அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 17 பேர் தேர்தலில் போட்டியிடவுள்ளமை தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடவை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவும் தேர்தலில் சுயாதீனமாக போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளார்.

அரச தலைவர் தேர்தலில் 18 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அரச தலைவர் தேர்தலின் போது 2018 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல் கருத்திற்கொள்ளப்படும். அதற்கமைய, 159 லட்சத்து 92 ஆயிரத்து 96 பேர் தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். (ஒ,5)

## 8 அமைச்சர்களுக்கு எதிராக டிரான்ஸ்பரன்சி முறைப்பாடு!

கொழும்பு, செப். 11

2018/19 ஆம் ஆண்டுக்கான சொத்து அறிவிப்புகளை சமர்ப்பிக்கத் தவறிய எட்டு அமைச்சர்கள் மீது முறைப்பாடு பதிவு செய்யப்படவுள்ளதாக ஊழல் எதிர்ப்பு அமைப்பான டிரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இலஞ்சம் மற்றும் ஊழல்கள் தொடர்பாக விசாரணை செய்யும் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (ஒ,5)

## முன்னிலை சோஷலிஸக் கட்சியின் வேட்பாளர் துமிந்த நாகமுவ

கொழும்பு, செப். 11

இந்த ஆண்டு இறுதியில் நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் தமது கட்சியின் வேட்பாளராக துமிந்த நாகமுவ போட்டியிடுவார் என்று முன்னிலை சோஷலிஸக் கட்சி அறிவித்துள்ளது.

ஏற்கனவே பொதுமக்கள் முன்னணியின் சார்பில் கோத்தபாய ராஜபக்ச போட்டியிடவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் சார்பில் அநுரகுமார திசாநாயக்க வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

சிறிலங்கா சோஷலிஸக் கட்சியின் சார்பில் சூழலியலாளர் கலாநிதி அஜந்தா பெரேரா போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் நான்காவது வேட்பாளராக, துமிந்தநாகமுவவின்பெயர் முன்னிலை சோஷலிஸக் கட்சியால் முன்மொழியப்பட்டுள்ளது. (ஒ,5)

## இறந்த தமிழ் தொழிலாளியின் உடலை அடக்கம் செய்த விவகாரத்தில் பாலிதவுக்கு விளக்கமறியல்!

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி அமைச்சர் பாலித தெவரப்பெருமவை எதிர்வரும் செப்ரெம்பர் 16 ஆம் திகதிவரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மத்துகம நீதிவான் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்தது. தோட்ட தொழிலாளியொருவரின் சடலத்தை புதைக்க தோட்ட உரிமையாளர் இடம்கொடுக்க மறுத்திருந்தார். சடலத்தை புதைக்க நீதிமன்றத்தின் மூலம் தடையுத்தரவும் பெற்றிருந்தார். அதை மீறி சடலத்தை புதைத்த விவகாரத்திலேயே பாலித விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பாலித தெவரபெருமவுடன் இணைந்து இறுதிச்சடங்கை நடத்தினார்கள் என்ற குற்றச் சாட்டில் மேலும் நால்வரும் அவருடன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஒ,5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘பிரபல்யம்’ என்பது நாட்டை ஆள்வதற்கான தகைமையல்ல!

## மலிங்க தெரிவிப்பு

கொழும்பு, செப். 11

பிரபல்யம் என்பது ஆட்சி செய்வதற்கான தகைமை யல்ல. அது மக்களின் விருப்பமாகும். இவ்வாறு இலங்கை கிரிக்கெட் ரி-20 அணியின் தலைவர் லசித் மலிங்க தெரிவித்துள்ளார்.



ஊடகங்களிடம் நேற்றுமுன்தினம் கருத்துக் கூறும்போதே மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

“எனக்கு அரசியல் தொடர்பில் எதுவும் தெரியாது. பிரபல்யம் என்பது ஆட்சி செய்வதற்கானதகைமையல்ல. நிர்வா கத்துக்கும் பிரபல்யத்துக்கும் இடையில் வித்தியாசமுள்ளது. நான் அந்த வித்தியாசத்தை அறிந்துள்ளேன்.

நான் கிரிக்கெட் விளையாட்டில் மாத்திரமே பிரபல்யமானவன். கிரிக்கெட் விளையாட்டில் நான் முடிந்தவரை செய்வேன். பிரபல்யம் என்பது ஆட்சி செய்வதற்கான தகைமையல்ல. பிரபல்யம் என்பது மக்களின் விருப்பமாகும். எனினும் ஆட்சியென்பது நிர்வாகம் ஆகும். நிர்வாகத்துக்கும் பிரபல்யத்துக்கும் இடையில் வித்தியாசமுள்ளது. நான் அந்த வித்தியாசத்தை அறிந்துள்ளேன் - என்றார். (ஒ,5)



## காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் உண்மையை அறிந்தபின்னர் தீர்வு

### சஜித் பிரேமதாச தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.11

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நீங்கள் என்ன தீர்வு தருவீர்கள் என்று காணாமல் ஆக்கப்பட்ட ஒருவரின் தாய், அமைச்சர் சஜித் பிரேமதாசவிடம் கேட்டார். முதலில் உண்மை கண்டறியப்பட வேண்டும். அதன்பின்னரே எவ்வாறான தீர்வை எட்டலாம் என்று ஆராய முடியும் என்று அமைச்சர் சஜித் பிரேமதாச அந்தத் தாய்க்குப் பதிலளித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் ‘என்ரர்பிரைஸ் சிறிலங்கா’ கடன் திட்டம் தொடர்பான நடமாடும் சேவையைப்பார்வையிடுவதற்காக நேற்றுமுன்தினம் மாலை அமைச்சர் சஜித் பிரேமதாச அங்கு சென்றிருந்தார். அப்போதே தாய் ஒருவர் அமைச்சரிடம் இந்தக் கேள்வியைக் கேட்டார்.

போரின்போதும், இறுதிப் போரின்போதும் காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் தொடர்பாகவும், ஒப்படைக்கப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பாகவும் கரிசனையோடு பதிலளிக்கவேண்டும். அரசதலைவராகத் தெரிவானால் இந்த விடயத்தில் நீங்கள் எடுக்கும் தீர்வு என்ன என்று அந்தத் தாய் அமைச்சரிடம் கேட்டார்.

இந்தப் பிரச்சினை நீண்ட காலமாக இருக்கின்றது. இப்போதுதான் ஓ.எம்.பி. (காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பணியகம்) ஆரம்பிக்கப்பட்டுள்ளது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின்விடயத்தில்உண்மை கண்டறியப்பட வேண்டும். அதன்பின்னர் என்ன வழியில் தீர்வை எட்டலாம் என்று ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அது தொடர்பாக நிச்சயம் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் சஜித் குறிப்பிட்டார். (எ-105)

## ரூபவாஹினியை மைத்திரி கையகப்படுத்தியது ஏன்?

### விளக்குகிறார் இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, செப். 11

தொடர்ந்தும் இழப்பில் இயங்கி வரும் இலங்கை ரூபவாஹினிக் கூட் டுத்தாபனத்தின் முகாமைத்துவத்தை மாற்ற பல முறை முயற்சித்த போதும், அது தோல்வியடைந்ததாக ஊடகத்துறை அமைச்சரும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

முகாமைத்துவத்தில் மாற்றங்களை செய்ய முயற்சித்த போது, அரச தலைவர் மைத்திரிபால அதற்குத் தடையாக இருந்து வந்ததாகவும் அவர் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க, திறைசேரி, வரி செலுத்துவோரின் பணத்தில் இருந்து மாதந்தோறும் 40 மில்லியன் ரூபாவை வழங்கி வருகிறது.

இந்த நிலையில், நான் மேற்கொண்ட முயற்சியின் இறுதி முடிவாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அதிசிறப்பு அரசிதழ் அறிவித்தல் மூலம் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வந்து விட்டதாகவும் அமைச்சர் ருவான் விஜேவர்தன தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (ஒ,5)

## ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மைத்திரியின் கட்டுப்பாட்டுக்குள்

கொழும்பு, செப். 11

அரச தொலைக்காட்சியான ரூபவாஹினி நிறுவனத்தை, நேற்றுமுன்தினம் நள்ளிரவில் இருந்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தன்வசமுள்ள பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ், கொண்டு வந்துள்ளார்.

முன்னர் ஊடகத்துறை அமைச்சின் கட்டுப்பாட்டில் இருந்தரூபவாஹினி கூட்டுத்தாபனம், பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படுவதாக, அரச தலைவர் மைத்திரிபால அரசிதழ் அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் நியமனம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக, எழுந்த சர்ச்சைகளை அடுத்தே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அதேவேளை, எந்த நேரத்திலும் அரச தலைவர் தேர்தலை அறிவிப்பதற்கான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ள நிலையில், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஒ,5)

## மைத்திரிபாலவின் நடவடிக்கைக்கு சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

கொழும்பு, செப். 11

இலங்கை, ரூபவாஹினி கூட்டுத்தாபனம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டமை ஜனநாயகத்தை பாதிக்கும் செயல் என்று சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

அரச தலைவர் அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமையை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அந்த இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

சுதந்திர ஊடக இயக்கம் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தொடர்பாக குறிப்பிட்டுள்ளது.

அரசமைப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை முறைகேடாக பயன்படுத்துவதில்லை என்று உறுதிமொழியளித்து பதவியேற்ற நல்லாட்சி அரச தலைவர் ஒருவரின் கீழ் இவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது தொடர்பாக கவலையடைவதாக சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

அரசமைப்பின் பிரகாரம் வேண்டியதோர் விடயத்தை அரசதலைவரின் கீழ் கொண்டுவருவதற்கு உள்ள உரிமையை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டதாக விளங்கும் இந்தத் தீர்மானம், தற்போதைய அரசியல் சூழ்நிலையோடு வைத்து நோக்கப்பட வேண்டுமென்று சுதந்திர ஊடக இயக்கம் கருதுவதாக குறிப்பிட்டுள்ளது.

அரசமைப்பின் பிரகாரம் எதிர்வரும் அரச தலைவர் தேர்தல் காலத்தில், வெகுசன ஊடகங்கள் சமூகப் பொறுப்புமிக்க விதத்தில் செயற்படுவதை உறுதி செய்வது தேர்தல் ஆணையாளருக்கு உள்ள பொறுப்பு என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அரச தலைவரின் கீழ் உள்ள ஒரு விடயம் அத்தகைய ஒழுங்குமுறை கட்டமைப்புக்கு உட்பட்டதா? என்பது கேட்கப்பட வேண்டிய சட்டப் பிரச்சினையாகும் என்றும் அந்த இயக்கம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, அரச தலைவர் பிரதி நிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சியும் அரச தலைவர் வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கேற்பவும் அரச தலைவரின் பொறுப்பில் உள்ள பாதுகாப்பு அமைச்சின் கீழ் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தை கொண்டுவருவது விவாதத்துக்குரியது என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.5)

## கோத்தாவின் வெற்றிக்கு மொட்டு முக்கியம்!

கொழும்பு, செப். 11

அரச தலைவர் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச வெற்றி பெறுவதற்கு மொட்டு சின்னமும் முக்கியமானது என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

மொட்டு சின்னம் தொடர்பாகவே பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார். அவரின் இந்த கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித்த



அபேகுணவர்தன இதனை தெரிவித்துள்ளார்.

“வெற்றிபெற வேண்டுமாயின் பிரபல்யமான வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படுவது அவசியம் என்பதுபோல் கட்சியின் சின்னமும் முக்கியமானது. மொட்டு என்பது கற்போது மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்துள்ளதாகவும், அதனை அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொண்டுள்ளன” - என்றார். (ஒ,5)

## பெருமாள் - பிள்ளையான் சிறைக்குள் சந்திப்பு!

கொழும்பு, செப். 11

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனை, வடகிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் மட்டக்களப்புச் சிறைச்சாலையில் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது அரசியல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டதாக அறியமுடிகின்றது. கிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் பூ.பிரசாந்தன், வவுணதீவு பிரதேசசபை உறுப்பினர் குகன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
@UthayanPrint
புதன்
செப்ரெம்பர் 04, 2019

கே.எஸ்.சிவஞானராஜா

# கற்பனைக்கும் எட்டாத சிற்பங்களின் கண்காட்சி



திருமறைக் கலாமன்ற, கலைத்தூது அழகியல் கல்லூரியின் சிற்பக் கற்கைநெறி மாணவர்களால், அண்மையில், பொற்புடன் விளங்குமாறு அற்புதக் கண்காட்சி ஒன்று காட்சிப்படுத்தப்பட்டது. இதனைக் கலைத்தூது அழகியல் கல்லூரி இயக்குநர்கள், அதிபர், நிர்வாகிகள், ஆசிரியர், மாணவர்கள் என யாபேருமாக ஒழுங்கமைத்து வெற்றி கொண்டனர்.

றக்கா வீதியில் அமைந்த கலைத்தூது கலாமுற்ற ஓவியக் கூடத்தில் இந்தக் கண்காட்சி பார்வையாளர்களின் நெஞ்சங்களைக் கவர்ந்து கொண்டது. பதினெட்டுச் சிற்பங்கள் மிகவும் பத்திரமாக வடிவமைக்கப்பட்டுப் பேறாக்கப்பட்டன.

"மோகன ஓவியம் நீ படைத்தாய் எந்தன்
மோகத்தைத் தூண்டியே காதல் தந்தாய்
தாகமும் கொண்டேன்
நான் தழுவியணைத்திடவே
வேகமாய் வாராயோ வேளையில்
ஓவியனே"

மகா வித்துவான் இயலிசைவாரிதி, கலைமாமணி, அமரர் வீரமணி ஐயா மேற்படி சிற்பங்களைப் பார்வையிட்டிருப்பாரானால் சொக்கித் திளைத்திருப்பார். கோபுரச் சிற்பங்கள் பேரல அதிசயமான ஒரு மாபெரும் படைப்பு! ஆமாம்! அதனால் சிற்பிகளின் கரங்களுக்கு மோதிரம் பரிசளிக்கலாம். நடராஜா சுரேந்திரராஜா, பாலசிங்கம் கிருஷ்ணா இலட்சுமிகாந்த், ஞானசேகரம் மஜீபன், மாதவராஜா ஸ்ரீசாந்தன், ஜே.ஏ.ஜோன் டிமெல் லம்போர்ட், நகுலேஸ்வரன் பகீரதன் ஆகியோருடைய படைப்புக்களே ஓவியக் கூடத்தை அலங்கரித்தன.

**பொதுவான தன்மை**

தமிழர்களின் பாரம்பரியமான கலாசாரப் பண்பாடுகளைப் பிரதிபலிக்கும் வகையில் பெரும்பாலானவை படைக்கப்பட்டு இருந்தன. அத்துடன் மனோதர்ம கற்பனை அம்சங்களும் வேண்டிய இடத்தில் புகுத்தப்பட்டிருந்தன. கலைஞர் ஒவ்வொருவருக்கும் கற்பனை இல்லாவிடின் கலை தனது குடியிருப்பை இடம்பெயர்த்து, கலைஞனின் படைப்பைத் தட்டுப்பாடாக்கிவிடும் என்பதனால், இலங்கை, இந்தியச் சிற்பிகள் முன்னேற்பாடாகவும் முன்மாதிரியாகவும் தாம் படைக்கின்ற சிற்பங்களில் மனோதர்மமாக ஏதோவொன்றைச் சொல்லாமல் சொல்லிவிடும் பாக்கியத்தைப் புகுத்தியிருப்பார்கள். இங்கு வைக்கப்பட்டிருக்கும் அத்தனை சிற்பங்களிலும் கற்பனை அபாரம்.

**சிற்பங்கள்**

தேயிலைக் கொழுந்து பறிக்கும் மலையகப் பெண்ணின் சிற்பம் எல்லோருடைய மனங்களையும் சிறைப்பிடித்தது. அந்தப் பெண் இரண்டு குழந்தைகளைச் சுமக்கின்றாள். மார்போடு உள்ள தனது சொந்தக் குழந்தை வறுமையோடு பாலுக்காகத் தவிக்கிறது! அழுகிறது. ஆம்! பின்புறமாக உள்ள கொழுந்துக் கூடையில் தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டி வாழும் தோட்ட முதலாளியினது குழந்தை. செல்வச் செருக்கோடு கூடையில் ஜாலியாக இருப்பதற்கு இவள் தன்னை ஈகிறாள். ஒரு குழந்தை ருசியோடு வாழ்வதற்கு, ஒரு குழந்தை பசியோடு தவம் கிடக்கிறது. அர்த்தமுள்ளதாக, ஒவ்வொருவரையும் ஈர்க்கும் மலையக மக்களின் உண்மையான தாற்பரியத்தை சுரேந்திரராஜா நிஜமாக்கியுள்ளார். நல்லதோர் படைப்பு.

இரண்டாவதாக உள்ளத்தை அபகரித்த ஒரு சிற்பமாக கருக்கலைப்புச் செய்யப்படுகின்ற பரிதாப நிலையைப் புட்டு வைப்பதாக ஒரு பெண் உருவம் சிருட்டிக்கப்பட்டுள்ளது. உள்ளபடி உருக்குலையும்படியாக உரிய உபகரணங்களோடு குறைமாதச் சிசுவானது பெண்ணின் வயிற்றுக்குள் இருந்து தன்னைக் காப்பாற்றுமாறு அலறுகின்றது. எல்லோருக்கும் இந்தச் சிசுவின் அலறல் கேட்கட்டும்.

மூன்றாவதாக ஒரு முதியவரின் தனிமை. அந்த வயதிலும், தொழிலோடும், உணர்வோடும், உயிரோடும், பசியால் வாடுகின்றார். போர்ப்பதற்காக ஒரு சால்வை. பண்பாட்டுக் கோலமுடன் தலைப்பாகை. அரையில் ஒரு சிறு துண்டு. வெறிச்சோடிய உடம்பு. இவர் எங்குதான் போகப் போகிறாரோ யாமறியோம். சுமார் எண்பது வய[illegible] பாலும் இவர் [illegible] இருக்க வேண்டும். இவரது கால்களைப் பார்க்கும்போது இன்னும் பத்து வருடங்கள் வாழ முடியும். காரணம் இவருக்கு எந்த வருத்தமும் இல்லை. பசி ஒன்றுதான் வருத்தமாகும். மஜிபன் இவரை ஒருபோதும் இறக்க விடப்போவதில்லை. காரணம் அவரிடம் ஒரு காப்பகம் உண்டு. முழுக்க முழுக்க இலவசமே.

நான்காவதாக இலங்கையின் சகவாழ்வையும் சகோதர வாழ்வையும் மத நல்லிணக்கத்தையும் புலப்படுத்தவல்ல ஒரு அழகிய பெண். இந்தச் சிற்பத்தை இலங்கையர் எவரும் உரிமை கோர முடியும். பாலன்னறுவை சிகிரியா, சேர, சோழ பாண்டிய, திராவிடக் கலைப் பண்பாடுகளை ஊடகமாக்கிய ஒரு சிற்பம். ஸ்ரீசாந்தன் மதச் சார்பற்ற ஒரு நாட்டை இலங்கையில் எதிர்பார்க்கின்ற தூரநோக்குக்கு இந்தச் சிற்பம் நல்லதோர் எடுத்துக்காட்டு. கலைநயம் சொட்டும் விலையுயர்ந்த படைப்பு இது.

கல்லிலே கலைவண்ணம் செதுக்கிய ஜோன் டிமெல் லம்போர்ட் பார்வையில் நவீன பார்வை கொண்ட ஒரு இளைஞன் வாட்டசாட்டமான உடலோடு நாய்க் குட்டியை அரவணைத்தவாறு இலவசம் இல்லாத ஒரு சமூகத்தைப் படைப்பதற்காக உழைப்பை முதலீடு செய்யுமாறும் அதற்கு உங்கள் உடலை வல்லமை செய்து முயற்சியால் இந்த நாட்டைப் பொன்னாக்குங்கள் என்றவாறு ஒரு சிற்பம் லம்போர்ட்டுக்கு வரமாகிறது. சிற்பம் கதைக்கிறதே! "என்னிடம் வாருங்கள் ஆறுதல் தருகின்றேன், ஆதாரம் தருகின்றேன்" என்றவாறு உள, உடல் வல்லமைக்கு வாழ்வளிக்கின்றார். தத்துவரூபமான படைப்பு.

ஐந்தாவதைத் தொடர்ந்து ஆறாவது படைப்பாக மாணவர்களுக்குப் பாடம் சுமையல்ல. புத்தகங்களே மிகப் பெரிய சுமை என்பதை பகீரதன் மிகவும் பிரம்மாதமாகச் சிற்பமாக்கி உறைக்குமாறு வடித்துள்ளார். பொற்புடனான புதுமை தொனிக்கிறது.

சிற்பங்களாக உயிரூட்டப்பட்ட ஏனைய பன்னிரண்டில் பேறானவையாக:

- காளை அடக்குதல் (ஜல்லிக்கட்டு)
- பிளாஸ்ரிக் பாவனையும் பாதகமும்
- செல்பி எடுப்பவர்கள் படும்பாடு
- ஆசிரியத் தொழிலின் மகத்துவம்
- பெண்களுக்கான வன்முறையிலிருந்து விடுதலை
- பெண்ணடிமைத்தனம் பொடிப் பொடியாகட்டும்
- பெண்கள் போதைப்பொருளல்ல. அவர்கள் நாட்டின் கண்கள்! அவர்களைத் தெய்வமாகப் போற்றுங்கள்.
- பசியுள்ளவனுக்கு மீனைக் கொடுக்காதீர்கள்! மீன்பிடிக்கக் கற்றுக் கொடுங்கள்.
- கல்வியழகே அழகு
- சூழல் மாசடைதல்
- கலையின்பமே நிலையின்பமாம்.

ஆகியவை இதயத்தில் நீடு வாழ்கின்றன. பலர் இவற்றைப் பார்க்கவில்லையே என ஆதங்கம் அடைந்துள்ளார்கள். முதன்மை விருந்தினராக வருகை தந்த கொழும்பு கட்புல ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சரத் சந்திரஜீவா, மெய்மறந்து இரசித்து சிற்பங்களுக்கு வாழ்வும் வரமும் அளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதப்படாத நாடக வரலாறு- 19

# ந.சுந்தரம்பிள்ளையின் நாடகங்கள் காற்றோடு என்றும் கலந்திருக்கும்


தேவநாயகம் தேவானந்த்



ந.சுந்தரம்பிள்ளை

ஈழத்தின் எழுதப்படாத தமிழ் நாடக வரலாற்றில் பல நல்ல நாடக முயற்சிகள் பதியப்படாமலே போயின. பதியப்பட்டவைகளை மட்டுமே வரலாறாகச் சொல்ல முற்படுகின்ற துயரமான நிலமைகள் உள்ளன. இதனைக் கடந்த பதிவுகளிலும் பார்த்திருக்கின்றோம். "நாடகம் நிகழ்காலத்துக் கலை. அது நிகழ்ந்த மாத்திரத்திலேயே அழிந்து விடுகிறது. பின்னர் அது பார்வையாளர்களின் மனதில் வாழ்வது மட்டுமே அதுவே அதன் உயிர்வாழ்வு" என்ற வாதங்களும் உள்ளன.

ஈழத்தின் தமிழ் நாடக வரலாற்றைப் பதிகின்றபோது அது பல்வகைமையுடன் இருக்கவேண்டும். அப்போதுதான் தனியொரு பாதையை வரையறுத்தல் தவிர்க்கப்பட்டுப் பல பாதைகளின் பல விதமான பயணங்களைத் தரிசிக்க முடியும். அதுவே,



ஒருகலைப் பயணத்தைச் செழிமைப்படுத்தும். உண்மையில் வரலாறு என்பது 'ஏகம்' அல்ல அது 'அனேகம்'. ஈழத்து நாடக வரலாறும் அவ்வாறானதே. இந்த எண்ணம் விதைக்கப்பட்டு அதிலிருந்து வரலாற்றுப் பயணங்கள் நடைபெறவேண்டும்.

எழுதப்படாத நாடக வரலாற்றில் ஈழத்தின் வானொலி நாடக வரலாறு ஒரு பகுதியாக கொள்ளப்பட வேண்டும். நாடகமும் அரங்கியலும் கற்கையில் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை இது ஒருபகுதியாக இணைக்கப்படல் வேண்டும். இந்த எண்ணத்தை விதைத்து அதற்காக தனது வாழ்நாள் முழுமையும் குரல் கொடுத்து வந்தவர் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. அவர் வானொலி நாடகத்தைப் பல்கலைக்கழகக் கற்கையில் சேர்க்க வேண்டும் என்று பல கடிதங்கள் எழுதியதை அறிவோம். அது எதுவும் பயனளிக்கவில்லை. கிணற்றில் போட்ட கல்லாக அப்படியே கடக்கிறது போலும்.

ந.சுந்தரம்பிள்ளை இலங்கை வானொலி நாடகத்தின் தந்தை என்று சொல்லலாம். 330 வானொலி நாடகங்களை எழுதியுள்ள மகத்தான கலைஞன். இலங்கை வானொலியின் தமிழ் சேவை உலக தமிழ் வானொலிகளின் தாய், அதன் நாடகங்கள் உலகப் புகழ் பெற்றன. அந்த உன்னதமான வரலாற்றில் நவாலியூர் ந.சுந்தரம்பிள்ளை தனக்கான தனித்துவமான வரலாற்றைப் பதிவுசெய்து போயிருக்கிறார்.

✦✦✦✦

நாடகம் என்பது காண்பிய விளைவுகளை ஏற்படுத்தும் ஒரு கலை என்ற வரையறை இருந்தாலும் இது கேட்பிய மற்றும் காண்பிய விளைவுகளைக் கொண்டதாகும். வானொலி நாடகங்களைப் பொறுத்தமட்டில் முற்றிலும் ஒலியின் செயற்றிறனால், ஒலி விளைவால் கற்பனையில் காண்பிய விளைவுகளை ஏற்படுத்தும் ஒன்றாகவுள்ளது. உரையாடல், இசை மற்றும் ஒலிவிளைவுகளை கொண்டு கேட்பவருக்கு கதாபாத்திரங்களையும் கதையையும் கற்பனைசெய்ய உதவுகிறது.

இது உடல் பரிமாணத்தில் செவிக்குரியது, ஆனால் உளவியல் பரிமாணத்தில் சக்திவாய்ந்த ஒரு காட்சியாகும். வானொலி நாடகத்திலும் பல வகைகள் உள்ளன. குறிப்பாக வானொலி, ஆவணப்படம், புனைகதைகளின் நாடகப்படுத்தப்பட்ட படைப்புகள், அதேபோல் இசை, பாடல் வடிவ நாடகம் மற்றும் ஓபரா உள்ளிட்ட பல நாடகங்களும் அடங்கும்.

வானொலி நாடகங்கள் வானொலி அறிமுகமான தன் பின்னர் தோன்றி வளர்ச்சியடைந்த ஒரு நாடக வடிவம். 1881ஆம் ஆண்டு காலகட்டங்களில் இதன் வேர்களை இனங்காணமுடியும். இருப்பினும் 1921ஆம் ஆண்டு தொடக்கம் 1940ஆம் ஆண்டு வரை உலகில் முக்கியமான முன்னணி பொழுதுபோக்காக இருந்தது. பின்னர் 1950ஆம் ஆண்டுகளில் தொலைக்காட்சியின் வருகையுடன், வானொலி நாடகம் அதன் கேட்போர்களை இழக்கத் தொடங்கியது. இருப்பினும், பெரும்பாலான நாடுகளில் இது இன்றும் பிரபலமாக உள்ளது. பாமரர் முதல் படித்தவர் வரை பொழுதுபோக்குக்கான வலுவான சாதனமாகவுள்ளது. மேடை நாடகத்தில் இயக்குநர் அல்லது படைப்பாளிகள் கற்பனை செய்ததையே காணலாம். வானொலி நாடகத்தைப் பொறுத்தவரை, கேட்பவர் பேசும் சொற்களையும் உரையாடலையும் சத்தங்களையும் கேட்கும்போது கற்பனையைப் பயன்படுத்த வேண்டும். இந்தக் கற்பனையை உருவாக்குவதற்கான அடிப்படை வானொலி நாடக எழுத்துருக்கள், அதனைப் படைப்பவன் அற்புதமான கற்பனாசக்தி மிக்க கலைஞன். அவ்வாறானதொரு கலைஞன்தான் சுந்தரம்பிள்ளை எனலாம்.

✦✦✦✦

"வானொலி நாடகம் எழுதுவது என்பது ஒரு தனித்துவம் வாய்ந்த கலையாகும். நாடகக் கலையையும் வானொலி என்ற ஊடகத்தின் தன்மையையும் நன்கு அறிந்தவர்களே அதைத் திறம்பட எழுத முடியும். இந்தத் துறையில் பல்லாண்டு கால அனுபவம், தேர்ச்சி, முதிர்ச்சி என்பவற்றைப் பெற்றவர் ந.சுந்தரம்பிள்ளை. இலங்கை வானொலி தமிழ் நாடக வளர்ச்சியில் சுந்தரம்பிள்ளையின் பங்கு குறிப்பிடத்தக்கது என்று இவரைப்பற்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதியாக இருந்த பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் குறிப்பிடுகிறார். தான் வானொலி நாடகங்கள் எழுதுவதற்கு தான்தோன்றியாகவே முயற்சித்ததாகக் குறிப்பிடுகிறார் சுந்தரம்பிள்ளை, "எனக்கு எவரும் நாடகம் எழுதக் கற்றுத்தரவில்லை. இளம் வயதிலிருந்தே நாடகங்களையும் நாடகங்கள் பற்றிய நூல்களையும் ஆங்கிலத்தில் வாசித்தே நாடகம் எழுதப் பழகினேன். வானொலி நாடகங்களைக் கேட்டே வானொலி நாடகங்கள் எழுதத் தொடங்கினேன்" என்று குறிப்பிடுகிறார்.


சுந்தரம்பிள்ளையின் வானொலி நாடகங்கள் மேடையிலும் நிகழ்த்தக்கூடியவையாக இருப்பது அதன் தனித்தன்மையாகும். வெள்ளம், சுறுசுறுப்பு, பக்கத்துவீட்டு ரி.வி, இது ஒரு கம்பஸ் கதை, மறதி, பருவத்தே பயிர் செய், இடமாற்றம், தெய்வம் அன்றன்றுக்கும், முதலாம் பிள்ளை, பந்தம் போன்ற நாடகங்களை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

சுந்தரம்பிள்ளை யின் நாடகங்கள் யாழ்ப்பாணச் சமூகத்தைச் சித்தரிப்பவை. குறிப்பாக நடுத்தர வர்க்கத்தின் பலவீனங்களையும் போலித் தனங்களையும் கிண்டல் செய்து தனது நாடகங்களில் வெளிப்படுத்தியிருந்தார் எனலாம்.

330 வானொலி நாடகங்களையும் 26 மேடை நாடகங்களையும் எழுதியுள்ள மகத்தான கலைஞன் 1980ஆம் ஆண்டில் இலங்கை வானொலியில் இவரது முதலாவது வானொலி நாடகம் 'நானே ராஜா' நாடகம் ஒலிபரப்பாகிறது. தனக்கு எந்த நிலையிலும் சாவு இல்லை என்று சொன்னவர் சுந்தரம் பிள்ளை. அதனைத் தனது 27ஆவது நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார். "நான் இலங்கைத் தமிழ் பேசும் எல்லோரும் இலங்கை மண்வாசனை நாடகத்தைப் படிக்கவும் எழுதவும் நடிக்கவும் வழிசமைத்தவன், இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் உள்ளவரை இலங்கைத் தமிழும் வாழும். இலங்கைத் தமிழ் உள்ளவரை இலங்கை மண்வாசனை நாடகமும் வாழும். இலங்கைத் தமிழ் மண்வாசனை நாடகம் உள்ளவரை எனது பெயரும் வாழும்" என்று குறிப்பிடுகிறார்.

18 நாடக நூல்களை எழுதியுள்ளார். 80 வானொலி நாடகங்களை அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார். முதலாவது நாடகத் தொகுதியான 'கெட்டிக்காரர்கள்' நாடகத் தொகுதியை 1988ஆம் ஆண்டு வெளியிட்டார். இவரது நாடகங்கள் எல்லாம் காற்றோடு கலந்திருக்கும். அவரும் இப்போது காற்றோடு கலந்துவிட்டார். அவரது மறைவு ஈழத்து வானொலி நாடக உலகுக்குப் பேரிழப்பாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலைமாமணி விருதுபெற்ற மூத்த கலைஞர் செபஸ்தியான் மாசிலாமணி

தேசிய ஒருமைப்பாடு, அரச கருமமொழிகள், சமூகமேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஏற்பாட்டில் தமிழ் இலங்கையர் பாரம்பரிய மற்றும் நவீன கலைகள் அரச விருது வழங்கும் விழாவில் நானாட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த மூத்த கலைஞர் செபஸ்தியான் மாசிலாமணிக்கு கலைமாமணி எனும் விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருது வழங்கும் நிகழ்வானது கொழும்பு தாமரைத்தடாக அரங்கில் அமைச்சர் மனோ கணேசன் தலைமையில் கடந்த 2ஆம் திகதி நடைபெற்றது

கலைமாமணி செபஸ்தியான் மாசிலாமணி சிறு வயது முதல் கலை இலக்கியங்களில் அதீத ஈடுபாடு கொண்டவர். நாட்டுக் கூத்து, இசை, நாடகத்துறை, வில்லுப்பாட்டு, நாட்டுப்புற இயல்துறையில் மிகவும் சிறந்து விளங்கியதோடு, மனுநீதி கண்ட சோழன், புனித அந்தோனியார் உட்பட பதினொரு மேடை நாடகங்களுக்கு அண்ணாவியாரக இருந்து நெறியாள்கை செய்துள்ளார்

அத்துடன் இவர் எழுதி நெறியாள்கை செய்த நாட்டுக் கூத்துக்களாக பாஞ்சாலி சபதம், தாவீதின் வெற்றி போன்ற பதினான்கிற்கும் மேற்பட்டவை உள்ளடங்குகின்றன. (213)



## சமாதான நீதிவான்கள் நியமனம்

முல்லைத்தீவு, விசுவமடு, தொட்டிலடியைச் சேர்ந்த கனகசபை குலசிங்கம் அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி செ.லெனின்குமார் முன்னிலையில் தீவு முழுவதற்குமான சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (ம)



மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் உப அதிபர் ஐயாத்துரை குணசீலன் தீவு முழுவதற்குமான சமாதான நீதிவானாக அண்மையில் யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் பதவியேற்றார்.



தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த கொடிகாமம் போக்கட்டி அ.த.க. பாடசாலை அதிபர் திருநாவுக்கரசர் அபரா ஜிதன் யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் அண்மையில் தீவு முழுவதற்குமான சமாதான நீதிவானாகப் பதவியேற்றார்.

## இராசையா சிறீதரனுக்கு 'கலைமாமணி' விருது

யாழ்ப்பாணம், நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த வில்லிசைக் கலைஞரும், ஆன்மிக எழுத்தாளருமான இராசையா சிறீதரன், 'கலைமாமணி' என்ற விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு தாமரைத் தடாக மண்டபத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற இந்து கலாசார அமைச்சின் விருது வழங்கும் நிகழ்வில் வைத்து அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

## பண்டிதை பொன் பாக்கியத்தின் மறைவு தமிழ் உலகுக்கு இழப்பு

சுழிபுரம், அருள் மிகு பறாளாய் விநாயகரும் அருள் மிகு சிவசுப்பிரமணிய பெருமானும் அருளாட்சி செய்யும் உத்தம பூமியாகும். இத்தகைய சிறப்புக்கள் நிரம்பிய சுழிபுரம் கிழக்குக் கிராமத்தில் பிறந்தவரே பண்டிதை பொன் பாக்கியம். பண்டிதை அம்மாவின் வாழ்வு ஒப்பற்ற வரலாறாகும். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் விற்பனர். சிறந்த விளையாட்டு வீராங்கனையாகவும் மிளிர்ந்திருந்தார். அத்துடன் சிறந்த வழிகாட்டி ஆசானாகவும் மிளிர்ந்தவர். போதனையிலும் சாதனையிலும் மாணவர் நலனுக்காகவும் ஊர் மக்களது மேம்பாட்டுக்காகவும் உழைத்த சீமாட்டி ஆவார். அவற்றுக்கெல்லாம் அடிப்படைக் காரணமாக அமைந்தவர். சைவ சித்தாந்த விழுமியங்களையும் கற்றுத் தெளிந்து உத்தம ஆசிரியையாக வாழ்ந்தார். இயம நியமங்களிலும் ஒழுக்கத்திலும் பண்பிலும் உயர்ந்து விளங்கியவர்.

ஆயிரம் பிறை கண்டு சைவ சித்தாந்த வாழ்வை வாழ்ந்த உத்தம பெரும் பண்புகள் நிறைந்த பண்டிகை அம்மாவின் இழப்பு தமிழ் கூறும் நல் உலகத்துக்கு ஈடுசெய்யமுடியாத ஒன்றாகும். அவர்களது பிரிவால் துயருறும் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கல்கள்.

*சித்த மருத்துவர் மருத்துவகலாநிதி*
*டீ.ஏ.எம்.எஸ்.நாகரத்தினம் கணேசலிங்கநாதன்*


## கலாபூசணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் இழப்பு நாடகக் கலைக்கு பெரும் பின்னடைவு

கடந்த வாரங்களாக கடும் நோய்வாய்ப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கலாபூசணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை சிகிச்சை பயனின்றி கடந்த 8ஆம் திகதி அதிகாலை சிவபதமடைந்தார். அன்னார் அராலியில் 1933ஆம் ஆண்டு அவதரித்து தனது ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணம் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்திலும் உயர் கல்வியை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பட்டப்படிப்பை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் மேற்கொண்டு, பட்டம் பெற்று புனிதமான ஆசிரியத் தொழில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். பிறந்த மண்ணான அராலியில் வானிவிலாசசபை, சரஸ்வதி சனசமூக நிலையம், சரஸ்வதி நாடக மன்றம், சரஸ்வதி விளையாட்டுக்கழகம், சரஸ்வதி மகா வித்தியாலயம் போன்ற நிறுவனங்களில் அங்கத்தவராக இருந்து இவற்றின் வளர்ச்சியிலும் மற்றும் கிராமத்தின் கல்வி, சமய, சமூக, கலை, கலாசார முன்னேற்றத்துக்கும் தன்னாலான தொண்டை ஆற்றிவந்தார். குறிப்பாக அராலி சரஸ்வதி நாடக மண்டபத்தினூடாக பல நாடங்களை எழுதி இயக்கி பெருமையுடன் அரங்கேற்றியிருந்தார். இவரது நாடகங்கள் இலங்கை வானொலியிலும் தேசிய மட்டத்தில் பல மேடைகளிலும் அரங்கேறியுள்ளன. அதுமட்டுமன்றி பல நாடகக் கலைஞர்களையும் திரைப்பட நடிகர்களையும் உருவாக்கிய பெருமை அன்னாரைச் சேருமென்றால் அது மிகையாகாது.

எல்லோருடனும் அன்பாகவும் - பண்பாகவும் - நட்பாகவும் பழகி ஒரு பண்புமிக்க உன்னதமான மனிதராக வாழ்ந்து மக்கள் மத்தியில் நீங்காத இடம்பெற்ற ஒரு மாமனிதராக வாழ்ந்து காட்டி இன்று எம்மையெல்லாம் விட்டு மறைந்துள்ளார். அன்னார் வாழ்ந்த காலத்தில் நாங்களும் வாழ்ந்தோம் என்று பெருமைபட்டுக்கொண்டாலும் அமரரின் இழப்பு தமிழ் நாடகத்துறைக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு மட்டுமல்லாது, பேரிடியாக அமைந்து உள்ளதென்பதை மறுப்பதற்கில்லை.

*அராலியூர் க.மார்க்கண்டேயர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூரில் சிறப்புற்றது சைவம் தழைத்தோங்க









இராமநாதபுரத்தூர் நிசாந்தன்

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் அண்மையில் சிறப்புற நடைபெற்று முடிவடைந்திருக்கின்றது. அந்த வகையில் குறித்த உற்சவ காலங்களில் நல்லூரன் ஆலய சுழலில் நம் கலை, பண்பாட்டம்சங்கள் மற்றும் சைவ சமய நெறி முறைகளையும் பேணிக் காக்கும் வகையில் பல்வேறுபட்ட செயற்பாடுகள் சிறப்புற நடைபெற்றிருந்தமை நாம் அனைவரும் நன்கறிந்ததேயாகும். அவற்றில் யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கம் நடத்திய சைவம் தழைத் தோங்க எனும் நிகழ்வு மனங்கொள்ளத்தக்கதாக அமைந்திருந்தது. சைவ மாணவர்களின் திறமைகளையும், அவர்களின் ஆற்றலையும் வெளிக்கொணரும் வகையிலும் தற்காலத்து சைவ மாணவர்களுக்கு ஆன்மிக நெறிகளை கற்றுக்கொடுப்பதாகவும் இந்த நிகழ்வு அமைந்திருந்தமைகுறிப்பிடத்தக்கதாகும்.

### சைவம் தழைந்தோங்க நிகழ்வில் அரங்கேறியவை

நல்லூரான் உற்சவத்தில் கொடியேற்றம் முதல் தீர்த்த உற்சவம் வரை தினமும் இரவு 7 மணி முதல் இரவு 9 மணி வரை இந்த நிகழ்வு நடைபெற்றிருந்தது. நல்லூரின் நல்லை ஆதீனத்துக்குப் பின் வீதியில் அமையப்பெற்ற சிறப்பு கலையகத்தில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது. நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக மாணவர்களுக்கான சைவ சமய மற்றும் தமிழ் மொழியறிவு சார்ந்த வினாவிடை நிகழ்வு நடைபெற்றிருந்தது. இந்த நிகழ்வை அடுத்து பாடசாலை மாணவர்களினதும் ஏனைய கலைஞர்களினதும் நடனம், பாடல், இசைச்சங்கமம், விவாதம், பேச்சு, வில்லுப்பாட்டு போன்ற பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன. அனைத்து நிகழ்வுகளும் அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### மாணவர்களுக்கான வினா விடைப் போட்டி

சைவம் தழைத்தோங்க நிகழ்வில் முதல் நிகழ்வாக நடைபெறும் மாணவர்களுக்கான சைவ வினா விடை நிகழ்வானது தினமும் இரவு 7 மணி தொடக்கம் 7.30 மணி வரை இடம்பெற்றிருந்தது. இப்போட்டி நிகழ்வு அனைவரது கவனத்தையும் பெரிதும் ஈர்த்திருந்தது எனலாம்.

இத்தகைய போட்டியானது 1995ஆம் ஆண்டுக்கு முன்னர், இந்த மண் பற்றிய சிந்தனையுடன் வாழ்ந்த மக்களால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. ஆனால் பிற்பட்டு வந்த காலங்களில் அது விடுபட்டுப்போனது. எனினும் இதனை யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் தற்போது மீண்டும் தழைத்தோங்கச் செய்திருக்கின்றது எனலாம். அந்த வகையில் இந்தப் போட்டி நிகழ்வில் பல மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடனும், விருப்பத்துடனும் பங்குபற்றியிருந்ததைக் காண முடிந்தது. இந்த வினா விடைப் பகுதியில் சைவம் சார்ந்த வினாக்கள் பத்து, தமிழ் மொழி சார்ந்த வினாக்கள் பத்து மற்றும் பொது அறிவு சார்ந்த வினாக்கள் ஐந்து எனவாறு மொத்தம் 25 (இருபத்தைந்து) வினாக்கள் மாணவர்களிடம் தொடுக்கப்படும். அதற்கு மாணவர்கள் உரியவாறு விடையளித்து அதிகமான விடையளித்த மாணவர்களுக்கு, யாழில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கு ஏற்றவாறு அவர்களுக்கு பண வவுச்சர்கள் தினமும் வழங்கப்பட்டிருந்தன.

### வினா விடைப் பகுதியில் உள்ளடக்கப்பட்டவை

இந்த வினா விடைப் போட்டியின் போது மாணவர்களுக்கு அவர்களது பாடப்பரப்பைத் தாண்டி பல்துறை சார்ந்த விடயப் பரப்பில் அறிவினை வளர்க்கும் முகமாகவும், இம் மண்ணின் சிறப்பம்சங்களையும், நல்லூர் ஆலயம் குறித்த வரலாற்றினையும், ஏனைய சைவ சமய பெருமைகளையும் அறிந்து கொள்ளும் முகமாக ஒவ்வொருநாளும் குறித்த வினா விடைப் பகுதியானது அமைந்திருந்தது. இந்தப் போட்டி நிகழ்வானது யாழ். தமிழ்ச் சங்கத் தலைவர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் மற்றும் யாழ் தமிழ்ச் சங்க பொதுச் செயலர் இ.சர்வேஸ்வரா ஆகியோரின் ஒழுங்குபடுத்தலில், பல்கலைக்கழக மற்றும் கல்வியல் கல்லூரிகளின் விரிவுரையாளர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், அத்துடன் சமயப் பெரியார்கள் எனப் பல்துறை சார்ந்தோர் இவ் வினா விடைப் போட்டியைத்தொகுத்துவழங்கியிருந்தனர்.

> “இன்றைய இளம் சமுதாயத்தினர் குறிப்பாக மாணவச் சந்ததியினர் ஆன்மிக வழியிலே செல்வதற்கு நாம் வழிசமைக்க வேண்டும். அதனை யாழ்ப் பாணத் தமிழ்ச் சங்கம் முன்னெடுத்திருக்கின்றது எனலாம். ஆக நாமும் நம் சைவம் தழைத்தோங்கிட வழிவகை செய்திடுவோம்.

### ஆர்வத்துடன் கலந்த மாணவர்கள் குழாம்

இத்தகு வினாவிடைப் போட்டியில் பாடசாலைமாணவர்களில் தினமும் 70 முதல் 80 வரையான மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர். மாணவர்களை பெற்றோர்கள் ஆர்வத்துடன் அழைத்து வந்து இந்தப் போட்டியில் அவர்களை கலந்து கொள்ளச் செய்தனர். மாணவர்கள் தினமும் பல்வேறு பட்ட தகவல்களை அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது என்பதை அவர்கள் வாயிலாகவே அறிந்து கொள்ள முடிந்தது. குறிப்பாக இந்த நிகழ்வு ஒரு நேரலை நிகழ்வு என்பதால் முகநூல் மற்றும் இணையத்தளம் வாயிலாகவும் போட்டியில் வினவப்படும்வினாக்களுக்குபலரும்ஆர்வத்துடன் விடையளித்தி ருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இதில் ஆச்சரியம் மிக்க சிறப்பம்சமாக மாணவர்களில் பெரும்பாலானவர்கள் கலாசார ஆடைகளுடன் குறிப்பாக ஆண் மாணவிகள் வேட்டி அணிந்தும், பெண் மாணவிகள் முழுப் பாவாடை சட்டையுடனும் வருகை தந்திருந்தமை பார்ப்பதற்கு மனமகிழ்ச்சியை கொடுத்தது. ஆனால் கவலையளிக்கும் விடயமாக இந்தப் போட்டிகளின்போது தினமும் ஆரம்பப் பிரிவு வகுப்பு மாணவர்களே அதிகம் கலந்து கொண்டிருந்தமையும், மேல் வகுப்பு மாணவர்கள் விரல் விட்டு எண்ணும் அளவிலேயே கலந்துகொண்டிருந்தமையையும் அவதானிக்க முடிந்தது. இதற்கு என்ன காரணம் என அறிந்து கொள்ளமுடியவில்லை.

### நிகழ்வில் அதிதிகளாக அணி சேர்த்தவர்கள்

சைவம் தழைத்தோங்க நிகழ்வுக்குத் தினமும் சிறப்பு அதிதிகளாக கல்விப்புலம் மற்றும் ஆன்மிகப்புலம் சார்ந்த பல பெரியோர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். அவ்வகையில், நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள், யாழ். சின்மயா மிசன் வதிவிட ஆச்சாரியர் சுவாமி சிதாகானந்தர், செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் இ. இளங்கோவன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் சி.சத்தியசீலன், மாநகர ஆணையாளர் த.ஜெயசீலன், யாழ்.இந்துக் கற்கைகள் பீடாதிபதி கலாநிதி சுகந்தினி ஸ்ரீமுரளி தரன், யாழ்.பல்கலைக் கழக கல்வியியல் துறைத் தலைவர் கலாநிதி ஜெ.இராசநாயகம், தமிழ்ச் சங்கப் பெருந்தலைவர் அ.சண்முகதாஸ் என மேலும் பலரும் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டு சிறப்புச் சேர்த்திருந்தனர்.

### என்றும் சைவம் தழைத்தோங்கட்டும்

நல்லூரில் நடைபெற்ற இந்த சைவம் தழைத்தோங்க நிகழ்வானது, தொலைக்காட்சி மற்றும் இணையத்தளம் வாயிலாகநேரலையாகஒளிபரப்பப்பட்டமையால் எம் நாட்டில் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்களும், புலம் பெயர் தேசத்தவர்களும் இந்த நிகழ்வுக்குதம் ஆதரவுகளை வழங்கியிருந்தனர். நிகழ்வுகளில் கலை சார்ந்த பலரும் தத்தம் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் கலை நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தனர். அதுபோல பாடசாலை மாணவர்கள் சைவ விழுமியப் பண்புகளை கடைப்பிடித்து, சைவத்தின் பெருமைகளை அறிந்து கொண்டனர். ஆகவே இன்றைய இளம் சமுதாயத்தினர் குறிப்பாக மாணவச் சந்ததியினர் ஆன்மிக வழியிலே செல்வதற்கு நாம் வழிசமைக்க வேண்டும். அதனை யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் முன்னெடுத்திருக் கின்றது எனலாம். ஆக நாமும்நம்சைவம் தழைத்தோங்கிட வழிவகை செய்திடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'என் நினைவில் நிந்தவூர்'

# இக்பால் ஹஸனின் நூல் வெளியீடு

■ ஏ.எல்.எம்.சலீம்

கிழக்கிலங்கையில் பழம்பெருமைமிக்க முஸ்லிம் கிராமம் நிந்தவூர். இந்த வகையில் நிந்தவூர்க் கிராமத்தின் வரலாறு ஆரம்பம் முதல் இன்றுவரை ஒரு தனித்துவ அடையாளத்தின் அடிப்படையில் தலை நிமிர்ந்து பயணிக்கின்றது.

கிழக்கிலங்கையின் அமைதிக்கும் - சமாதானத்துக்கும் - இன நல்லுறவுக்கும் - நல்லிணக்கத்துக்கும் ஒரு முக்கிய அடையாளம் நிந்தவூர்க் கிராமமே என்றால் அதில் இரண்டாம் கருத்து இருக்க முடியாது. இனமோதல்கள் கோரத் தாண்டவமாடிய காலகட்டங்களில்கூட தமிழ்- முஸ்லிம் நல்லுறவுக்கு எடுத்துக் காட்டாகவும் சமாதான விரும்பிகளைக் கொண்ட கிராமமாகவும் பேசப்பட்ட பேசப்படும் முன்மாதிரி முஸ்லிம் பிரதேசமும் இதுவாகும். இத்தகைய முக்கியத்துவமிக்க பழம்பெரும் கிராமமான நிந்தவூரின் வரலாற்றைக் கட்டியம்கூறி நூல் ஒன்று அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

நிந்தவூரைச் சேர்ந்தவரும் ஓய்வுபெற்ற நில அளவையாளருமான எம்.எச்.இக்பால் ஹஸன் இந்த வரலாற்று நூலைப் பல்வேறு ஆய்வுகளுக்கு மத்தியிலும் எழுதியுள்ளார்.

'என் நினைவில் நிந்தவூர்' எனும் பெயரில் இக்பால் ஹஸன் எழுதிய இந்த நூலின் வெளியீட்டு விழா கடந்த வாரம் முதலாம் திகதி நிந்தவூர் பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் பெருமளவிலானோரின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது.

நிந்தவூர் நலன்புரி சங்கத் தலைவரும் ஓய்வுபெற்ற மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருமான எம்.எச்.யாகூப் ஹஸன் தலைமையில் நடைபெற்ற இந்த வெளியீட்டு விழாவில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.திலீப நவாஸ் அதிதியாகக் கலந்து கொண்டார்.

மேலும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மூத்த சட்டத்தரணியுமான ஆரிப்சம் சுடீன், நிந்தவூர் பிரதேச செயலர் ரீ.எம்.எம்.அன்ஸார், நிந்தவூர் பிரதேச சபைத் தவிசாளர் எம்.ஏ.எம்.தாஹிர், பிரதித் தவிசாளர் வை.எல்.சுலைமா லெவ்வை உட்படப் பலர் முதன்மை அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் நூலின் முதற்பிரதியை பிரபல தொழிலதிபரும், பொறியியலாளருமான இஸட் எம்.ஹைறு முதன்மை விருந்தினரிடமிருந்து பெற்றுக்கொண்டார். அதேவேளை சிறப்பு விருந்தினர்களான அரண்காவலர், கவிஞர் எஸ்.ஏ.ஆர்.எம். செய்யதுஹஸன் மௌலானா, கலாபூசணம் எஸ்.முத்துமீரான், தமிழ்ப் பண்டிதமணி திருமதி மைமுனா செயினுலாப்தீன் ஆகியோருட்பட நூலாசிரியரும் பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டனர்.

மேலும் நிகழ்வில் நூல் அறிமுக உரையை தென்கிழக்கு பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் எப்.எச்.அகமட்ஷிப்லியும்நூல்மதிப்பீட்டுசிறப்புரையைஇலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன செய்தி நடப்பு விவகாரப் பிரிவு பிரதிப் பணிப்பாளர் யூ.எல்.யாகூப்பும், நூலாய்வுரையை கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் மூத்த உதவிச் செயலர் எம்.ரீ.ஏ.நிசாமும் ஆற்றியதுடன் நிந்தவூர் கலை இலக்கியப் பேரவையின் தலைவர் டாக்டர் ஏ.எம்.ஜாபிர் வாழ்த்துக் கவிதையும் பாடினார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் திலீப் நவாஸ் நிகழ்வில் உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்.

"ஓய்வுபெற்ற நில அளவையாளர் இக்பால் ஹஸனின் இந்த நூல் முன்னுதாரணமான அரும் பொக்கிசமாகும். அவரது இந்தப் பங்களிப்புக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். நில அளவையாளராகப் பெரும் சேவைகள் புரிந்து ஓய்வுபெற்றுள்ள நிலையிலும் இக்பால் ஹஸன் இந்த வரலாற்று நூலை எழுதியதன் மூலம் நிந்தவூர் மண்ணுக்குப் பெரும்பங்களிப்பை ஆற்றியுள்ளார்.

நிந்தவூர் மண்ணின் பெருமையை வரலாற்றை, ஆளுமைகளை, குடும்ப வரலாறுகளை, வரலாற்றுப் பின்னணிகளை சிறந்த முறையில் தெளிவுபடுத்திய இந்த நூல் முக்கியத்துவமிக்கதாகும்.

தான் இளைப்பாறிய நிலையிலும் சோர்ந்து ஒதுங்கி விடாமல் இந்தப் பொக்கிசமான நூல் மூலம் சமூகத்தின் பிரதேசத்தின் பெருமைமிக்க வரலாறுகளை எடுத்தியம்பி நாம் எவருக்கும் இரண்டாம் இடத்தியில்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளார். இக்பால் ஹஸனின் பெருமுயற்சியின் வெளிப்பாடான 'என் நினைவில் நிந்தவூர்' நூலுக்காக நாம் அவருக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்" - என்றார்.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன செய்தி நடப்பு விவகாரப் பிரிவுப் பிரதிப் பணிப்பாளர் யூ.எல்.யாகூப் நூல் மதிப்பீட்டு சிறப்புரையாற்றுகையில், "ஒரு ஊரின் வரலாற்றை எத்தனை பேரும் எழுதலாம். ஆனால் வரலாறு ஒன்றாகவே இருக்க வேண்டும். இந்த நூலை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் ஆய்வுக்குட்படுத்தி நூலாசிரியர் இக்பால் ஹஸனுக்கு கலாநிதிப் பட்டம் வழங்க முன்வரவேண்டும்" - என்றார்.

நூல் வெளியீட்டு விழா ஏற்பாடுகளை நிந்தவூர் மேர்ஸா பவுண்டேசன் மற்றும் ஹஸன் குடும்பத்தினர் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

















# செங்கலடி மத்திய கல்லூரியின் வருடாந்த சஞ்சிகை வெளியீடு!

■ பே.சபேஷ்

மட்டக்களப்பு, செங்கலடி மத்திய கல்லூரியின் வருடாந்த சஞ்சிகை வெளியீட்டு விழா கல்லூரி முதல்வர் குமாரசாமி அருணாசலம் தலைமையில் கடந்த சனிக்கிழமை மாலை நடைபெற்றது.

1999ஆம் ஆண்டு முதன்முதலில் கல்லூரி முதல்வர் வ.கந்தசாமியின் வழிகாட்டலில் கோல் எனும் பெயரில் சஞ்சிகை வெளியிடப் பட்டிருந்தது.

10ஆவது கோல் சஞ்சிகை வெளியீட்டு விழாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


### தலிபான்களுடனான பேச்சு விவகாரம்

# அமெ. நிராகரித்துள்ள நிலையில் பேச்சுக்கு அழைத்தது ஆப்கான்

காபுல்,செப்.11

தலிபான்களுடனான பேச்சை அமெரிக்கா நிறுத்தியிருக்கின்ற நிலையில், தலிபான்களுடன் பேசுவதற்கு ஆப்கான் அதிபர் அஷ்ரப் கானி அழைப்புவிடுத்தார்.





ஆப்கானில் தலிபான்கள் நடத்திய தாக்குதலில் அமெரிக்கச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.


அதைத் தொடர்ந்து தலிபான்களுடனான பேச்சை நிறுத்துவதாக அமெரிக்க அரச தலைவர் ட்ரம்ப் அறிவித்தார். இந்த நிலையில், ஆப்கானிஸ்தானின் அரச தலைவர் அஷ்ரப் கானி தலிபான்களைப் பேச்சு மேடைக்கு அழைத்துள்ளார். இதுகுறித்து அஷ்ரப் கானி கூறும்போது, "தலிபான்களுடன் பேசுவதற்கு எந்த நிபந்தனையும் இல்லை. நாங்கள் அமைதிப் பேச்சுக்குத் தயாராகவே இருக்கிறோம்." என்றார். பேச்சுகளுக்கு முன்னர் தலிபான்கள் நடத்துகின்ற தாக்குதலை நிறுத்த வேண்டும் என்று குறிப்பிட்ட அவர் தலிபன்களின் தலைவர் ஹிபாதுல்லாவுடன் ஆலோசனை செய்வதற்கு அழைப்பும் விடுத்தார். ஆனால் ஆப்கான் அரசு அமெரிக்காவின் கைப்பாவையாகச் செயற்படுகிறது என்று தலிபான்கள் விமர்சித்துள்ளனர்.

**பின்னணி**

ஆப்கானிஸ்தான் அரசுக்கும் தலிபான்களுக்கும் இடையே உள்நாட்டுப்போர் நீடித்து வருகிறது. அங்கு அமைதியை ஏற்படுத்துவதற்குப் பன்னாட்டு அளவில் முயற்சிகள் நடக்கின்றன. ஆப்கனில் நடந்து வரும் போரில் ஆப்கான் அரசுக்கு ஆதரவாக அமெரிக்கா செயற்படுகிறது.

அதிலிருந்து தன்னை விடுத்துவித்துக் கொள்வதற்கு அமெரிக்கா கடந்த சில ஆண்டுகளாக முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. 9 சுற்றுகள் வரை அமைதிப் பேச்சுக்கள் அமெரிக்கா தலைமையில் நடந்தன.

இதன் அடிப்படையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தைத் தலிபான்கள் தரப்பு ஏற்றுக்கொண்ட நிலையில், இது தொடர்பான முன்னெடுப்புக்காக அமெரிக்கப் பிரதிநிதி கள் பாகிஸ்தானில் கலந்துரையாடினர். தலிபான்களின் தாக்குதல்கள் தொடர்வதால் அமைதிப் பேச்சுக்களை நிறுத்துவ தாக அறிவித்தார் ட்ரம்ப்.



## இரண்டு ஏவுகணைகளை பரிசோதித்தது வடகொரியா

### தென்கொரியா தெரிவிப்பு

சியோல்,செப்.11

இரண்டு ஏவுகணைச் சோதனைகளை வடகொரியா நடத்தியிருப்பதாகத் தென்கொரியா தெரிவித்தது. இது குறித்துத் தென்கொரிய இராணுவத் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

'பியோங்கன் மாகாணத்தின் தென் பகுதியில் அடையாளம் தெரியாத இரண்டு ஏவுகணைச் சோதனைகளை வடகொரியா நடத்தியது. இந்தச் சோதனை கிழக்குக் கடற்கரையோரப் பகுதியில் நடத்தப்பட்டது. வடகொரியா தொடர்ந்து நடத்தும் ஏவுகணைச் சோதனைகளைக் கண்காணிப்போம். என்று தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்கா - வடகொரியா இடையே அணு ஆயுதச் சோதனைகள் தொடர்பாகப் பேச்சுக்கள் நடந்துவரும் நிலையில் வடகொரியா அதிகளவு ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகிறது. வடகொரியாவின் இந்தச் செயல் அமெரிக்கா - வடகொரியா பேச்சில் பெரும் எதிர்வினையை உண்டாக்கும் என்று கருதப்படுகிறது.

## ஹொங்கொங் விவகாரத்தில் தலையிடுகிறது அமெரிக்கா!

### கேரி லொம் எச்சரிக்கை

ஹொங்கொங்,செப்.11



ஹொங்கொங்கின் உள்விவகாரங்களில் அமெரிக்கா தேவையில்லாமல் தலையீடுவதாகக் ஹொங்கொங் நிர்வாகத் தலைவர் கேரி லொம் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: ஹொங்கொங்கின் உள் விவகாரங்களில் பிற நாடுகள் தலையீடுவது தேவையற்றது. மேலும் இந்தத் தலையீடு அமெரிக்காவுடனான பொருளாதாரம் மற்றும் பரஸ்பர உறவுகளைப் பாதிக்கும் என்றார். ஹொங்கொங் விவகாரத்தில் வெளிநாட்டினர் யாரும் தலையிட வேண்டாம் என்றும் ஹொங்கொங் அரசின் முடிவுக்கு முழு ஆதரவையும், மதிப்பையும் நாம் அளிப்போம் என்றும் சீனா கூறியிருந்தமை குறிப்பி டத்தக்கது.

**பின்னணி**

சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங்கொங்கின் கைதிகளைச் சீனாவுக்கு நாடுகடத்தி வழக்கு விசாரணைகளைச் சந்திக்க வைக்கும் முகமாகக் ஹொங்கொங் நிர்வாகத்தால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை எதிர்த்துக் ஹொங்கொங் மக்கள் போராடுகிறார்கள். அவர்கள் அங்குள்ள அமெரிக்கத் தூதரகத்துக்குச் சென்று அமெரிக்க அரச தலைவர் டொனால்ட் ட்ரம்பைத் தங்கள் விவகாரத்தில் தலையிட்டுத் தங்களைச் சீனாவின் பிடியில் இருந்து விடுவிக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர். இந்த நிலையில் ஹொங்கொங் எங்கள் உள்நாட்டு விவகாரம். அதில் அமெரிக்காவோ பிரிட்டனோ தலையிட்டு எங்கள் இறையாண்மையைச் சிதைக்கக் கூடாது எனச் சீனா கூறியது. தற்போது ஹொங்கொங்கின் நிர்வாகத் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



## தமிழகத்தில் பரவுகிறது டெங்கு 1,800 பேர் இதுவரை பாதிப்பு!

புதுடெல்லி,செப்.11

இந்தியாவின் தமிழகத்தில் வேகமாகப் பரவி வரும் டெங்குக் காய்ச்சலால் இதுவரை ஆயிரத்து 800 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தமிழகத்தின் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், மதுரை, கோவை உட்படப் பல பகுதிகளிலேயே டெங்குக் காய்ச்சல் இவ்வாறு பரவத் தொடங்கியுள்ளது.

தமிழகத்தின் பல பகுதிகளிலும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பலரும் டெங்குவால் பாதிக்கப்பட்டு அரச தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தமிழகத்தில் இந்த ஆண்டில் இதுவரை ஆயிரத்து 800க்கும் மேற்பட்டோர் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டதாக அரச புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

# நிலவில் வீழ்ந்து கிடக்கிறது சந்திராயனின் தரையிறங்கு கருவி


### இஸ்ரோ விஞ்ஞானிகள் தகவல்

புதுடெல்லி,செப்.11

இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சி நிலையமான இஸ்ரோவால் நிலவு நோக்கி ஏவப்பட்ட சந்திராயன் - 2 விண்கலத்தின் தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில், அதன் தரையிறங்கு கருவி நிலவில் வீழ்ந்து கிடப்பதாக இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

நிலவை ஆய்வு செய்வதற்காக சந்திரயான் - 2 விண்கலத்தை இஸ்ரோ ஆய்வு மையம் ஜூன் 22ஆம் திகதி ஏவியது. கடந்த சனிக்கிழமை அதிகாலை அது நிலவில் தரை இறங்க முயன்றது. அப்போது அதன் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

தொடர்பு துண்டிக்கப்பட்டது இஸ்ரோவுக்குப் பெரும் ஏமாற்றத்தையும், அதிர்ச்சியையும் அளித்தது. இந்த நிலையில், நிலவின் தென் துருவத்தில் அதன் தரையிறங்கு கருவி விழுந்து கிடப்பதைக் கண்டுபிடித்துள்ளதாகவும், விழுந்து கிடக்கும் அதை ஒளிப்படம் எடுத்து இருப்பதாகவும், அதனுடன் தொடர்பு கொள்வதற்கு முயற்சித்து வருவதாகவும் இஸ்ரோவின் தலைவர் கே.சிவன் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானைகளின் அச்சத்தில் பழம்பாசி கிராம மக்கள்

முல்லைத்தீவு,செப்.11



முல்லைத்தீவு பழம்பாசி கிராமத்துக்குள் காட்டு யானைகள் இரவு நேரங்களில் புகுவதால் மக்கள் பெரும் அச்சத்துடன் இரவுப் பொழுதைக் கழிக்கும் நிலமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த வாரமும் கிராமத்தில் புகுந்த காட்டு யானைகளால் இரண்டு வீடுகளைச் சேதமாக்கியுள்ளன.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் உள்ள பழம்பாசி கிராமத்தில், கடந்த ஒரு மாதமாக காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர். இரவு வேளைகளில் கிராமத்துக்குள் புகும் காட்டு யானைகள் விவசாயச் செய்கைகளை அழிப்பதுடன், பயன்தரும் மரங்களை அழித்து வருகின்றன. வீடுகளையும் சேதப்படுத்துகின்றன. இதனால் பொதுமக்கள் இரவு நேரங்களில் வீடுகளில் உறங்குவதற்கு அச்சத்தில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யானைகளிடம் பாதுகாப்பைப் பெற பாதுகாப்பான வேலிகளை அமைத்தும் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க)

# சுத்திகரித்த தண்ணீர் நிலையம் திறந்துவைப்பு

வவுனியா, செப். 11

வவுனியா, செட்டிகுளம் முகத்தான் குளப்பகுதியில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் நிலையம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

அமைச்சர் ரிசாத் பதியுதீனின் ஏற்பாட்டில் கிராம எழுச்சி வேலைத்திட்டத்தில் இது அமைத்துத் திறந்து வைக்கப்பட்டது.

குழாய்க்கிணறுமற்றும்குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டு தண்ணீர் விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

செட்டிகுளம் பிரதேச செயலர் சிவகரன், நகரசபை மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், மகளிர் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், கிராம அலுவலர், சமுர்த்தி அலுவலர் உட்படப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் கலந்துகொண்ட செட்டிகுளம் பிரதேச செயலர் சிவகரன் உரையாற்றுகையில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் நிலையங்கள் பல இடங்களில் திறக்கப்பட்டு வருகின்றன. அதில் 25 சதவீதமான பகுதியினரே சீராகக் குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலையங்களைப் பராமரிக்கின்றனர். பராமரிப்புச் செலவு மற்றும் அந்தப் பகுதி மக்களின் ஒற்றுமையற்றதன்மை அல்லது ஒத்துழைப்பின்மை என்பவற்றால் சுத்திகரிப்பு நிலையங்கள் கைவிடப்படுகின்றன. இதனால் பெருமளவில் நட்டம் ஏற்படுகிறது. இந்தநிலமை இனியும் தொடராத வகையில் மக்களின் பங்களிப்புடன் இந்தப் பகுதியிலுள்ள சகல மக்களும் குடிதண்ணீர் பெறும் வசதி தொடர்ந்து இருக்கவேண்டும் - என்றார். (து)

## தூக்குத்...

இந்தக் கருத்துக் கணிப்பு முன்னெடுக்கப்பட்டது. தொடுதிரையின் மூலம் மக்கள் வாக்களிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் வாக்களித்தவர்களில் 93.77 வீதமானோர் தூக்குத் தண்டனைக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். 6.23 வீதமானோர் தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் கடந்த 43 ஆண்டுகளாக தூக்குத்தண்டனை நடைமுறைப்படுத்தப்படவில்லை. தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்து வருகின்றனர். இந்த நிலையில் போதைப் பொருள் கடத்தல், வர்த்தகம் தொடர்பாகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு தண்டனையை நிறைவேற்ற வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தி வருகின்றார்.

அரச தலைவரின் இந்த முடிவுக்கு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இருந்து எதிர்ப்புக்கள் வெளிப்பட்டிருந்தன. மனித உரிமை அமைப்புக்கள் இந்த முடிவுக்குக் கடும் கண்டனம் வெளியிட்டிருந்தன.(எ)

## உயர்...

அரச தலைவர் தேர்தலுக்கான அறிவிப்பை எவ்வேளையிலும் வெளியிட முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் நேற்றுமுன்தினம் அறிவித்திருந்த நிலையில், அரச தலைவர் இத்தகைய விளக்கம் கோரலை உயர் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதேபோன்றதொரு விளக்கத்தை உயர் நீதிமன்றத்திடம் அரச தலைவர் கடந்த ஆண்டு கோரியிருந்தார். அவரது பதவிக் காலம் 5 ஆண்டுகள் என்று உயர் நீதிமன்றம் விளக்கமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## தேசிய...

வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வரலாற்றில் எமது தலைவர்கள் சகலரும் இன, மத வேறுபாடின்றி ஒருவருக்கு ஒருவர் ஒத்துழைப்புடனேயே செயற்பட்டனர். அதனூடாக அவர்களின் இலக்குகளை வெற்றிகொண்டார்கள். அதேவேளை நாம் 30 வருடப் போர்க் காலத்தை சந்தித்துள்ளோம். அதன் தொடர்ச்சியாக நாட்டை அபிவிருத்தி செய்யும் பணிகளே தற்போது இடம்பெற்று வருகின்றன. பாதைகளை அமைத்தல், கட்டடங்களை அமைத்தல் போன்ற பௌதிக அபிவிருத்திகள் கண்ணுக்கு புலப்படக்கூடியவை. அவ்வாறான அபிவிருத்தி பணிகள் பிரமாண்டமாக பார்க்கப்படக்கூடியவை. இவற்றுக்கு அப்பால் நாட்டின் அடையாளத்தை பாதுகாப்பதிலேயே எங்களின் முன்னேற்றம் தங்கியுள்ளது.

நாட்டின் அடையாளத்தை பாதுகாத்துக் கொண்டு, ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கு 5 வருடங்கள் போதாது. அடுத்து வரும் 5 வருடங்களிலும் அதற்காக செயற்பட்டால் மாத்திரமே தேசிய ஒற்றுமையை முழுமையாக கட்டியெழுப்ப முடியும்.

2015 ஆம் ஆண்டு அரசியல் தீர்வு பெற்றுக்கொடுப்போம் என்று வாக்குறுதி வழங்கியிருந்தோம். அது தொடர்பில் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன. அந்த விடயத்தில் தீர்வை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறையை நாமே உருவாக்கினோம். அதேபோன்று தற்போது அந்த முறையை ஒழிப்பதற்கும் எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (எ)

## விக்கிக்கு...

லமைச்சர், முன்னாள் நீதியரசர் என்ற வகையில் இந்த வழக்கு பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. (து-105)

## ஐ.தே.முவின்...

ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரி மாளிகையில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அரசுக்குள் எந்த முரண்பாடும் இல்லை. கட்சியின் ஜனநாயகத் தன்மை பேணப்படுவதாலேயே அதிக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால் அதை முரண்பாடாக மதிப்பிடப்படலாகாது. புதிய கூட்டணிக்கான கலந்துரையாடல்களை நிறைவு செய்து எதிர்காலத்தை நோக்கிப் பயணிப்போம் - என்றார். (எ)

## எரிபொருளின்....

தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சூப்பர் டீசல் விலை 2 ரூபா குறைக்கப்பட்டுள்ளது. அதன் விலை 132 ரூபாவாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஓட்டோ டீசல் விலை மாற்றமில்லாது தொடர்ந்து 104 ரூபாவாக உள்ளது.

நேற்று விலைச் சூத்திரத்தை அறிவித்த நிதியமைச்சு முதலில் ஒக்டேன் 92 ரகப் பெற்றோலின் விலை 2 ரூபாவால் குறைக்கப்படுகின்றது என்று அறிவித்தது. எனினும் சிறிது நேரத்திலேயே ஒக்டேன் 92 ரகப் பெற்றோலின் விலை 2 ரூபாவால் குறைக்கப்படவில்லை, ஒரு ரூபாவால்தான் குறைக்கப்பட்டுள்ளது என்று மீள அறிவித்தது. (எ)

## ஐ.தே.கவின்...

இந்தச் சந்திப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள அமைச்சர் சஜித் பிரேமதாச, சந்திப்பு திருப்திகரமாக அமைந்தது என்று கூறியுள்ளார். இன்னும் ஓரிரு நாள்களில் அரச தலைவர் வேட்பாளர் சர்ச்சை முடிவுக்கு வரும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் தேர்தல் நெருங்கிவரும் நிலையில் பிரதான கட்சிகள் தமது வேட்பாளர்கள் யார் என்பதைப் பெயரிட்டு வருகின்றனர். மகிந்த ராஜபக்ச தலைமையிலான சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் தேர்தல் வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச பெயரிடப்பட்டுள்ளார். மக்கள் விடுதலை முன்னணி அமைத்துள்ள கூட்டணியின் அரச தலைவர் தேர்தல் வேட்பாளராக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க பெயரிடப்பட்டுள்ளார். சிறிலங்கா சுதந்திரக் கட்சி தேர்தல் கூட்டணி தொடர்பாக சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் பேச்சில் ஈடுபட்டு வருகின்றது. இந்தநிலையில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் அரச தலைவர் தேர்தல்வேட்பாளர் தொடர்பாக முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவை அரச தலைவர் வேட்பாளராகக் களமிறக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர். ஒரு தரப்பினர் சபாநாயகர் கரு ஜயசூரியவை அரச தலைவராகக் களமிறக்க வேண்டும் என்று கோருகின்றனர். அதைவிடவும் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க களமிறங்க வேண்டும் என்ற கருத்துக்களும் வெளிவந்திருந்தன.

அரச தலைவர் வேட்பாளர் பெயரை அறிவிப்பதில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க காலம் தாழ்த்தி வந்த நிலையில், சஜித் பிரேமதாச தனது தேர்தல் பரப்புரைகளை ஆரம்பித்திருந்தார். அதனால் கட்சிக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. இந்தநிலையில் நேற்று ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோருக்கு இடையே சந்திப்பு ஏற்பாடுகியிருந்தது. இந்தச் சந்திப்பு அலரி மாளிகையில் நடைபெற்றது.

சந்திப்பில் இருவரும் தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்தினர் என்று அறியமுடிகின்றது. அரச தலைவர் வேட்பாளர் தொடர்பாக கட்சியின் மத்திய குழுவே முடிவு செய்ய வேண்டும், அதற்கு முன்னர் தனிநபரை முன்னிலைப் படுத்திப் பரப்புரைகளில் ஈடுபடுவது ஏற்புடையதல்ல என்று ரணில் விக்கிரமசிங்க சந்திப்பில் சுட்டிக்காட்டினார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அத்துடன் அரச தலைவர் தேர்தல் அறிவிப்பு வந்தபின்னரே வேட்பாளரை அறிவிக்க முடியும் என்றும் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச தலைவர் தேர்தலில் போட்டியிட முன்னர் அதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமை நீக்கம் உட்படப் பல விடயங்கள் தொடர்பாகக் கொள்கை வகுப்பட வேண்டும். வேட்பாளர் யார் இல்லை என்பதல்ல பிரச்சினை என்றும் ரணில் கூறியுள்ளார் என்றும் தெரியவருகின்றது.

கட்சியிலுள்ள பெரும்பான்மையினர் அரச தலைவர் வேட்பாளராகத் தான் களமிறங்குவதை விரும்புகின்றனர். அதனால் பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டன என்று சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டினார் என்றும் அறிய முடிக்கின்றது.

அதேவேளை, இந்தச் சந்திப்புத் தொடர்பில் சஜித் பிரேமதாச ஆதரவுத் தரப்பினர் திருப்தியடையவில்லை என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அவர்கள் இது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகளை ஆராயத் தீர்மானித்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (எ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், செப்.11
யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் 23 ஆண்டுகளாக தொடர்ச்சியாக நடத்தும் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தாச்சி சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின் ஒளியில் இடம்பெற்று வருகின்றன. இதில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (23)

---

யாழ்ப்பாணம்,செப்.11
மட்டுவில் வடக்கு மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'பி' பிரிவு அணிகளுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மட்டுவில் வடக்கு மோகனதாஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று புதன்கிழமைஇரவு 7மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மட்டுவில் வடக்கு மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சிறுப்பிட்டி கலைஒளி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

---

யாழ்ப்பாணம்,செப்.11
ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் 'ஏ' பிரிவு அணிகளுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன் கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து, புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)



19 வயதுப் பிரிவினருக்கான ரி-20 தொடரில்

# கிண்ணம் வென்றது யாழ். மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம், செப்.11
பிரித்தானியா தமிழ் துடுப்பாட்ட லீக்கின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 19 வயதுப் பிரிவினருக்கான ரி- 20 கடினப் பந்து துடுப்பாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 45 ஓட்டங்களால் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வியாஸ்காந் 27 ஓட்டங்களையும், விதுஷன் 22 ஓட்டங்களையும், இயல் அரசன் 16 ஓட்டங்களையும், ராஜ்கிளிங்ரன், சயன் ஆகியோர் தலா 15 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் டினோசன், இவோயன் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.
பதிலுக்குக் களமிறங்கிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 18 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 89 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 45 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. அணி சார்பில் சௌமியன் 19 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பந்து வீச்சில் நிதுஷன், பிரவின்ராஜ் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர். சிறந்த பந்து வீச்சாளர், ஆட்டநாயகனாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வீரர் நிதுசன் தெரிவானார். சிறந்த துடுப்பாட்டவீரர்,சகலதுறை ஆட்டக்காரராக யாழ்ப்பர்ணம் மத்திய கல்லூரி அணி வீரர் வியாஸ்காந் தெரிவானார். சிறந்த களத்தடுப்பாளராக சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர் பிரவீன் தெரிவு செய்யப்பட்டார். (23)

# ரைடர்ஸ் அணி வாகை

யாழ்ப்பாணம்,செப்.11
மன்னார் சுப்பர் லீக் ரி-20 துடுப்பாட்டத் தொடரில் மன்னார் ரைடர்ஸ் அணி 6 இலக்குகளால் வெற்றி பெற்றது.
தாழ்வுபாடு விளையாட்டு மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம் பெற்ற ஆட்டத்தில் மன்னார் பந்தர்ஸ் அணியை எதிர்த்து மன்னார் ரைடர்ஸ் அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய மன்னார் பந்தர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றது. இதில் திலீபன் 83 ஓட்டங்களையும், கரிபவன் 26 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் அனோசன் 4இலக்குகளையும், மில்ரன் 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.



பதிலுக்குக் களமிறங்கிய மன்னார் ரைடர்ஸ் அணி 14.3 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அணி சார்பில் அஜந்தன் 36 ஓட்டங்களையும், அன்ரன் 30ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் செல்வா, கரிபவன் ஆகியோர் தலா ஓர் இலக்குகளைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக மன்னார் ரைடர்ஸ் அணி வீரர் அனோசன் தெரிவு செய்யப்பட்டார். (23)

# சுப்பர் கிங்ஸ் அணி அசத்தலாட்டம்




யாழ்ப்பாணம்,செப்.11
மன்னார் சுப்பர் லீக் ரி-20 துடுப்பாட்டத் தொடரில் மன்னார் சுப்பர் கிங்ஸ் அணி 16 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.
தாழ்வுபாடு விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் சுப்பர் கிங்ஸ் அணியை எதிர்த்து மன்னார் பைட்ரஸ் அணி மோதியது.
இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மன்னார் சுப்பர் கிங்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பில் றோய் 43 ஓட்டங்களையும், கரிஸ் 18 ஓட்டங்களையும், நார்த்தீபன் 15ஓட்டங்களயும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் அகிலன், ஜெபநேசன், துசியந்தன் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.
பதிலுக்குக் களமிறங்கிய மன்னார் பைட்ரஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 136 ஓட்டங்களை மட்டும் பெற்று 16 ஓட்டங்களால் வெற்றியைத் தவற விட்டது. அணி சார்பில் துசியந்தன் 38 ஓட்டங்களையும், தனராஜ் 28 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் கீர்த்தன் 3 இலக்குகளையும், சூரி, கரிஸ் ஆகியோர் தலா 2இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக மன்னார் சுப்பர் கிங்ஸ் அணி வீரர் றோய் தெரிவானார். (23)

# தம்பட்ட முதலி அணி கிண்ணம் வென்றது

ஜாமியா விளையாட்டுக் கழகத்தின் 46ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு அணிக்கு 4 வீரர்கள் பங்குபற்றிய கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் தம்பட்ட முதலி அணி கிண்ணம் வென்றது.
மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட றஸூல் புதுவெளி கிராமத்திலேயே இந்தப் போட்டிகள் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இடம்பெற்றது.
இதன் இறுதிப் ஆட்டத்தில் பூவரசன்குளம் அணியை எதிர்த்து தம்பட்ட முதலி அணி மோதியது. இதில் தம்பட்ட அணி 24 : 17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்மித்தே வெற்றியை தட்டிப் பறித்தார்

## ரூட் கருத்து

நான்காவது ஆஷஸ் தொடரின் தோல்வியைத் தொடர்ந்து இங்கிலாந்து அணித் தலைவர் ஜோ ரூட் தெரிவித்த கருத்துக்கு ஆஸ்திரேலிய ஊடகம் பதிலடி கொடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்று முடிந்த இங்கிலாந்து அணிக்கு எதிரான ஆஷஸ் தொடரின் நான்காவது போட்டியில் ஆஸ்திரேலியா அணி 185 ஓட்டத்தால் வெற்றிபெற்று, தொடரில் 2:1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இந்த ஆஷஸ் தொடரைப் பொறுத்த வரையில் ஆஸ்திரேலிய அணிக்கு ஸ்டீவ் ஸ்மித்தின் சேவையை பொறுத்த வரையில் அளப்பரிய தொன்றாகவே காணப்படுகிறது.

இந்த நிலையில் இந்த தோல்வி குறித்து கருத்து தெரிவித்த இங்கிலாந்து அணித் தலைவர் ஜோ ரூட், இந்தத் தொடரில் பந்துவீச்சே பெரும் பங்கு ஆதிக்கம் செலுத்தியது. துடுப்பாட்டத்தில் ஸ்மித்தை எடுத்து விட்டால் இரு அணிகளும் கிட்டத்தட்ட ஒன்றுதான்.

ஸ்மித் இத்தகைய நிலையில் இருக்கும்போது அவருக்கு பந்து வீசுவது கடினமே. அவர் அளிக்கும் அனைத்து வாய்ப்புக்களையும் பயன்படுத்த வேண்டும், ஆனால் நாங்கள் இதுவரை அதைச் செய்ய வில்லை, இதற்கான விலையைக் கொடுத்து விட்டோம் - என்றார்.

ஜோ ரூட் விளக்கத்தில் திருப்தியடையாத ஆஸ்திரேலிய ஊடகம், அவருக்கு பதிலளிக்கையில் ஸ்மித் மட்டுமே வித்தியாசம் எனில் ஹசில்வுட், கம்மின்ஸ், லபுஷேன் ஆடவில்லையா? என்று கேள்வி எழுப்பியது.



# சங்கானை கிங்ஸ் 'ஏ' அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது

யாழ்ப்பாணம்,செப்.11

சங்கானை மக்கள் ஒன்றியம் நடத்திய அணிக்கு 7 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட 7 வீரர்கள் பங்கு பற்றும் மென்பந்து தொடரில் சங்கானை கிங்ஸ் 'ஏ' அணி கிண்ணம் வென்றது.

கடந்த வாரம் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சங்கானை கிங்ஸ் 'ஏ' அணியை எதிர்த்து வை.எம்.எச்.ஏ. அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சங்கானை கிங்ஸ் 'ஏ' அணி நிர்ணயிக்கப்பட்ட 7 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லகிஸ்காந் 44 ஓட்டங்களையும். சுஜீவன் 24 ஓட்டங்களையும் கண்ணா 8 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் சயந்தன் 2 இலக்குகளையும், ஜெயந்தன் ஓர் இலக்கையும் வீழ்த்தினார்.

பதிலுக்குக் களமிறங்கிய வை.எம்.எச்.ஏ. அணி நிர்ணயிக்கப்பட்ட 7 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 34 ஓட்டங்களை மட்டும் பெற்று 49 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. அணிசார்பில் சயந்தன் 10 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பந்து வீச்சில் கண்ணா 2 இலக்குகளைக் கைப்பற்றினார். (23)

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,செப்.11

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்துப்படும் தலைவர் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் தவாடி காளி அம்பாள் விளையாட்டுக்கழக அணிக்கும் கலைவாணி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான காலிறுதியாட்டத்தில் தவாடி காளிஅம்பாள் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்கு முன்னேறியது.

அண்ணா விளையாட்டுக் கழக அணிக்கும் மகாத்மா விளையாட்டுக் கழகஅணிக்கும் இடையிலான காலிறுதியாட்டத்தில் இரு அணிகளும் ஆட்ட நேரமுடிவில் எந்த வித கோல்களையும் பதிவு செய்யாது போக ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப் பட்டது. இதில் அண்ணா விளையாட்டுக் கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழக அணிக்கும் மாவத்தை விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான காலிறுதியாட்டத்தில் இரு அணிகளும் ஆட்ட நேரமுடிவில் தலா இரண்டு கோல்களைப் பதிவு செய்ய ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத்தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் மாவத்தைவிளையாட்டுக் கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

நவாலி சென்.பீற்றேஸ் விளையாட்டுக்கழக அணிக்கும், விளான் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான காலிறுதியாட்டத்தில் நவாலி சென். பீற்றேஸ் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (23)

# ஆணழகன் போட்டியில் மன்னார் 3ஆம் இடம்

யாழ்ப்பாணம், துரையப்பா விளையாட்டரங்கில் மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் முதன்முறையாக இடம்பெற்ற ஆணழகன் போட்டியில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த அலன் சொய்சா, லியோன் ஜோயல் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

யாழ்ப்பாணம், துரையப்பா விளையாட்டரங்கில் வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட வடக்கு மாகாண மெய்வன்மைப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

குறித்த விளையாட்டு நிகழ்வில் ஆணழகன் போட்டியில் முதன்முறையாக மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்து 65-70 எடைப் பிரிவில் அலன் சொய்சா, 75-80 எடைப்பிரிவில் ஜோயல் ஆகியோர் வெண்கலப் பதக்கத்தை பெற்று, மாவட்டங்களின் அடிப்படையில் 3ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (60)





## ஆணழகன் போட்டியில்

# வவுனியாவுக்கு 2 பதக்கங்கள்

யாழ்ப்பாணம், துரையப்பா விளையாட்டரங்கில் மாகாண விளையாட்டுத்திணைக்களத்தின் ஏற்பாட்டில் முதன்முறையாக இடம்பெற்ற ஆணழகன் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பிரதீபன் வெள்ளிப்பதக்கத்தையும், ஸ்ரீவீரகன் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

யாழ்ப்பாணம், துரையப்பா விளையாட்டரங்கில் வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக் களத்தால் நடத்தப்பட்ட வடக்கு மாகாண மெய்வன்மைப் போட்டிகள் கடந்த சனி,ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெற்றது.

குறித்த விளையாட்டு நிகழ்வில் ஆணழகன் போட்டியில் முதன் முறையாக வவுனியா மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்து 50-55 எடைப் பிரிவில் பிரதீபன் வெள்ளி பதக்கத்தையும், 55-60 எடைப் பிரிவில் ஸ்ரீவீரகன் வெண்கல பதக்கத்தையும் பெற்று மாவட்டங்களின் அடிப்படையில் 2ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜயோதா**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1602 சீட்டிழுப்பு திகதி 10.09.2019
வெற்றி இலக்கங்கள்: 40 47 50 67 0
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ.37, 285, 892/=

**SUPER BALL**
சீட்டிழுப்பு வாரம் 1038
சீட்டிழுப்பு திகதி 2019.09.09 திங்கட்கிழமை
O 17 30 43 60
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 74,767,936/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**அத கோடிபதி** ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 727
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.09.10
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 88,542,040/-
வெற்றி இலக்கங்கள்: 13 48 51 71 S
விசேட வெற்றி இல. 9710

**ராசி அதிர்ஷ்டம்**
திகதி 10.09.2019 வெற்றி வாரம் 2613 வர்ணம் சிகப்பு
மீனம்
வெற்றி இலக்கங்கள்: 15 36 40 50
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,852,632/=
11.09.2019 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## வேலையாள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் வியாபார ஸ்தாபனம் ஒன்றுக்கு அப்பகுதிக்கு அண்மையில் உள்ளவர்கள், வயதெல்லை 19 - 23 வரை மற்றும் க.பொ.த உயர்தரம் சித்தியடைந்த ஆண்கள் மட்டும் கணினி தரவுகள் பதிவதற்கு எதிர்பார்க்கப் படுகின்றார்கள்.


**அடிப்படைச் சம்பளம் - 18,000/=**
தொடர்புகொள்ளவேண்டிய நேரம்
காலை 9.00 - 11.00 வரை.
(CS 27879)(04.17)

**077 663 6384**

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை பரராசசிங்கம்

[அரச ஒப்பந்தக்காரரும் அகில இலங்கை சமாதான நீதவானும்]



களபூமி காரைநகரைப் பிறப்பிடமாகவும், சின்னாலடி காரைநகர் மற்றும் 448,மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை பரராசசிங்கம் (09.09.2019) திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை-சவுந்தரம் தம்பதியினரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் பராசக்தியின் (ஆசிரியை- யாழ். இந்து மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், நந்தகுமார் (சுகாதார வைத்திய அதிகாரி- ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர்), சுகந்தினி (கணினி மென்பொறியியலாளர்), சந்திரகுமார் (ஊடகவியலாளர்- "சமூகம்" ஊடக நிறுவனம்), இந்திரகுமார் (உள்ளகமருத்துவர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சதீஸ்குமார் (கணினி மென்பொறியியலாளர்- இங்கிலாந்து), சாலினி (மருத்துவர்- பிரதேச வைத்தியசாலை, மானிப்பாய்), ஜெயசித்திராதேவி (தாதிய உத்தியோகத்தர்- யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் அரவிந்த், அபிநயா, சிவாஞ்சலி, சிவகீதன் ஆகியோரின் அன்பு பேரனும் துரைராசசிங்கம் (அமெரிக்கா), பகவத்சிங்கம் (முன்னாள் மாவட்ட உணவுக் களஞ்சியப் பொறுப்பாளர்) காலஞ்சென்ற சிவசக்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.09.2019) வியாழக்கிழமை காலை 8மணிக்கு இல.448, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10மணிக்கு கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.
cs27974(16/17)

448,மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9303
தகவல்: குடும்பத்தினர்

# ரி-20 போட்டிகளில் ஆடிய அனுபவம் அணித் தலைவர் பதவிக்கு கைகொடுக்கும்

## பொல்லார்ட் நம்பிக்கை

உலகம் முழுவதும் நடத்தப்படும் ரி-20 போட்டிகளில் விளையாடிய அனுபவம், மேற்கிந்தியத்தீவுகளின் அணித் தலைவர் பதவியில் சிறப்பாக விளையாட கைக்கொடுக்கும் என பொல்லார்ட் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் ஒருநாள் மற்றும் ரி-20 அணித் தலைவராக அதிரடி துடுப்பாட்ட வீரர் பொல்லார்ட் நேற்றுமுன்தினம் நியமிக்கப்பட்டார். இவர் உலகளவில் நடைபெறும் பெரும்பாலான ரி-20 லீக் ஆட்டங்களில் விளையாடி வருகிறார். அந்த அனுபவம் அணித் தலைவர் பதவியில் சிறப்பாக விளையாட கைக்கொடுக்கும் என தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

வருங்கால உலகக் கிண்ணத்துக்கான அணியை நாங்கள் உருவாக்குவதற்காக பயிற்சியாளர்கள் மற்றும் வீரர்களுடன் இணைந்து பணிபுரிய காத்திருக்க முடியாது. நான் உலகளவில் நடைபெற்ற பெரும்பாலான ரி-20 போட்டிகளில் விளையாடியுள்ளேன். அந்த அனுபவம் மேற்கிந்தியத்தீவுகள் அணித் தலைவர் பதவியில் சிறப்பாகச் செயற்பட கைக்கொடுக்கும் என நம்புகிறேன். `அணித் தலைவராக என்னுடைய தற்போதைய குறுகிய கால குறிக்கோள் 2020 உலகக் கிண்ணம்தான்– என்றார்.

பொல்லார்ட் ஒருநாள் போட்டியில் இறுதியாக 2016 ஆம் ஆ[illegible]டு விளையாடிள்ளார். சமீபத்தில் இந்தியாவுக்கு எதிரான ரி-20 தொடரில் மூன்று போட்டிகளில் 115 ஓட்டங்களைப் பெற்றார்.

**வாடகைக்குண்டு**
யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் கடை வாடகைக்கு உண்டு.
077 429 7149

**விற்பனைக்குண்டு**
யாழ்.கொழும்பு வழித்தட அனுமதிப்பத்திரத்துடன் இரண்டு அதி சொகுசு பஸ்கள் விற்பனைக்குண்டு.
077 429 7149

**வாடகைக்குண்டு**
கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் கடை வாடகைக்கு உண்டு.
077 429 7149

**வீடு விற்பனைக்கு**
உக்குளாங்குளம், வவுனியா 1 ஆம் ஒழுங்கையில் வீதிக்கருகில் நான்கு பக்கமும் மதிலுடனான 2 1/4 பரப்பு நவீனரக புத்தம் புதிய வீடு (உறுதியுடனான) விற்பனைக்குண்டு.
077 945 7705, 071 023 2288, 077 615 2992

**காணி விற்பனைக்கு**
புங்கன்குளம் றோட்டில் அமைந்துள்ள 4 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
**0774241474**

**புதியபிரிவுகள் ஆரம்பம்**
வங்கியியல் கற்கை நெறிகள்
**Banking Courses**
**IABF & DABF**
(Tamil & English Medium)
Qualification : G.C.E. O/L 6 Passes with 5 credits including Maths.

கணக்காளர் கற்கை நெறிகள்
**Chartered Accounting Courses**
Business Level I
(Tamil & English Medium)
Qualification : G.C.E. A/L 3 Passes

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
**aat Srilanka**
(AA1, AA2, AA3)
Qualification : G.C.E. O/L 6 Passes
Medium : Tamil & English

**Certificate course in English**
19 Batches have successfully completed the course. Register your names.

Further Details:
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
021 2223382/ 021 222 9149
(JN 11232) (04.17)

# இலங்கை வீரர்களை குழப்பியது இந்தியாதான்

## பாக். அமைச்சர் குற்றச்சாட்டு

பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம்மேற்கொண்டால்ஐ.பி.எல். போட்டிகளில் இடமளிக்கமாட்டோம்என இந்தியா-இலங்கை வீரர்களை அச்சுறுத்தியது என பாகிஸ்தானின் விஞ்ஞான மற்றும் தகவல்தொழில்நுட்ப அமைச்சர் பாவட் சௌத்திரி தெரிவித்துள்ளார்.

தனது ருவிற்றர் பக்கத்தில் இலங்கை அணி பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்வதை கைவிடவேண்டும் அல்லது ஐ.பி.எல். போட்டிகளில் இலங்கை வீரர்களுக்கு இடமளிக்கமாட்டோம் என இந்தியா மிரட்டியது என கிரிக்கெட் விவகாரங்கள் குறித்து நன்கு அறிந்த வர்ணனையாளர் ஒருவர் தனக்கு தெரிவித்தார் என அந்த அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 27ஆம் திகதி முதல் இலங்கை அணி பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் போட்டி, ரி-20 போட்டிகளில் விளையாடத் திட்டமிட்டு இருந்தது. இதற்கான வீரர்களும் இலங்கை அணி நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டனர்.

ஆனால், திடீரென இலங்கை கிரிக்கெட் அணியில் உள்ள 10 வீரர்கள் பாகிஸ்தானுக்குச் சென்று விளையாட முடியாது எனக்கூறி தொடரைப் புறக்கணித்தனர்.

பாகிஸ்தானில் ஏற்கெனவே பாதுகாப்பற்ற சூழலில் சிக்கியதை நினைவு கூர்ந்த வீரர்கள். இந்தத் தொடரில் இருந்து தாங்கள் விலகிக்கொள்வதாகத் தெரிவித்தனர். இது தொடர்பாக இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரிகள் வீரர்களிடம் பேச்சு நடத்தியும், அவர்கள் சம்மதிக்கவில்லை.

இந்தப் பயணத்தில் இருந்து லசித் மலிங்கா, நிரோஷன் டிக்வெலா, குஷான் ஜெனித் பெரேரா, தனஞ்சயா டி சில்வா, திசாரா பெரேரா, அகில தனஞ்சயா, அஞ்சலோ மத்யூஸ், சாரங்கா லக்மால், தினேஷ் சந்திமல், திமுத் கருணாரத்னே ஆகியோர் விலகிக் கொள்வதாகத் தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உதவி கணக்காளர் Book Keepers தேவை

இங்கிலாந்தை (U.K) தலைமை காரியாலயமாக கொண்ட **Accounting Firm** யாழ்ப்பாணத்தில் கிளை நிறுவனம் ஒன்றை தொடங்க உத்தேசித்துள்ளது. இதற்கு கீழ்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

01. உதவி கணக்காளர் - B.Sc/CIMA/ ACCA/ CA (Srilanka) Partqualified
02. கணக்கு பதிவாளர் - (Book Keepers) - O/L Passsed

- தொடக்க U.K. Accounting பயிற்சி வழங்கப்படும்
- கணினி அனுபவம் (Ms Office)
- முன்னனுபவம் விரும்பத்தக்கது
- சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

(cs.27960) (13.17)

ஆர்வமுள்ளோர் தங்கள் "CV" இனை
**paru20ran@gmail.com**
எனும் மின்னஞ்சலுக்கு **15.09.2019** இற்கு முன்னர் அனுப்பவும்
**076 006 8659**
காரியாலய இடம்: **Jaffna Town**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.09.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.